REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/Thinakaran.lk /ThinakaranLK

2023 ஒக்டோபர் 27 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

තිනකරන්

வரு. 91 இல. 255 | Friday 27, October, 2023 | 24 பக்கங்கள் | 50/-

## பூநகர் சிவன்கோவில் பூசகர் கோர விபத்தில் பலி

**ரொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை மட்டக்களப்பு பிரதான வீதி பூநகர், 20 ஏக்கர் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், பூநகர் சிவன் கோவில் பூசகர் பலியாகியுள்ளார். இவ்விபத்து நேற்று (26) இடம்பெற்றுள்ளது.

ஈச்சிலம்பற்றிலிருந்து சேருநுவர நோக்கி சென்று கொண்டிருந்த 06

## ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் பங்குகளுக்கு விலை மனு



ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமான நிறுவனத்தின் பங்குகளை வழங்குவதற்கு விலை மனுக்கள் கோரப்படுமென துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பங்குகளை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்களை சர்வதேச நிறுவனங்கள் சமர்ப்பிக்கலாமென்றும், இச்செயல்முறை 06

### பிரமிட் முறை கொடுக்கல் வாங்கல்

## ஒன்மெக்ஸ் பணிப்பாளர் மூவரின் ரூ 9 கோடி சொத்து விற்பனைக்கு தடை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சட்ட விரோதமாக பிரமிட் முறை கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படும் ஒன்மெக்ஸ் டீடி தனியர் நிறுவன பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் சொத்துக்களை விற்பனை செய்தல் மற்றும் கைமாற்றுவதற்கு கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.இச்சபை உறுப்பினர்கள்

மூவருக்குச் சொந்தமான ஒன்பது கோடி ரூபா பெறுமதியுடைய மாடி வீடு மற்றும் ஹோட்டல் உள்ளிட்ட 06

## சிறு, மத்தியதர மக்களுக்கென கொழும்பில் 05 வீட்டுத் திட்டங்கள்

### சீன அரசுடன் ஜனாதிபதி இணக்கப்பாடு



சிறு மற்றும் மத்தியதர மக்களுக்காக கொழும்பு நகரத்தில் 05 வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்தார். இதற்கான இணக்கப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீன அரசாங்கத்துடன் செய்துள்ளாரென்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் வீடமைப்பு அதிகார சபையில் தடைப்பட்ட திட்டங்களை, மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (26) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ மேற்கண்டவாறு 06

## முன்னாள் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல காலமானார்

**ஸாதிக் ஷிஹான்**



இலங்கையின் 16ஆவது இராணுவத் தளபதியான ஜெனரல் லயனல் பலகல்ல காலமானார். சுகயீனம் காரணமாக கொழும்பு, நாரஹேன்பிட்டியிலுள்ள இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை 06

## மின்சாரம், மின் போக்குவரத்து சர்வதேச கண்காட்சி மாநாடு

### 2024 மார்ச் மாதம் நடத்த முடிவு

உலக போக்குவரத்து தினத்துடன் இணைந்து (2023) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட (Green mobility exhibition and conference) கண்காட்சி மற்றும் மாநாடு நவம்பர் 10,11,12 திகதிகளில் ஹோமாகம பிடிபன பிரதேசத்தில் நடத்துவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டது. 06

## சிவனொளிபாத யாத்திரை டிச.26 இல், ஆரம்பம்



வருடாந்த சிவனொளிபாத மலை யாத்திரை காலம் டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

சிவனொளிபாத மலை விஹாராதிபதி, சப்ரகமுவ பிரதம சங்கநாயக்கர் மற்றும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக வேந்தர் வணக்கத்துக்குரிய பெங்கமுவே ஸ்ரீ தம்மதின்ன தேரரின் வழிகாட்டலின் கீழ், இந்த யாத்திரை ஆரம்பமாகிறது.

பாரம்பரிய சம்பிராதயங்கள் மற்றும் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டு இந்த யாத்திரை ஆரம்பமாகுமென புத்தசாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்பொத்தவல சிவனொளிபாத மலை விகாரையிலிருந்து சிவனொளிபாத மலை 06

# சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு அமைச்சர் கொழும்புக்கு அழைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சுகாதாரத் துறையில் தற்போது நிலவும் சிக்கல்களுக்கு விரைவான தீர்வை பெற்றுக் கொள்ளும் நோக்கில் பேச்சுவார்த்தை நடத்தி புதிய திட்டம் ஒன்றை தயாரிப்பதற்காக அனைத்து மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்கள், வைத்திய சாலைகளின் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளை இன்று கொழும்புக்கு அழைப்பதற்கு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தீர்மானித்துள்ளார்.

மருந்துகளுக்கான தட்டுப்பாடு, டாக்டர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளமை உள்ளிட்ட சுகாதாரத் துறையில் நிலவும் பல்வேறு சிக்கல்களுக்கு விரைவான தீர்வை பெற்றுக் கொள்வதே இந்த பேச்சுவார்த்தையின் நோக்கமாகும்.

பிரதான வைத்தியசாலைகள் உட்பட பிரதேச வைத்தியசாலைகளில் நிலவும் டாக்டர்கள், தாதியர்கள் உள்ளிட்ட ஏனைய ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் நிலவும் கட்டடங்களின் பராமரிப்புக்கான தொழில்நுட்ப அதிகாரிகளை இணைத்துக் கொள்ளுதல், நிலவும் பொருளாதார நெருக்கடியில் நிதியை முகாமைத்துவம் செய்து சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல், புதிய தரவுத் தொகுதியில் நிலவும் தொழில்நுட்ப சிக்கல்களுக்கு விரைவான தீர்வு கண்டு அதனை சேவையில் இணைத்துக் கொள்ளுதல், டெங்கு நுளம்பு பரவலை கட்டுப்படுத்தல், அதற்காக மேற்கொள்ள வேண்டிய முறைமை மற்றும் நுளம்பு உருவாகும் இடங்களை இனம் கண்டு அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல், தாய் சேய் போசணை தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், ஆரம்ப சுகாதார சேவையை மேம்படுத்தல், வைத்தியசாலைகளில் காணப்படும் எம்.ஆர்.ஐ, சி.டி ஸ்கேன் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களில் நிலவும் சிக்கல்களை நிவர்த்தி செய்து விரைவாக நோயாளர்களுக்கான சிகிச்சைகளுக்காக அதனை இணைத்துக் கொள்ளுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன் போது கவனம் செலுத்தப்படவுள்ளன.

அத்துடன் வெளிநாடுகளில் பயிற்சிக்காக மற்றும் தொழில் வாய்ப்புக்காக சென்றுள்ள டாக்டர்கள் உள்ளிட்ட சுகாதாரத்துறையினரின் இடத்திற்கு உரியவர்களை இணைத்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் தொடர்பில் ஆராய்தல், ஆஸ்பத்திரிகளில் மின்சாரம் மற்றும் நீர் கட்டணம் செலுத்துவது தொடர்பில் ஆராய்தல், தொற்றுநோய் மற்றும் தொற்றா நோய் ஆகியவற்றை கட்டுப்படுத்தும் வகையில் மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல், நோயாளர்களை இனங்காணும் வேலைத் திட்டத்தினை முன்னெடுத்தல் மற்றும் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்களை முறையாக முன்னெடுப்பதற்காக ஊழியர்களை இணைத்துக் கொள்ளுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன் போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

புதிய சுகாதார அமைச்சர் பதவி ஏற்பதற்கு முன்பதாக முன்னாள் சுகாதார அமைச்சரின் காலத்தில் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டாலும் அந்த பேச்சு வார்த்தைகளில் 06

## தமிழ் மொழியில் பாடசாலை கீதங்கள் அமைய வேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து



மாணவர்கள் இலகுவாக புரிந்து கொண்டு பின்பற்றக்கூடிய வகையில் பாடசாலை கீதங்கள் மாற்றப்பட வேண்டுமென வலியுறுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மத்திய கல்லூரியின் கீதம் தமிழ் மொழிக்கு மாற்றப்படுவதுடன் ஏனைய தமிழ் மொழி 06

## எரிபொருள் உட்பட சேவைகளை பெற மட்டுமே ஷி யான் 06, அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஷி யான் 6 சீன சமுத்திரவியல் ஆய்வுக் கப்பல் எரிபொருள் உள்ளிட்ட தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மட்டுமே கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்துள்ளதாகவும் இதற்கான அனுமதியையே அரசாங்கம் வழங்கியுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஷி யான் சீன சமுத்திரவியல் ஆய்வு கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இக்கப்பல் நாளை மறுதினம் (08) வரை கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட அனுமதி 06

## கல்வி அமைச்சு முன் ஆர்ப்பாட்டம்; அதிபர், ஆசிரியர்களிடம் அமைச்சு கவலை தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் பத்தரமுல்லையில் கல்வி அமைச்சுக்கு முன்பாக மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின்போது, அவர்கள் எதிர் நோக்க நேர்ந்த அசௌகரியங்கள் தொடர்பில் கவலை தெரிவிப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் தமது கவலையையும் வெளியிட்டுள்ளது.

அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து கடந்த 06

## ஒன்லைனில் கட்டண வசதி



உள்ளூராட்சி மன்றங்களுக்கான வரிகளை 2024 முதல் ஒன்லைன் முறையில் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது. இந்நிலையில், இது தொடர்பான வேலைத்திட்டங்களை ஏற்கனவே பல உள்ளூராட்சி மன்றங்கள் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் உள்ளூராட்சி மன்றங்களின் வரி அறவீடு மற்றும் நடவடிக்கைகள் 06

## வீதி விபத்துக்கள்; பத்து மாதங்களில் 115 சிறுவர் பலி

### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வாகன விபத்து அனர்த்தங்களில் இவ்வருடத்தின் இது வரையான காலப்பகுதியில், 115 சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல இது தொடர்பில் தெரிவித்துள்ளார். இவ்வருடத்தின் ஜனவரி மாதம் 01 முதல் ஒக்டோபர் மாதம் 15 வரையான காலப்பகுதியில் 115 சிறுவர்கள் வீதி விபத்துக்களால் உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சாரதிகளின் கவனயீனம், பாதுகாப்பற்ற வாகன செலுத்தல்க ளாலே,இவ் விபத்துக்கள் ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,2022 இல் 2,539 வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளன. அதேவேளை இம்மாதம் 15 வரையான இவ்வருடத்தில் 1,790 வாகன 06

## Milco தலைவர் உட்பட பணிப்பாளர் சபையை அடைத்து வைத்த சம்பவம்

### 13 ஊழியர்கள் பொலிஸாரால் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மில்கோ நிறுவனத்தின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்களை கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரதான அலுவலகத்தில் அடைத்து வைத்த குற்றத்துக்காக, அந்நிறுவன ஊழியர்கள் 13 பேரை கைது செய்துள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நிறுவனத்தின் தலைவர் ரேணுக பெரேரா உள்ளிட்ட பணிப்பாளர் சபையினர் கடமையிலிருந்தபோது, திடீரென ஆறாம் மாடியில் அடைத்து வைக்கப்பட்டனர்.

சிலர் சம்பள முரண்பாட்டை காரணமாக வைத்தே இவர்களை தொழிற்சங்க பிரதிநிதிகள் அடைத்து வைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.இது தொடர்பில் மில்கோ நிறுவனத்தின் தலைவர் கொள்ளுப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். இதற்கமைய உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸார், சம்பந்தப்பட்ட 13 பேரை சந்தேகத்தின் 06

## 25 வயதைக் கடந்த 04 பேரில் ஒருவருக்கு பக்கவாத நோய்

### மரணமடைவோரின் எண்ணிக்கையும் அதிகரிப்பு – விசேட மருத்துவ நிபுணர் ஷெரின் பாலசிங்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் பக்கவாத நோயினால் பாதிப்புறுவோரின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக, அந்நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணரும் தேசிய பக்கவாத சங்கத்தின் தலைவருமான ஹர்ஷ குணசேக்கர தெரிவித்துள்ளார்.

நாட்டில் 25 வயதை கடந்துள்ள நான்கு பேரில் ஒருவர், இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் அல்லாத நோய்கள் தொடர்பான பணிப்பாளர் அலுவலகத்தின் விசேட மருத்துவ நிபுணர் ஷெரின் பாலசிங்கம் இது தொடர்பில் 06

## துறைமுக நகர E.C.சட்ட ஒழுங்கு விதிகளுக்கு கோப் அங்கீகாரம்

### 02 க்ரிப்டோகரன்சிக்கும் அனுமதி



கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளுக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2021ம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் 2339/31ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிக்கு, அரசாங்க நிதி பற்றிய குழுவில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

கொழும்பு துறைமுக நகரில் செயற்படும் மட்டத்தில் காணப்படும் பத்து வணிக நிறுவனங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இந்த நிறுவனங்களை ஒப்பந்தம் செய்து கொள்வது குறித்துக் காணப்படும் பிரச்சினை பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது. இந்த நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டபோது 06

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



## சர்வதேச வர்த்தக அலுவல்கள் பணியகம்

# வெளிநாடுகளுடனான வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்து பேச்சுக்கள்



அமைச்சரவை அனுமதியுடன் ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நிறுவப்பட்டிருக்கும் சர்வதேச வர்த்தக அலுவல்கள் பணியகம் வெளிநாடுகளுடனான வர்த்தக பொருளாதார ஒப்பந்தங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகிறது .

தேசிய வர்த்தக பேச்சுவார்த்தைக் குழுவான NTNC இன் வழிநடத்தலுடன் நிதி அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, சட்ட மாஅதிபர் திணைக்களம், வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகளுக்கான திணைக்களம், வணிக திணைக்களம், சுங்கத் திணைக்களம், முதலீட்டுச் சபை உள்ளிட்ட நிறுவன சிரேஷ்ட அதிகாரிகள் இத்தேசிய வர்த்தகப் பேச்சுவார்த்தைக்கான குழுவில் அங்கத்துவம் பெற்றுள்ளனர்.

உரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய 11 உப குழுக்கள், வர்த்தகப் பேச்சுவார்த்தைகளூடாக பங்குதாரர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு தேசிய வர்த்தக பேச்சுவார்த்தை குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

அரசாங்கத்தின் 2048 ஆம் ஆண்டில் அபிவிருத்தி அடைந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஆரம்பமாக மேற்படி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் உள்நாட்டு பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் போது, விநியோக கொள்ளளவைப் பலப்படுத்துவது, சந்தை பிரவேசம் ஆகிய விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இலங்கையின் சம்பிரதாயபூர்வமான மிகப்பெரிய இறக்குமதியாளர்களாக அமெரிக்கா, ஐக்கிய இராஜ்ஜியம், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுடனான தொடர்புகளைப் பலப்படுத்திக்கொள்ளும் அதேநேரம் தெற்கு, தென்கிழக்கு, மேற்கு ஆசியாவுடனான ஒருங்கிணைந்த வேலைத் திட்டங்களை விரிவுபடுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல் இலங்கையின் பொருட்கள் வியாபாரம் தொடர்பில் கவனம் செலுத்தி, இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தமான (ISLFTA) பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தமான (PSFTA) ஆகியவற்றை கைச்சாத்திட எதிர்பார்க்கப்படுகிறது.

தெற்காசியாவின் சுதந்திர வர்த்தக வலயம் (SAFTA) மற்றும் வலயத்தின் ஒத்துழைப்புக்கான தெற்காசியச் சங்கம் (SAARC) ஆகியவற்றுடனான ஏற்றுமதியை இலக்குவைத்த வர்த்தக ஒப்பந்தங்கள் ஊடாக, இலங்கை தெற்காசியாவின் வர்த்தக சந்தைக்குள் பிரவேசித்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பேச்சுக்கள் தற்போது மூன்று சுற்றுகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை மற்றும் பங்களாதேஷிடத்தில் முன்னேற்றகரமான வர்த்தக நிலைமைகள் காணப்படுவதால், தற்போதுள்ள ஒப்பந்தங்களுக்கு மாறான இருதரப்பு வர்த்தகத்தை முன்னேற்றிச் செல்லும் ஒப்பந்தமாக இது அமைந்திருக்கும்.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் கைசாத்திடப்படவுள்ள உத்தேச பொருளாதார மற்றும் தொழினுட்ப ஒப்பந்தமான (ETCA) தொடர்பிலான 12 ஆவது சுற்றுப் பேச்சு எதிர்வரும் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## களுத்துறை பிரதேச அரசியல் கட்சி

# காரியாலயமொன்றில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி தயாரிப்பு நிலையம்

## பொலிஸார் சுற்றிவளைப்பு; ஒருவர் கைது



(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

களுத்துறையில் அரசியல் கட்சியொன்றின் காரியாலயம் அமைந்துள்ள வீட்டின் நிலத்துக்கடியில் பங்கர் அமைத்து சூட்சுமமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்டவிரோத கசிப்பு தயாரிப்பு நிலையமொன்றை களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவின் பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் அக்கட்சியை சேர்ந்த பிரதேச சபை வேட்பாளர் ஒருவரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இந்த நபர் மேற்படி கட்சியின் பிரதேச வட்டாரத்துக்கான உள்ளூராட்சி தேர்தல் வேட்பாளர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. களுத்துறையில் பிரதான பாடசாலையொன்றை அண்மித்த பகுதியில் அமைந்துள்ள மேற்படி வீடு, முப்பதாயிரம் ரூபா மாதாந்த கூலிக்கு பெறப்பட்டு முச்சக்கர வண்டி பழுதுபார்க்கும் நிலையமாக பாசாங்கு காட்டி சட்டவிரோத கசிப்பு நிலையம் நடத்தப்பட்டு வந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. கசிப்பு உற்பத்திக்கான உபகரணம், பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

களுத்துறை வடக்கு பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



# இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழக புதிய உறுப்பினர்கள் தெரிவு

எழுத்தாளரும் ஆய்வாளருமான டாக்டர் அபூபக்கர் அவர்களால் மிக நீண்ட காலத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகத்தினை மீளுருவாக்கம் செய்வது குறித்த கலந்துரையாடல் டாக்டர் அபூபக்கரின் புதல்வர் டாக்டர் எம். ஏ.எம் முனீர் தலைமையில் அண்மையில் அவரது பம்பலப்பிட்டி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது டாக்டர் அபூபக்கரின் வெளிவரா நூல்களை வெளியிடுவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்வதெனவும் அவர் பற்றிய நூல் ஒன்றினை வெளியிடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது. அத்துடன் வேறு இலக்கிய முயற்சிகளைச் செய்வது பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

இந்த உரையாடலில் டாக்டர் அபூபக்கரின் மனைவி, பிள்ளைகளுடன் அவரது உறவினர்களும் கலந்துகொண்டு கருத்துப் பரிமாற்றம் செய்தனர்.

டாக்டர் எம்.ஏ.எம். மொஹமட் முனீர் தலைவராகவும் திருமதி. முனீரா அபூபக்கர் செயலாளராகவும் இம்ரான் நைனார் பொருளாளராகவும் அறிவிக்கப்பட்டதுடன் குடும்ப அங்கத்தவர்கள் அடங்கிய நிர்வாகக் குழுவொன்றும் அமைக்கப்பட்டது. கலகத்தின் போஷகராக அஷ்ரப் ஷிஹாப்தீன் தெரிவுசெய்யப்பட்டார்.



இலங்கைக்கான பலஸ்தீன நாட்டுத்தூதுவர் ஸுஹைர் முஹம்மத் ஹம்துல்லாஹ் ஸைத் அவர்களை ஜம்மிய்யதுஷ் ஷபாப் (AMYS ) நிறுவன பணிப்பாளர் எம்.எஸ்.எம் தாஸீம் மற்றும் பிரதிப் பணிப்பாளர் ஏ.ஜே.எம் வாரித் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடியபோது எடுத்த படம்.



திஹாரிய பாதிஹ் கல்வி நிறுவனத்தில் மாணவர் கல்வி முகாம் இறுதிநாள் நிகழ்வில் மாணவர்களின் கண்காட்சியொன்றும் திறந்து வைக்கப்பட்டது. நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி அஷ்ஷெய்க் ஏ. நயீம் (நளீமி) தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விசேட அதிதியாக கலந்து கொண்ட அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொதுச்செயலாளர் அஷ்ஷெய்க் அர்க்கம் நூராமித் மற்றும் விசேட அதிதியாக கலந்து கொண்ட அல்ஹிமா இஸ்லாமிய அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ் (நளீமி) ஆகியோர் மாணவர்களுக்கு பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

காட்டு யானையின் தாக்குதலில் படுகாயமடைந்த நபர் ஒருவரை சிகிச்சைக்காக வேண்டி அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்ததன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் (25) தெரிவித்தனர்.

கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் பிரிவின் சமாதிகம பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சீப்புக்குளம சமாதிகம பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 39 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, உயிரிழந்த நபர் தனது வீட்டுக்கு பின்புறமாக தேவை நிமித்தம் சென்றபோதே யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என்பது மேலும் தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பு ஸாஹிராவில் நாளை தமிழ்தின நிகழ்வு

கொழும்பு, ஸாஹிராக் கல்லூரி தமிழ் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'தமிழ்த்தினம் 2023' வைபவம் நாளை 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியின் அப்துல் கபூர் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவில், தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் எம்.ஏ.எம். ரமீஸ் பிரதம அதிதியாகவும் உதவி கல்விப்பணிப்பாளர் எம்.எச். மும்தாஸ் பேகம் கௌரவ அதிதியாகவும் பங்கு பற்றவுள்ளனர்.

தமிழ்த் தின போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் கலை நிகழ்ச்சிகளும் அன்றைய தினம் இடம் பெறவுள்ளன. அத்துடன் தரம் ஒன்பது மாணவர்கள் நால்வரின் நூல்களும் வெளியிடப்படவுள்ளன என்று தமிழ்ப் பிரிவு உப அதிபர் ஏ.எம். மிஹ்ழார் தெரிவித்தார்.

# மலைச்சாரல்



# பலாங்கொடை–ஹட்டன் வீதியில் மண்சரிவு

பலாங்கொடை தினகரன், இரத்தின புரி சுழற்சி நிருபர்கள்



மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக பலாங்கொடை-ஹட்டன்பிரதானவீதியில், பின்னவலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (25) நண்பகல் பாரிய மண்மேடு சரிந்து விழுந்ததை தொடர்ந்து சுமார் 5 மணித்தியாலங்களாக அவ்வீதியினூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீதிக்கு குறுக்காக மண்மேடு, கற்பாறைகள் சரிந்து விழுந்ததுடன், மரங்களும் முறிந்து விழுந்தன. இதனைத் தொடர்ந்து, பலாங்கொடையிலிருந்து பொகவந்தலாவை, ஹட்டன், நுவரெலியாவுக்கான போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டன.

இந்நிலையில், இவ்வீதியை சீராக்கும்வரை மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு பயணிகள் மற்றும் வாகனச் சாரதிகளிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்திருந்தனர். அத்துடன், சிறிய ரக வாகனங்களில் பயணிப்போரை பொல்தும்ப வீதி வழியாக பயணிக்குமாறும் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

# ஸ்ரீமுருகேசு மகரிஷியின் ஜனன தின விழா



நுவரெலியா லங்காதீஸ்வரர் ஆலய காயத்ரி சித்தர் ஸ்ரீமுருகேசு மகரிஷியின் 90ஆவது ஜனன தின ஜெயந்தி விழா நுவரெலியா ஆவாஎலிய ஸ்ரீகாயத்திரி பீடத்தில் நேற்று வியாழக்கிழமை (26) மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிலையில், முருகேசு மகரிஷியின் திருவுருவம் சப்பரத்தில் பவனியாக வலம் வந்ததுடன், நாட்டில் சாந்தி சமாதானம் நிலவுவதற்காக விசேட மகா யாகமும் அபிஷேகமும் நடத்தப்பட்டன.

இதேவேளை, காயத்ரி சித்தர் ஸ்ரீமுருகேசு மகரிஷியின் ஜனன தினத்தை சிறப்பிக்கும் வகையில் அறநெறி மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கண்காட்சிக் கூடம் பொதுமக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டதுடன், அறநெறி மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதன் பின்னர், மகேஸ்வர பூஜை நடைபெற்று, பக்தர்களுக்கு அன்ன தானமும் வழங்கப்பட்டது.

(ஆ.ரமேஸ்)



இறக்குவானை பரியோவான் ஆரம்ப தமிழ் வித்தியாலயத்தில் நவராத்திரி விழாவையொட்டி நடத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டியில் தரம் 02 இல் கல்வி பயிலும் சிவகுமார் அபிவதன் முதலாமிடத்தை பெற்றுக்கொண்டார். இம்மாணவனுக்கு சான்றிதழ் வழங்கி பாடசாலை சமூகத்தினர் கௌரவித்துள்ளனர்.

# கேகாலை மாவட்ட அஹதிய்யா ஆசிரியர்களுக்கு நாளை செயலமர்வு

கேகாலை மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான ஒருநாள் செயலமர்வு நாளை சனிக்கிழமை (28) காலை 8.30 மணி முதல் 4.00 மணிவரை மாவனல்லை ஸாஹிரா தேசிய பாடசாலை ஆரம்பப்பிரிவு கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. கேகாலை மாவட்ட அஹதிய்யா பாடசாலைகள் சம்மேளனத்தின் தலைவர் அஷ் ஷெய்க் அக்ரம் ஜுனைட் தலைமையில் நடைபெறவுள்ள செயலமர்வில், கேகாலை மாவட்டத்திலுள்ள 29 அஹதிய்யா பாடசாலைளில் கடமையாற்றும் 225 க்கும் மேற்பட்ட அஹதிய்யா ஆசிரிய, ஆசிரியைகள் பங்குபற்றவுள்ளனர்.

இந்தச் செயலமர்வில் பங்குபற்றுபவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட்.ஏ.எம். பைசல் விசேட அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார். அத்துடன், மத்திய அஹதிய்யா சம்மேளனத்தின் தலைவர் எம்.ஆர்.எம்.சரூக், செயலாளர் எம்.எப்.எம்.பாஹிம் ஆகியோரும் இதில் பங்குபற்றவுள்ளனர்.

## சிறு ஏற்றுமதிப்பயிர் உற்பத்திகளை

# சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் கைச்சாத்து

மாத்தளை சுழற்சி நிருபர்

சிறு ஏற்றுமதிப்பயிர் உற்பத்திகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தமொன்று அரசாங்கத்தால் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க தெரிவித்தார்.

இரத்தோட்டை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போதே, இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, கறுவா போன்ற சிறு ஏற்றுமதி பயிர்ச் செய்கையில் அதிகளவான சிறு ஏற்றுமதிப் பயிர்ச் செய்கையாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். சிறு ஏற்றுமதிப்பயிர் உற்பத்திகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது என்றார்.

தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 04.41 |
| லுஹர் | 11.56 |
| அஸர் | 03.17 |
| மஃரிப் | 05.53 |
| இஷா | 07.04 |

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் ஐப்பசி 10

ராகுகாலம் : பகல் : 10.32 - 12.02வரை
சுபநேரம் : காலை : 6.02 - 7.32வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி





# பட்ஜட் சமர்ப்பிக்கப்பட்டதும் கட்சி ஆராய்ந்து முடிவெடுக்கும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், இது தொடர்பில் ஆராய்ந்து கட்சி ரீதியாக முடிவெடுக்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்கவோ அல்லது மக்களுக்கு நிவாரணம் வழங்கவோ 2030 வரை காத்திருக்க முடியாது எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் தற்போது நடைபெற்றுள்ளது அமைச்சரவை மாற்றம் அல்ல என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், அது பதவி மாற்றம் மாத்திரமே என்றும் குறிப்பிட்டார்.

பதவிகளை பரிமாறிக் கொள்வதில் அர்த்தமில்லை என தெரிவித்துள்ள அவர், இதனால் நாட்டுக்கோ, மக்களுக்கோ எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றம் குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அதிருப்தியில் உள்ள நிலையிலேயே நாமல்ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பழுதடைந்த பஸ், வேன்களில் மாணவர்களை ஏற்றுவது தடை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பாடசாலை சேவைகளில் ஈடுபடும் மிக மோசமான நிலையிலுள்ள பஸ்கள் மற்றும் வான்கள் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. மோட்டார் போக்குவரத்து பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இது தொடர்பில் தெரிவித்துள்ளார்.

பாடசாலை வான்கள் மற்றும் பஸ்களை கண்காணிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதிகமான பாடசாலை பஸ்கள் மற்றும் வான்கள் சேவைகளுக்குப் பின்னர் நீக்கப்படுவதுண்டு. இவ்வாறு நீக்கப்படும் வாகனங்களை திருத்தியே மீண்டும் பாடசாலை சேவைகளுக்காக பயன்படுத்தி வருகின்றனர். இவை, மிகமோசமான நிலையில் காணப்படுகின்றமை பரிசோதனைகள் மூலம் இனங்காணப்பட்டுள்ளது. மிக மோசமான நிலையில் இந்த வாகனங்கள் காணப்படுவதுடன், பராமரிப்பும் மிக மோசமாகவுள்ளது.

இதனை கருத்திற் கொண்டு அத்தகைய வாகனங்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சில வாகனங்களுக்கு நாம் தடை விதித்துள்ளோம். இத்தகைய வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதால் பெறுமதியான உயிர்களே பலியாவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## sky yoga அடிப்படை ஏழு நாள் பயிற்சிகள் நாளை ஆரம்பம்

இலங்கை மனவளக்கலை மன்றத்தின் sky yoga அடிப்படை பயிற்சியின் புதிய வகுப்புக்கள், நாளை மறுதினம் (28) முதல் நவம்பர் 04 வரை,பகல் 10 மணி முதல் பகல் 12 மணி வரை மற்றும் மாலை 06 மணி முதல் இரவு 08 மணி வரை நடைபெறவுள்ளது.

இங்கு எளியமுறை யோகாசன பயிற்சிகள், தியான பயிற்சிகள் மற்றும் காயகல்ப யோகா பயிற்சிகள் என்பன வழங்கப்படும். வெள்ளவத்தையிலுள்ள கொழும்பு அறிவு திருக்கோயில் sky yoga center இல் நடைபெறும் இந்த பயிற்சிகள், தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்திருக்கும் மனவளக்கலை பேராசிரியர் பி.ஏ முமலையால் வழங்கப்படும். பயிற்சிகள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள 0779 371 846 என்ற இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.

## SIP Abacus வகுப்பு 28 இல் ஆரம்பம்

மருதானை SIP Abacus பயிற்சிநெறி வகுப்பு எதிர் வரும் சனிக்கிழமை (28) மாலை 4.00 மணி முதல் 7.00 மணிவரை இல. 292 ஸ்ரீவஜிரஜன மாவத்தை, கொழும்பு 09 இல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இதற்கான நிகழ்வில் பிரதம விருந்தினராக SIP அக்கடமியின் நாட்டுக்கான பொறுப்பாளர் ரிஷாட் ரஹீம் கலந்துகொள்ளவுள்ளார்.


## 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கமுடைய தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகாரசபை சட்டத்தின் 131 (இ) பிரிவின் கீழ் நீதிமன்ற உத்தரவுக்கு ஏற்ப இலங்கை மக்களிடம் மன்னிப்பு கோரல்

**குத்தூஸ் அஸத்துல் ஜமான்,**
**முஹம்மட் ஹனீபா அப்துல் ரசாக்,**

மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட எங்களால் மருந்தாளர் அல்லாத அல்லது பயிலுனர் மருந்தாளர் அல்லாத நபர் ஒருவரால் மருந்துகள் அளிக்கப்பட்டமை அல்லது விநியோகம் செய்தமை, உடல் நலத்திற்கு ஒவ்வாத நிலைமையின் கீழ் மருந்தினை களஞ்சியப்படுத்தப்பட்டு மற்றும் மருந்தினை வெளிக்காட்டி வைத்திருந்தமை. ஆகிய குற்றங்கள் சம்பந்தமாக அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் இலக்கம் 58181 உடைய வழக்கில் குற்றம் எனக்கொண்டு ரூபா. 120,000/- அபராத தொகை செலுத்த விதிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிப்பதோடு, இனிமேல் இவ்வாறான தவறுகள் ஏற்படாதவாறு பொறுப்புடன் செயல்படுவேன் எனவும் ஏற்பட்ட தவறுகள், குற்றங்களுக்காக பொதுமக்களிடம் மன்னிப்பும் கோருகின்றோம்.

**ஸம் ஸம் பாமசி,**
**அக்கரைப்பற்று**

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

### ரூ.45,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

**10.75%2028'A'** தொடர்களின் கீழ் ரூ. 22,500 மில்லியனையும் 11.25% - 2031 A" தொடர்களின் கீழ் ரூ. 22,500 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2023 ஒக்டோபர் 30ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படவுள்ள.

இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| தொடர்கள் | 10.75%2028'A' | 11.25%2031'A' |
|---|---|---|
| ISIN* | LKB 01028C151 | LKB01231C151 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 22,500 மில்லியன் | ரூ. 22,500 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 10.75% ஆண்டொன்றிற்கு | 11.25% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2018 மார்ச் 15 | 2019 மார்ச் 15 |
| முதிர்வுத்திகதி | 2028 மார்ச் 15 | 2031 மார்ச் 15 |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 15 மார்ச் & 15 செப்டெம்பர் | 15 மார்ச் & 15 செப்டெம்பர் |
| ஒன்று சேர்ந்த வட்டி வீதம் | ரூ.100.00 இற்கு ரூ. 1.3880 | ரூ.100 இற்கு ரூ. 1.4526 |
| ஏல விற்பனைத் திகதி | 2023 ஒக்டோபர் 30, திங்கட்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித்திகதியும் நேரமும் | 2023 ஒக்டோபர் 30, திங்கட்கிழமை மு.ப.11.00 மணி | |
| தீர்ப்பனவுத் திகதி | 2023 நவம்பர் 01 | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும். முதலீட்டாளராக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவேரனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 | என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

ஒவ்வொரு தொடர்/ISIN தொடர்பிலும் சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி.வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**

## தனமல்வில பிரதேச சபை

### வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2024

2024ம் ஆண்டிற்காக தனமல்வில பிரதேச சபையின் சேவை வழங்குநர்கள்/ பொருட்கள், உபகரணங்கள் வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கு என்னால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

02. வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கு இச்சபையினால் வழங்கப்படும் விண்ணப்பங்களில் பிரகாரம் விண்ணப்பிக்க வேண்டியதுடன், அலுவலக நேரங்களில் இச்சபைக்கு வருகைதந்து அல்லது தொலைபேசி இல. 047-2234075 மூலம் அழைத்து விண்ணப்பித்து தகவல்களை வழங்கி தபாலில் அல்லது 047-2230075 தொலைபேசி இலக்கத்திற்கு பெக்ஸ் செய்தி மூலம் அல்லது **tanamalwilapradeshiyasabawa@gmail.com** என்ற மின்னஞ்சல் மூலம் விண்ணப்பித்து விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடிவதுடன், விண்ணப்பங்களை விநியோகிப்பதற்காக எந்தக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

03. விண்ணப்பங்களை விநியோகித்தல் 2023.11.01 முதல் 2023.12.29 பி.ப. 3.00 வரை மாத்திரம் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படும்.

04. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2023.12.29 பி.ப. 3.00 வரை மாத்திரம் விண்ணப்பங்கள் ஏற்கப்படும். பதிவு செய்வதற்கான கட்டண சூத்திரம் கீழ்க்காணுமாறு அமையும். (குறித தினத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

| தொடர் இல. | வழங்கல்/ சேவை ஒப்பந்தத்தின் தன்மை | பதிவு செய்தற் கட்டணம் |
|---|---|---|
| 01 | **வழங்கல்கள்** | |
| | அலுவலக உபகரணம் மற்றும் துணைப்பாகங்கள் | ரூ. 2000.00 |
| | காகிதாதிகள் | |
| | கணனி மற்றும் துணைப்பாகங்கள் | |
| | நிர்மாணப் பொருட்கள் | |
| | டயர் மற்றும் டியூப் | |
| | நீர்க்குழாய் மற்றும் துணைப்பங்கள் | |
| | துப்புரவேற்பாட்டு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | |
| | வீதி விளக்கு மற்றும் மின்சார துணைப்பாகங்கள் | |
| | உணவுப் பொருட்கள் | |
| | அச்சு ஆவணங்கள் | |
| | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் | |
| | பூங்கா அலங்காரப் பொருட்கள் மற்றும் துணைப்பாகங்கள் | |
| | இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்தல் | |
| | முன்வார்பு கொங்கிறீட் பொருட்கள் வழங்குதல் | |
| | JCB இயந்திரம் வாடகைக்கு வழங்குதல் | |
| 02 | **சேவைகள்** | |
| | அச்சு சேவைகள் | ரூ. 2000.00 |
| | கணனி மற்றும் இயந்திர பழுதுபார்த்தல் | |
| | சட்டத்தரணி சேவை மற்றும் பொறியியல் சேவை | |
| | வாகன பழுதுபார்த்தல் | |
| | வாகன சேவையை பெற்றுக்கொள்ளல் | |
| | வாகனங்களை சேர்விஸ் செய்தல் | |
| | அளவை விடயங்கள் சேவை | |
| 03 | **ஒப்பந்தக்காரர்கள்** | |
| | ரூ. 1,000,000.00 வரை | ரூ. 2500.00 |
| | ரூ. 1000,000.00 முதல் 2,000,000.00 வரை | ரூ. 3500.00 |

குறித்த விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையை இட்டு மேற்படி பதிவு செய்தற் கட்டணத்திற்காக காசோலை, காசுக்கட்டளை அல்லது வங்கிக் கட்டளை மூலம் "செயலாளர், பிரதேச சபை, தனமல்வில" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் கிடைப்பதற்கு அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்க வேண்டியதுடன், உறையின் இடது பக்க மேல் மூலையில் 2024ம் ஆண்டிற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்" என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

**எல். அபேகோன்**
**சபைச் செயலாளர்,**
**பிரதேச சபை, தனமல்வில.**

## அஞ்சல் திணைக்களம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### 2024 ஆம் ஆண்டுக்காக அஞ்சல் தலைமையகத்திற்கு துப்புரவு சேவையின் வழங்கல்

**POST/PMD/04/37/2023**

2024.01.01 ஆம் திகதி தொடக்கம் 2024.12.31 ஆம் திகதி வரையான காலத்திற்கு கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, இல. 310இன் அஞ்சல் தலைமையகத்திற்கு துப்புரவு சேவையின் வழங்கலுக்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து அஞ்சல் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. தேசிய போட்டிரீதியான விலைமனு மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

03. ஒப்பந்தம் வழங்குவதற்கு விலைமனுதாரர் பின்வரும் தகைமை அளவுகோலை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
    I. செல்லுபடியான வர்த்தகப் பதிவு ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.
    II. விலைமனுதாரர் சம்பள சபைகள் கட்டளைச் சட்டத்துடன் இணங்குதல் வேண்டும்.
    III. மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும் (விலைமனுதாரர்கள் மகளிர் கழிப்பறைகளுக்கான துப்புரவேற்பாட்டு தொட்டியை வழங்குதல் வேண்டும்).

04. 2023 நவம்பர் 16 ஆம் திகதி 14.00 மணி வரை தபால்மா அதிபருக்கு விலைமனு ஆவணத்திற்காக 2,000.00 இ. ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கீழுள்ள முகவரிக்கு விலைமனுதாரர் தாமாக அல்லது விலைமனுதாரரின் பிரநிதிகள் மூலம் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்கலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.

05. அனைத்து விலைமனுக்களும் 2023 நவம்பர் 17 ஆம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களை ஏற்கும் நேரம் நிறைவடைந்த பின் கீழுள்ள முகவரியில் பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

06. விலைமனுக்கள் மூடப்படும் திகதியில் இருந்து 63 நாட்காட்டி தினங்களுக்கு விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

07. அனைத்து விலைமனுக்களும் 2024 பெப்ரவரி 15 ஆம் திகதி வரை 50,000.00 இலங்கை ரூபா தொகை ஒன்றுக்காக (நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்க) இலங்கையில் இயங்கும் வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட விலைமனு பிணை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அது "அஞ்சல் திணைக்கள, தபால்மா அதிபரின்" பெயரில் வரையப்பட்டிருத்தல் வேண்டும்.

08. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, இல. 310, அஞ்சல் தலைமையகம், 3ஆவது மாடியில் 2023 நவம்பர் 3ஆம் திகதி 10.00 மணிக்கு நடைபெறும்.

09. எந்த ஒரு காரணமும் குறிப்பிடாது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் உரிமை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவருக்கு உள்ளது.

10. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வேலை நாட்களில் 011-4927249 என்ற தொலைபேசி இலக்கத்தில் கணக்காளரிடம் (பெறுகை) இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

**கணக்காளர் (பெறுகை),**
**அஞ்சல் திணைக்களம்,**
**அஞ்சல் தலைமையகம்,**
**இல. 310,**
**டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அஞ்சல் திணைக்களம்,**
**இல. 310, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**
**2023.10.27**

## கமத்தொழில் அமைச்சு

### அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவனம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

01. பின்வரும் உருப்படியை வழங்குவதற்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவனம் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**உருப்படிகளின் அட்டவணை**

| இல. | விலைமனு இல. | உருப்படி | அளவு | விலைமனு பிணை (ரூபா) | விலைமனு பிணை செல்லுபடிக் காலம் | மீளளிக்கப்படாத வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 01 | NIPHM/AP/AC/2023/7/2/6 | வகை 01 பிளாஸ்டிக் பெட்டிகள் | 6500.00 | 380,250.00 | 2024.03.07 | 2,500.00 |
| 02 | NIPHM/AP/AC/2023/7/2/6 | வகை 02 பிளாஸ்டிக் பெட்டிகள் | 3750.00 | 264,375.00 | 2024.03.07 | 2,500.00 |

02. தேசிய போட்டி ரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.

03. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் அநுராதபுரம், ஜயந்தி மாவத்தை, அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவன, கணக்காளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ.: 025 3230000/ 025-3230092) என்பதோடு 2023.10.27 ஆம் திகதி தொடக்கம் 2023.11.11 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வேலை நாட்களில் மேல் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

04. 2023.10.27 ஆம் திகதி தொடக்கம் 2023.11.11 ஆம் திகதி வரை அநுராதபுரம், ஜயந்தி மாவத்தை, அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவன, பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழமையான தொகுதி ஒன்றை வாங்கலாம் என்பதோடு கட்டணம் ரொக்கப்பணத்தில் செலுத்த வேண்டும்.

05. விலைமனுக்களை 2023.11.12 ஆம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்னர், ஜயந்தி மாவத்தை, அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவன, பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவனத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டியில் விலைமனுக்களை இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்கும் நேரம் நிறைவடைந்த பின் அவை உடன் திறக்கப்படும்.

06. அசல் மற்றும் நகல் கடித உறைகளைக் கொண்ட இரு கடித உறைகளை ஒரு கடித உறையில் மீள இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உருப்படியின் பெயர் மற்றும் விலைமனு இலக்கத்தை குறிப்பிட்டு இரு பிரதிகளில் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

07. இது தொடர்பில் அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவன, திணைக்கள பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.

08. விலைமனுக்கள் 90 நாட்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

09. ஒவ்வொரு விலைமனுவும் மேலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகை ஒன்றில் விலைமனு பிணையை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது 2024.03.07 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவனம்,**
**அநுராதபுரம்.**
**விசாரணைகளுக்கு:-**
**025-3230000 025-3230092**

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 10ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் ஆகிர் பிறை 11

### குறள் தரும் சிந்தனை



நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி அற்று

உயிர் இருப்பது போலக் கயிறுகொண்டு ஆட்டி வைக்கப்படும் மரப்பொம்மைக்கும், மனத்தில் நாணமெனும் ஓர் உணர்வு இல்லாமல் உலகில் நடமாடுபவருக்கும் வேறுபாடு இல்லை.

# சுற்றுலாப் பயணத்துறையை மேம்படுத்த மற்றொரு திட்டம்

நாலாபுறமும் கடலால் சூழப்பட்டுள்ள இலங்கை சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கக் கூடிய எழில்மிகு கடற்கரைகளையும் கண்கவர் நீர்வீழ்ச்சிகளையும் நீரூற்றுக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

அதேநேரம் இரண்டு மணித்தியாலய பயணங்களின் ஊடாக வித்தியாசமான சீதோஷண நிலையை அனுபவிக்கக் கூடிய நாடாக விளங்கும் இலங்கை சமய, கலாசார மரபுரிமைகளுக்கு உரிமை கொண்டாடும் தனித்துவ நாடாகவும் திகழுகிறது.

இவை மாத்திரமல்லாமல் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய பல்வேறு சிறப்பம்சங்களையும் இந்நாடு தன்னகத்தே கொண்டிருக்கிறது. இந்நிலையில் இந்நாட்டின் உல்லாசப் பயணத்துறையை அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய துறைகளில் ஒன்றாகக் கட்டியெழுப்புவது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கு சாதகமான வாய்ப்புக்கள் நிறையவே காணப்படுகின்றன.

அந்த வகையில் சுற்றுலாக் கைத்தொழில் துறையை மேலும் மேம்படுத்தும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன் பயனாக உல்லாசப் பயணிகளின் வருகை கடந்த வருடத்தை விடவும் இவ்வருடம் பெரிதும் அதிகரித்துள்ளது. இதனை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகள் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இத்தரவுகளின்படி, இவ்வருடத்தின் மே மாதம் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு மாதமும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். அதுவும் ஜூலை மாதம்தான் அதிகூடிய எண்ணிக்கையானோர் இங்கு வருகை தந்த மாதமாக விளங்குகிறது.

இவ்வருடம் ஜனவரி முதல் செப்டம்பர் வரையான காலப்பகுதியில் 10 இலட்சத்து 16 ஆயிரத்து 256 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். ஆனால் கடந்த வருடம் 7 இலட்சத்து 19 ஆயிரத்து 978 பேரே வருகை தந்துள்ளனர். இதன்படி இவ்வருடம் நிறைவுறும் போது இந்நாட்டுக்கு வருகை தந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என உறுதிபடக் கூற முடியும்.

இவ்வருடம் இலங்கைக்கு வருகை தந்துள்ள உல்லாசப் பயணிகளில் அதிகூடிய எண்ணிக்கையானோர் இந்தியாவில் இருந்தே வந்துள்ளனர். இரண்டாவது அதிகூடிய எண்ணிக்கையை ரஷ்ய உல்லாசப் பயணிகள் பெற்றுள்ளனர்.

இதன்படி, கடந்த ஒன்பது மாத காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து 2,00,310 உல்லாசப் பயணிகளும் ரஷ்யாவில் இருந்து 1,32,300 உல்லாசப் பயணிகளும் இங்கு வந்துள்ளனர்.

இந்நிலையில், இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி, இவ்வருடத்தின் முதல் 08 மாதங்களிலும் 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்களை சுற்றுலாத் துறையின் ஊடாக இந்நாடு வருமானமாகப் பெற்றுக் கொண்டுள்ளது.

இவ்வாறான நிலையில் உல்லாசப் பயணத்துறையை மேலும் மேம்படுத்தும் மற்றொரு வேலைத்திட்டமொன்று பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்தப்படுள்ளது.

இந்தியா, ரஷ்யா உள்ளிட்ட ஏழு நாடுகளைச் சேர்ந்த உல்லாசப் பயணிகள் விசா இன்றி இலங்கைக்கு வர அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டம் எதிர்வரும் 2024 மார்ச் 31 ஆம் தகதி வரை நடைமுறையில் இருக்கும்.

சுற்றுலாக் கைத்தொழில் துறையை மேலும் மேம்படுத்தும் வகையில் சுற்றுலா அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய திட்டம் என்பதுதான் சுற்றுலா கைத்தொழில் துறையினரின் கருத்தாகும். உண்மையில் இத்திட்டம் இந்நாட்டின் இக்கைத்தொழில்துறையை மேலும் மேம்படுத்த வழிவகுக்கும். இதன் பயனாக இத்துறையில் புதிய தொழில்வாய்ப்புக்கள் உருவாதோடு உட்கட்டமைப்பு வசதிகளும் மேலும் வளர்ச்சி அடையும்.

அதேநேரம் இந்நாட்டுக்கு ஏற்கனவே அதிகூடிய உல்லாசப் பயணிகள் வருகை தரும் நாடுகளாக விளங்கும் இந்தியா, ரஷ்யா இருந்து வருகை தரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இவ்விரு நாடுகளோடு சேர்த்து சீனா, மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய ஐந்து நாடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன. அந்நாடுகளில் இருந்தும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும்.

எனவே உல்லாசப் பயணிகளை கவர்ந்திழுக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் இந்த இலவச விசா திட்டம் இலங்கையின் உல்லாசப் பயணத்துறையை மேலும் மேம்படுத்தி வலுப்படுத்துவதோடு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பாரிய பங்களிப்பாக அமையும். அதுவே பொருளாதார நிபுணர்களின் கருத்தும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# மலையக இலக்கியம் வளர்ச்சியடைய பெரும் பங்களிப்பு வழங்கியவர் தெளிவத்தை ஜோசப்

## ஈழத்து இலக்கிய ஆளுமை மறைந்து ஒரு வருட நிறைவு



தமிழுலகம் அறியும் எழுத்தாளராக உலாவந்தவர் தெளிவத்தை ஜோசப். அவர் தனது இயற்பெயருடன், தான் பிறந்து வாழ்ந்த மண்ணையும் கௌரவிக்கும் முகமாக மலையகத்தின் தெளிவத்தையை தன்னுடன் இணைத்து அம்மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

எழுத்தையே உயிர்மூச்சாக சுவாசித்த மலையகத்தின் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் 21.10.2022 அன்று காலை காலமானார்.

மலையகத் தோட்டப்புற வாழ்வியல் கோலங்களை சிறுகதைகளாக படைத்து பிரதேசம் கடந்தும் சிறந்த படைப்பாளியாகக் கருதப்படுபவர் அவர்.

மலையகத்தின் பதுளை மாவட்டம் ஊவாக்கட்டவளை என்ற ஊரில் 1934 பெப்ரவரி 16 இல் அவர் பிறந்தார். இளமையில் கும்பகோணம் லிட்டில் பிளவர் உயர்நிலைப் பள்ளியில் 3 ஆண்டுகள் படித்தார். பின்னர் இலங்கை திரும்பி பதுளை சென் பீட்டர்ஸ் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார்.

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளரான தெளிவத்தை ஜோசப்பின் 'காலங்கள் சாவதில்லை' நாவல்,

'நாமிருக்கும் நாடே' சிறுகதைத் தொகுதி என்பன இவருடைய முக்கியமான படைப்புகளாகும்.

பலராலும் அறியப்படும் படைப்பாளியாக உயர்ந்த தெளிவத்தை ஜோசப் 1960களில் தமிழ் இலக்கியத் துறையில் தடம் பதித்தார். ஆரம்பத்தில் சிறுகதைகள் எழுதினார். பிறகு குறுநாவல், நாவல், விமர்சனம், ஆய்வுக் கட்டுரைகள், தொலைக்காட்சி, வானொலி நாடகம், திரைப்படக் கதை எனப் பல தளங்களில் தடம் பதித்தார்.

அவர் ஒரு பிரபல எழுத்தாளராக இருந்தாலும் ஏனைய படைப்பாளர்களின் படைப்புகளை வெளிக்கொணர்விலும் தமது பங்களிப்பை வழங்கி வந்தார். வளர்ந்து வரும் எழுத்தாளர்கள் முதல், உறுதியான தடத்தைப் பதித்துக்கொண்டவர்கள் வரை அனைவரையும் வெளி உலகுக்குக் கொண்டுவருவதற்கு உறுதுணையாக இருந்தார்.

தனது இலக்கியப் படைப்புகள் மூலம் மலையக எல்லையைக் கடந்து உலக அளவில் பேசப்படும் ஈழத்தின் முக்கியப் படைப்பாளியாகத் திகழ்ந்தார். பல்வேறு பத்திரிகைகளுக்காக பல புனைபெயர்களில் இலக்கியக் கட்டுரைகள், இலக்கியக் குறிப்புகள், சிறுகதைகள், கவிதைகள், இலக்கியத் தகவல்களை அவர் எழுதியுள்ளார். மலையகம் பற்றி அறியவேண்டும் என்றால், இவரது படைப்புகளைப் படித்தால் போதும் என்னும் அளவுக்கு அந்த மக்களின் சமூக, அரசியல், பொருளாதார நிலைவரங்கள் தனது படைப்புகளில் நிறைந்திருந்தன.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'புதிய காற்று' திரைப்படத்திற்கும் தொலைக்காட்சி நாடகமொன்றுக்குத் திரைக்கதை, வசனம் எழுதியுள்ள தெளிவத்தை ஜோசப் இதுவரை ஆறு நாவல்களையும், மூன்று சிறுகதைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார்.

தெளிவத்தை ஜோசப் 'நாமிருக்கும் நாடே' சிறுகதைத் தொகுதிக்காக இலங்கைச் சாகித்திய விருது பெற்றுள்ளார். இவரது 'குடை நிழல்' என்ற புதினநூல் 2010 ஆம் ஆண்டுக்கான யாழ் இலக்கிய வட்டம் இலங்கை இலக்கியப் பேரவை விருதைப் பெற்றுள்ளது. 'காலங்கள் சாவதில்லை' என்பது இவரது முக்கியமான நாவல். அவரது ஆய்வு நூல்களான '20 ஆம் நூற்றாண்டில் ஈழத்து இதழியல் வரலாறு', 'மலையக சிறுகதை வரலாறு' ஆகியவை இவரைச் சிறந்த ஆய்வாளராக உலகுக்கு பறைசாற்றுகின்றன.

அவர் தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்காக பல்வேறு முனைப்புகளை மேற்கொண்டார். மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் தலைவராக பணியாற்றிய எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் மத்திய, மாகாண அரசுகளின் பல விருதுகளுக்குச் சொந்தக்காரர். ஊவா மாகாண சாகித்திய விருது, இந்து கலாசார திணைக்களத்தின் இலக்கிய செம்மல் விருது, அரசின் கலாபூசணம் விருது, தேசிய சாகித்திய விருது, பேராதனை பல்கலைக்கழகத் தமிழ் ஒன்றியத்தின் விசேட விருது, கம்பன் கழக விருது, யாழ் இலக்கிய வட்டத்தின் விருது, மட்டக்களப்பு இலக்கிய மன்றத்தின் விருது, மத்திய மாகாண சாகித்திய விருது, மேல்மாகாண சாகித்திய விருது, கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது, விஷ்ணுபுரம் இலக்கிய விருது உள்ளிட்ட பல விருதுகள் அவருக்குக் கிடைத்துள்ளன.

இவர் தனது இலக்கியப் பயணத்தில் 66 சிறுகதைகள் உட்பட ஏராளமான படைப்புகளை வழங்கியுள்ளார். சென்னை இலக்கிய மாநாடு, கனடா புத்தகக் கண்காட்சி, அவுஸ்திரேலியா, பிரித்தானியா நாடுகள் உள்ளிட்டவற்றில் பேச்சாளராகவும் கலந்துகொண்டு மலையக இலக்கியத்திற்கு பெருமை சேர்த்தவர்.



மலையக இலக்கியம் வளர்ச்சியடைவதற்கு தெளிவத்தை ஜோசப்பின் பங்களிப்பு இன்றியமையாதது என்றால் மிகையில்லை.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**
அவுஸ்திரேலியா

# அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி சம்மேளன 50 ஆவது வருட பொன்விழா மாநாடு

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி சம்மேளனத்தின் ஐம்பதாவது வருட பொன்விழா மாநாடு எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பு_7 இல் உள்ள விளையாட்டு அமைச்சின் 'டங்கன்ட் வைட்' மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சம்மேளன தேசியத் தலைவர் தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டில் பிரதமர் தினேஷ் குணவர்தன பிரதம அதிதியாகவும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கௌரவ அதிதியாகவும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொஹிதீன், இந்திய லோக் சபாவின் தமிழ்நாடு உறுப்பினர் கே. நவாஸ்கனி ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கின்றனர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். எம். சுஹைர் இந்நிகழ்வில் சிறப்புரை நிகழ்த்துவார்.

பொன்விழா மாநாட்டை முன்னிட்டு தபால் அமைச்சின் முத்திரை வெளியீட்டுப் பணியகம் ரூபா 25 பெறுமதியான விஷேட ஞாபகார்த்த முத்திரையையும், விஷேட ஞாபகார்த்த கடித உறையையும் வெளியிடுகின்றது. 'உதயக்கீற்று' 2023 என்ற சிறப்பு பொன்விழா மாநாட்டு மலரும் வெளியிடப்பட இருக்கிறது.

பௌத்த மதகுரு வண. தம்மானந்த தேரோ, ஜனாதிபதி சட்டத்தரணி எம். எம். சுஹைர், பேராசிரியை சுமதி சிவமோகன் ஆகியோர் அவர்களது மக்கள் சேவைக்காக விஷேட விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளனர். அத்துடன் சம்மேளனத்தின் முன்னாள் தேசிய தலைவர்களான தல்கஸ்பிட்டிய என். எம். அமீன், சிரேஷ்ட சட்டத்தரணி உடுதெனிய ரஷீத் எம். இம்தியாஸ், அக்கரைப்பற்று எம்.ஐ. உதுமாலெப்பை, பொத்துஹர கலாநிதி பி.எம். பாரூக் ஆகியோரும் கௌரவிக்கப்படுகின்றனர்.

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதன் 30 ஆவது ஆண்டு பூர்த்தியை நினைவூட்டும் வகையில், அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் இம்மாநாட்டின் போது வழங்கப்பட இருக்கின்றன.

களுத்துறை, குருநாகல், கண்டி, புத்தளம், அனுராதபுரம், மன்னார் மாவட்டங்களில் நடத்தப்பட்ட இளைஞர்களுக்கான தலைமைத்துவ, திறன்விருத்தி பயிற்சி முகாம்களில் பங்குபற்றியவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 150 இளைஞர்களும், யுவதிகளும் இம்மாநாட்டில் பங்குபற்ற உள்ளதுடன் அவர்களில் தெரிவான சிலரது திட்ட முன்வைப்புகளும் இடம் பெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

# போர்வை முஹியத்தீன் பள்ளிவாசலில் சனி, ஞாயிறு தினங்களில் 'கந்தூரி



மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ தொகுதியில் அமைந்துள்ள போர்வை (கொடப்பிட்டிய) கிராமத்தில் அமைந்துள்ள முஹியத்தீன் பள்ளிவாயலில் 'ஸெய்யிது ஸாதாத் பக்கீர் முஹியத்தீன்' வலியுல்லாஹ்வின் ஸியாரம் அமைந்துள்ளது. அன்னாரின் பெயரால் வருடாந்தம் நடத்தப்படும் கந்தூரி வைபவம் இம்மாதம் 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானதோடு நாளை 28ஆம், 29 ஆம் திகதிகளில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டு 29 ஆம் திகதி பகல் கந்தூரி வைபவம் இடம்பெற உள்ளது.

அழகுமிகு நில்வளா கங்கைத் தீரத்தில் அமைந்துள்ளது போர்வை எனும் ஊர். வருடாவருடம் ஆறு பெருக்கெடுத்து பல சேதங்களை ஏற்படுத்தினாலும் ஊர் மக்கள் அதற்குப் பழகி விட்டனர். 'போர்வை முஹியத்தீன் பள்ளிவாயல்' அருகே ஓடும் நில்வளா கங்கையின் எழில் மனதை ஈர்க்கும் வசீகர சக்தியைக் கொண்டுள்ளது.

இப்பள்ளிவாயல் தென்னிலங்கையில் அமைந்திருந்தாலும் நாடெங்கிலும் வாழும் முஸ்லிம்கள் அனைவரினதும் அபிமானத்தைப் பெற்றுள்ளது. முஸ்லிம்கள் மாத்திரமல்லாமல் ஏனைய மதத்தவர்களும் கூட இப்பள்ளிவாயலில் நம்பிக்கையும் பற்றும் கொண்டுள்ளனர்.

இலங்கை 17 ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தரின் ஏகாதிபத்தியத்தில் சிக்கியிருந்த வேளையில், கரையோரப் பகுதிகள் யாவற்றையும் தம் பிடிக்குள் கொண்டு வரகடும் முயற்சி செய்து மாத்தறையையும் தம் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். அதனால் மாத்தறை, தெவிநுவர, பள்ளியவத்த போன்ற பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் மீது ஒல்லாந்தர் மேற்கொண்ட கொடுமைகள் தாங்க முடியாத நிலையில் தம் வாழிடங்களையும் சொத்துக்களையும் கைவிட்டு வேறுவேறு இடங்களுக்கு குடிபெயர்ந்தனர். அவர்கள் தான் ஹொரதொட, மாரம்ப, பள்ளிகேவத்த என்ற இடங்களில் குடியேறினர்.

இக்காலப் பகுதியில் நில்வளா கங்கையின் ஓரமாக அமைந்திருந்த 'போர்வை' எனும் ஊர் உன்னிச்சை மரங்கள் நிறைந்த காடாக இருந்த இடத்தில் குடியேற்றமற்ற பகுதியாக காணப்பட்டது.

காலியைச் சேர்ந்த மாணிக்கக்கல் அகழும் முஸ்லிம்கள் இங்கு வந்து பாதுகாப்பாக தங்கியிருந்து மாணிக்கக்கல் அகழும் பகுதியாக இது இருந்துள்ளது. இதற்கான சான்றுகள் போர்வை கிராமத்தில் காணப்படுகின்றன.

(06ஆம் பக்கம் பார்க்க)

போர்வையூர் **எஸ்.எச்.எம்.ஹமீல்டீன்...**
தங்காலை

# காத்தான்குடி முஸ்லிம் சிறுவர் அபிவிருத்தி நிலையத்துக்கு குவைத் நிதியில் கட்டடங்கள்

காத்தான்குடி முஸ்லிம் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடங்கள் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன. குவைத் நாட்டின் நிதியுதவியுடன் இலங்கையிலுள்ள ஐ.எஸ்.ஆர்.சி. நிறுவனத்தினால் இக்கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

காத்தான்குடி முஸ்லிம் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் ஐ.எல். எம்.றுபைத் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் திருமதி ரிஸ்வானி ரிபாஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கட்டடங்களைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதர், ஐ.எஸ்.ஆர்.சி. நிறுவனத்தின் இலங்கைக்கான திட்ட இணைப்பாளர் ஏ.எல்.ஜுனைட் நழீமி, காத்தான்குடி நகரசபை முன்னாள் தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர், காத்தான்குடி ஜாமியதிதுல் பலாஹ் அரபுக்கல்லூரி அதிபர் மற்றும் காத்தான்குடி முஸ்லிம் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் நிருவாகிகள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இக்கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டதுடன், இங்குள்ள மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களும் காத்தான்குடி முஸ்லிம் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் ஐ.எல். எம்.றுபைத் அவர்களிடம் ஐ.எஸ்.ஆர்.சி. நிறுவனத்தின் இலங்கைக்கான திட்ட இணைப்பாளர் ஏ.எல்.ஜுனைட் நழீமி அவர்களினால் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அதிதிகளுக்கான நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டு அவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.







**எம்.எஸ்.எம்.நூர்தீன்...**
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



# வாசிப்பு ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமை

**'வாசிப்பீராக..., படைத்த இறைவனின் பெயரால்... அவன் பேனாவைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். அவன்தான் மனிதன் அறியாதவற்றை எல்லாம் அவனுக்குக் கற்றுக் கொடுத்தான்'.**

**(ஆதாரம்: ஸூரதுல் அலக் 15)**

இற்றைக்கு 1400 வருடங்களுக்கு முன்னர் அறியாமைச் சமூகத்தில் தனது தூதரை அனுப்பிய அல்லாஹுத்தஆலா முதன் முதலில் இறக்கியருளிய வசனங்கள் இவை. கற்றுக் கொடுத்தலையும் கற்றுக் கொள்ளுதலையுமே முதல் வசனங்களாக அல்லாஹுத்தஆலா அச்சமூகத்தின் மீது இறக்கியுள்ளான்.

அந்த வகையில் கற்றுக் கொடுப்பவனாக தன்னை எடுத்துக்காட்டுகின்ற அல்லாஹுத்தஆலா கற்றுக் கொள்பவனாகமனிதனைஉருவகித்துக் காட்டுகின்றான். எனவே கற்றலும் கற்பித்தலும் என்பது இறைவனுக்கும் மனிதனுக்குமான தொடர்பாடல் என்பதாகவே இஸ்லாம் சொல்லித் தருகிறது.

உலகத்தாருக்கு வழிகாட்டியாக அருளப்பட்ட அல்குர்ஆனைப் படிப்பவர்களை மனிதர்களிலேயே சிறந்தவர்கள் என இஸ்லாம் கூறுகிறது. உங்களில் சிறந்தவர் அல்குர்ஆனைக் கற்று பிறருக்கும் கற்றுக் கொடுப்பவர்களே... என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இதற்கு வசதியாக அமையும் வகையில் அல்குர்ஆனை எழுத்துருவில் பாதுகாக்குமாறு நபியவர்கள் தமது தோழர்களுக்கு ஏவினார்கள். நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் அல்குர்ஆன் இறங்குவது முற்றுப் பெற்றதனால், அதுவரை எழுதி வைக்கப்பட்டிருந்த அல்குர்ஆனைத் தொகுத்து முஸ்ஹப்களாக வெளியிடும் பணியை கலீபா அபூபக்கர் (ரழி) அவர்கள் மேற்கொண்டார்கள். இதிலிருந்து அல்குர்ஆன் முழுமையாக வாசிக்கும் வகையில் நூலுருப்பெற்றது. உலக முஸ்லிம்கள் அன்றாடம் இதனை ஓதுபவர்களாக..., வாசிப்பவர்களாக... இருப்பதனால் இன்று உலகில் அதிகம் வாசிக்கப்படும் நூலாக அல்குர்ஆன் விளங்குகிறது.

அல்குர்ஆனை சரளமாக ஓதவோ வாசிக்கவோ முடியாதவர்கள் கஷ்டப்பட்டேனும் அதனை ஓதுவதையும், வாசிப்பதையும் நபியவர்கள் ஊக்குவித்துள்ளார்கள். அழகிய முறையில் அல்குர்ஆனை ஓதுபவர்களுக்கு சிறந்த கூலியுண்டு. கஷ்டப்பட்டேனும் அதனை ஓதுபவர்களுக்கு இரட்டிப்பு நன்மையுண்டு எனவும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அல்குர்ஆனை வாசிப்பது என்பது நன்மை தரும் விடயமாகும். அதனால் அதனை ஓதுவதில் இருந்தும் வாசிப்பதில் இருந்தும் யாரும் தவிர்ந்து கொள்ள முடியாது.

அதேபோன்று அல்குர்ஆன் அருளப்பெற்ற நபி (ஸல்) அவர்களது சொல், செயல், அங்கீகாரம் அனைத்தையும் தேடிப்பிடித்து அவற்றை நூலுருப்படுத்தும் பணியையும் ஹதீஸ்துறை இமாம்கள் செய்து வைத்திருக்கிறார்கள். இவை அனைத்தும் ஆறு கிரந்தங்களாகவும் இவற்றின் விளக்கங்கள் இன்னும் பல நூல்களாகவும் தொகுக்கப்பட்டிருக்கின்றன. **'உங்கள் மத்தியில் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கிறேன். அதையொட்டி நீங்கள் வாழும் காலமெல்லாம் வழிதவறமாட்டீர்கள். அதுதான் அல்குர்ஆனும் ஹதீஸும்'** எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த இரண்டுமே தற்போது மக்கள் வாசித்தறிந்து கொள்ளும் வகையில் நூலுருப்படுத்தப்பட்டிருக்கின்றன. அல் குர்ஆன் மற்றும் ஹதீஸினூடாக வழிகாட்டல் பெற வேண்டுமானால் இவற்றை வாசிப்பது கட்டாயமாகிறது. வாசிப்பது எவ்வளவு தூரம் முக்கியமானது என்பதை பத்ருடைய சம்பவமும் எடுத்துக்காட்டுகிறது. பத்ர் யுத்தத்தில் முஸ்லிம்களுக்கெதிராகப் போராடிய சிலர் சிறைப்பிடிக்கப்பட்ட போது அவர்களைக் கொலை செய்து விட ஆலோசனைகள் சொல்லப்பட்ட போதும், அவர்களில் கற்றவர்களை வைத்து முஸ்லிம் சமூகத்தில் கல்வி அறிவில்லாத சிலருக்கு எழுதவும் வாசிக்கவும் கற்றுக்கொடுக்க நபி(ஸல்) அவர்கள் வழிவகை செய்தார்கள்.

அல்குர்ஆனும், **'உங்களில் அறிந்தவர்களும் அறியாதவர்களும் சமமாக மாட்டார்கள்'** என்று கூறியுள்ளது. ஒரு சமூகத்தில் அறிந்தவர்கள் அதிகமாக இருக்கும் பட்சத்தில் அறிவுடைய சமூகத்தை உலகம் போற்றுவதோடு அச்சமூகத்தைப் பின்பற்றவும் தலைப்படுகிறது. அதனால் முஸ்லிமான ஒவ்வொரு ஆண், பெண்ணின் மீதும் கல்வி கற்பது கட்டாயக் கடமையாகிறது என்று குறிப்பிட்டுள்ள நபி (ஸல்) அவர்கள், சீனா சென்றேனும் கல்வியைத் தேடிப் படியுங்கள் என்றும் ஊக்குவித்தார்கள்.

அல்குர்ஆனும் சிந்திப்பதையும் ஆராய்ச்சி செய்வதையும் பல இடங்களில் ஊக்குவித்துள்ளது. இப்படிப் பல வகைகளிலும் கல்வி பெறுவது முஸ்லிம்கள் மீது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பிக்ஹுடைய இமாம்களின் கருத்துப்படி, ஒரு வாஜிபை நிறைவேற்றுவதற்கு எதுவெல்லாம் அவசியமோ அவையும் வாஜிபாகும். வுழு செய்வது சுன்னத்தாக இருந்தாலும் தொழுகை என்ற கடமையைச் செய்வதற்கு அது அவசியமானது என்ற வகையில் தொழுகைக்காக வுழு செய்வது வாஜிபாகும். இந்த வகையில் அறிவைப் பெற்றுக்கொள்வது ஒரு முஸ்லிமின் மீதான கடமை என்ற வகையில் அந்த அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக வாசிப்பது என்பதுவும் அவன் மீது கடமையாகிறது.

புத்தகங்களை வாசிப்பதைத் தவிர்ந்து கொள்ளும் இன்றைய எதிர்காலச் சந்ததிகள் தொடர்பில், பரனைட் 451 என்ற புத்தகத்தை எழுதிய ரே ப்ராட்பரி என்ற நூலாசிரியர், 'ஒரு கலாசாரத்தை இல்லாதொழிப்பதற்கு நீங்கள் புத்தகங்களை எரிக்க வேண்டியதில்லை, அவற்றை வாசிக்கவிடாமல் செய்யுங்கள்' என்கிறார்.

உண்மையில் முஸ்லிம் சமூகம் வாசிப்பதைக் கைவிடும் போது அது கல்வி பெறுதல் என்ற தனது கடமையில் தவறுவிட்ட சமூகமாக மாறுகிறது. இந்நிலைக்கு முஸ்லிம் சமூகம் ஆளாகுமாக இருந்தால் இந்த உலகத்தில் பின்தள்ளப்பட்ட சமூகமாக முஸ்லிம் சமூகம் மாறுவது தவிர்க்கவியலாமல் போகும்.

இந்த இழிநிலையில் இருந்து முஸ்லிம் சமூகத்தைக் காப்பாற்ற வேண்டுமாக இருந்தால் வாசித்தல் என்ற வாஜிபை அச்சமூகத்தில் பரவலாக்க வேண்டும். இது குறிப்பிட்ட ஒரு சிலர் வாசித்தால் நிறைவேறிவிடும் கடமையல்ல. கல்வி கற்பது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமை என்ற வகையில் இது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையான பர்ளு ஐனாகும். கல்வி கற்பதற்கு வாசிப்பு அவசியம் என்ற வகையில் வாசிப்பையும் வாஜிபானதாகக் கொள்ளாதவரை இந்த தீன் உலகில் மிகைத்ததாக மாறுவதற்கு தடையானவர்களாக முஸ்லிம் சமூகமே மாறிவிடவும் முடியும்.

**பியாஸ் முஹம்மத்...**

# மனிதருக்கு அல்லாஹ்வின் செய்தி

**(கடந்த வாரத் தொடர்...)**



**'அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஆன்மாவில் இருந்து உற்பத்தி செய்தான்'** என்ற வசனத்தின் ஊடாக பூமியில் பிறக்கும் அனைத்து மனிதர்களதும் மூலம் ஒரு தாய், ஒரு தந்தையில் இருந்து தான் ஆரம்பமானது என்பது எடுத்தியம்பப்படுகிறது. இதன் ஊடாக அல்லாஹ்வினால் படைக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் அனைவரும் அவன் பக்கம் திரும்ப வேண்டும் என்ற செய்தி முன்வைக்கப்படுகிறது. அதேநேரம் முழு மனித இனமும் ஒரே மூலத்தில் இருந்து வெளிப்பட்டிருப்பதால் அவர்கள் அனைவரும் உறவு முறையைக் கொண்டிருக்கின்றார்கள். அந்த உறவின் பக்கம் திரும்புவதும் இன்றியமையாததாகும்.

அல்லாஹ்வினால் படைக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையிலும் ஒரே தாயையும் தந்தையையும் மூல வேராகக் கொண்டவர்கள் என்ற அடிப்படையிலும் மனிதர்கள் ஒன்றுபட வேண்டியவர்களாவர். கொள்கை, கோட்பாடுகள் ரீதியில் பிரிந்திருந்தாலும் அனைத்து மனிதர்களது இரத்தமும், சுவாசிக்கும் காற்றும், ஒட்சிசனும், கண்ணீரும், பசி, இச்சை உணர்வும் ஒரே விதமானது. உடலுறுப்புக்களும் அவ்வாறானதே. அதனால் மனித சமூகத்தில் பிரிவினை இருக்க முடியாது.

அதேநேரம் **'ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம்'** என்றும் இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். அதாவது ஒரே மூலத்தில் இருந்து பிறந்த மனிதர்கள் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் இருந்தாலும் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்வதற்காகவன்றி பிரிந்து பிளவுபட்டு இருப்பதற்கு அல்ல. அதுவே அல்லாஹ்வின் ஏற்பாடாகும்.

அதனால் அல்லாஹ்வினால் படைக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையிலும் அவனது நாட்டத்தின் ஊடாக ஒரே மூலத்தில் இருந்து பிறந்தவர்கள் என்ற அடிப்படையிலும் அனைத்து மனிதர்களும் அல்லாஹ்வின் பக்கம் திரும்ப வேண்டியவர்கள். அதனால் மனிதன், தம் வாழ்வின் யதார்த்தத்தை சரியாக அறிந்து உணர்ந்து கொள்வான் என்றால் அவனது வாழ்வின் பிற்காலத்தில் உலகில் உருவான அனைத்து பிரிவுகளும் அவனை விட்டு நீங்கிவிடும். அந்த பிரிவுகள் தான் ஒரே தாயின் வயிற்றில் பிறந்த மனிதர்களிடையே பிரிவுகளை ஏற்படுத்தியதோடு அவர்களுக்கிடையிலான உறவுகளையும் அறுத்து தூரப்படுத்தி இருக்கின்றன. அவை தற்காலிகமாகத் தோன்றியவை தான்.

மனிதர்களுக்கிடையிலான உறவு, தொடர்பின் உண்மை நிலை என்பன ஒவ்வொருவரதும் மனதிலும் ஆழப்பதிந்து விட்டால் இன ரீதியிலான மோதல்கள் அகன்றுவிடும். ஆன போதிலும் இம்மோதல்களால் ஆரம்பம் முதல் பெரும் துன்பங்களை மனித சமூகம் அனுவித்து வந்திருக்கிறது. கோடிக் கணக்கானோரின் இரத்தம் சிந்தப்பட்டுள்ளன. உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன. இன்றைய நவீன உலகிலும் இவை இடம் பெறவே செய்கின்றன.

இந்த வசனங்களின் படி, மனிதர்கள் தங்களைப் படைத்த அல்லாஹ்வை நோக்கி திரும்ப வேண்டும். அப்போது உலகில் அமைதி சமாதானம் தலைத் தோங்கும். அல்லாஹ் வழங்கியுள்ள செய்தியும் அதுதான். அந்த செய்தியை அறிந்து தெரிந்து கொள்வதிலும் புரிந்துகொள்வதிலும் காணப்படும் பலவீனங்கள் தான் மனிதர்கள் மத்தியில் பிளவும் பிரிவுகளும் முரண்பாடுகளும் கோலோச்ச வழிவகை செய்திருக்கின்றன.

மனிதர்கள் அனைவரும் இன, நிற, மொழி, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் இரத்த தொடர்பை உறவு முறையைக் கொண்டவர்கள் என்பதை அல் குர்ஆனின் இந்த வசனங்கள் தெளிவாக உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்த இரண்டு வசனங்களதும் இரண்டாவது பகுதி மற்றொரு முக்கிய செய்தியையும் எடுத்தியம்புகின்றது. அது தான் இறையச்சமாகும். மனிதனுக்கு மிகவும் இன்றியமையாததும் அதுதான். இறையச்சத்தை பெற்றுக்கொள்ளும் மனிதன் தம் வாழ்வின், படைப்பின் நோக்கத்தை தெளிவாக அறிந்து புரிந்து கொள்வான்.

ஆகவே அல்லாஹ்வின் செய்தியை அதற்கேயுரிய ஒழுங்கில் புரிந்து அதற்கேற்ப வாழ்வொழுங்கை அமைத்துக் கொள்வோம். அதுவே ஈருலக வாழ்விலும் விமோசனம் பெற்றுக்கொள்வதற்கான அடிப்படையாக அமையும்.

முற்றும்.

**மர்லின் மரிக்கார்...**

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# வீணானவற்றிலிருந்து விலகி இருத்தல்

**'அவர்கள் வீணான காரியங்களிலிருந்து விலகியிருப்பார்கள்'**

(ஆதாரம்: முஃமினூன் 3)

எவ்விதமான நன்மையும் அளிக்காதவை, நல்ல விளைவோ, இலாபமோ, முடிவோ அளித்திடாதவை, உண்மையான தேவை எதையும் கொண்டிராதவை, நல்லதோர் நோக்கம் எதனையும் பெற்றிராதவை ஆகிய அனைத்துமே வீணானவையாகும்.

ஸூரா முஃமினூனில் இடம்பெற்றுள்ள 'விலகியிருக்கிறார்கள்' என்பதற்கு இவ்வாறு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. 'வீணானவற்றின் பக்கம் ஏறிட்டும் பார்ப்பதில்லை, அவற்றின் பக்கம் கவனம் செலுத்துவதில்லை, அவற்றில் எவ்வித ஈடுபாடும் கொள்வதில்லை, எங்கெல்லாம் வீணான செயல்களும் பேச்சுக்களும், விஷயங்களும் நடந்து கொண்டிருக்கின்றனவோ அந்த இடங்களுக்கு போவதை தவிர்த்து விடுகின்றார்கள். எங்கேனும் எப்போதேனும் எதிர்கொள்ள நேரிட்டால் சுதாகரித்துக் கொண்டு உடனடியாக அங்கிருந்து வெளியேறி விடுகின்றார்கள். அவற்றுடன் எத்தகைய தொடர்பையும் வைத்துக் கொண்டிராமல், ஏற்படாமல் விலகி நிற்கிறார்கள் என்பது தான் பொருளாகும்.

இதே கருத்தை அல் ஃபுர்கானின் 72 ஆவது வசனம், 'அவர்கள் ஏதேனும் வீணானவற்றின் அருகில் செல்ல நேர்ந்தால் கண்ணியமானவர்களாய்க் கடந்து சென்றுவிடுவார்கள்' என்று குறிப்பிட்டிருக்கின்றது. இது இறை நம்பிக்கையாளர்களின் மிகவும் முக்கியமான பண்புகளில் ஒன்றாகும். ஒவ்வொரு நிமிடத்தையும் பயனுள்ள வழிகளிலே செலவிடுகின்றமை, உயர்ந்த இலட்சியத்திற்கு தன்னை தயார்படுத்துவதை தேர்ந்தெடுக்கின்றமை என்பனவும் முக்கியமானவையாகும்.

ஒவ்வொரு இறை நம்பிக்கையாளனும் அடிப்படையில் நல்ல இயல்பும் தூய்மையான நடத்தையும் கொண்டவராக இருக்கும்போது வீண் அரட்டையில் ஈடுபட மாட்டார். சிரித்து மகிழக்கூடிய நகைச்சுவையாகப் பேசினாலும் எல்லை தாண்டாது குத்திப் பேசுவதையோ, கேளியும் கிண்டலும் செய்வதையோ தனக்கு விருப்பமான பொழுதுபோக்காக ஆக்கிக் கொள்ள மாட்டார்.

அவர் அவதூறு, புறங்கூறல், பொய்யான பேச்சுகள், ஆபாசமான உரையாடல்கள், கேவலமான பாடல்கள் என்பவற்றை முற்றிலும் வெறுக்கக்கூடியவராகவே இருப்பார். இவ்வாறானவர்கள் சுவனத்தின் அருள்வளங்களில் 'அங்கு அவர்கள் வீணானவற்றைச் செவியுற மாட்டார்கள்' (அல்குர்ஆன் 88:11) என்பதை இவ்வசனம் எடுத்தியம்புகிறது.

எனவே, வீணானவற்றிலிருந்து விலகி இருப்பது ஒரு முஃமினின் அடிப்படை என்பதை உணர்ந்து செயற்படுவோம்.

தொகுப்பு: **மஸ்லமா முஜாஹித்...**

# இஸ்லாம் வலியுறுத்தும் கருணை

எல்லா உயிர்களிடமும் இரக்கமும் கருணையும் காட்டுவதே மனிதப்பண்பாகும். நபி(ஸல்) அவர்களின் வாழ்வெங்கும் இந்த கருணை பரந்து விரிந்திருந்தது. அன்னாரின் மென்மையான குணத்தையும், மன்னிக்கும் தன்மையையும் அல் குர்ஆன் இவ்வாறு கூறுகிறது,

**'அல்லாஹ்வுடைய ரஹ்மத்தின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (கனிவாக) நடந்து கொள்கிறீர். (சொல்லில்) நீர் கடுகடுப்பானவராகவும், கடின சித்தமுடையவராகவும் இருந்திருப்பீரானால், அவர்கள் உம் சமூகத்தை விட்டும் ஓடிப்போயிருப்பார்கள். எனவே அவர்களின் (பிழைகளை) அலட்சியப்படுத்தி விடுவீராக. அவ்வாறே அவர்களுக்காக மன்னிப்புத் தேடுவீராக. தவிர, சகல காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யும். பின்னர் (அவை பற்றி) நீர் முடிவு செய்து விட்டால் அல்லாஹ்வின் மீதே பொறுப்பேற்படுத்துவீராக. நிச்சயமாக அல்லாஹ் தன் மீது பொறுப்பேற்படுத்துவோரை நேசிக்கின்றான்' (3:159).**

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எல்லா உயிர்களிடத்தும் காட்டிய இரக்கமும் கருணையுமே அனைவரையும் ஈர்த்து நின்றது என்பதை இந்த இறை வசனம் எடுத்தியம்புகிறது. நபி (ஸல்) அவர்கள் கருணை நிறைந்தவராக விளங்கினார்கள் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.



ஒரு தடவை, **'ஒரு மனிதன் நியாயம் இன்றி கொல்லப்பட்டால், அது முழு மனித சமுதாயமும் கொல்லப்பட்டதற்கு சமமாகும்' என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.** இதன் ஊடாக கருணையின் உச்சத்தை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மனித குலத்திற்கு எடுத்துக்காட்டினார்கள்.

அன்னார் மனிதர்களுடன் மாத்திரமல்லாமல் ஏனைய உயிரினங்களுடனும் குறிப்பாக விலங்குகளுடனும் பறவைகளுடனும் தாவரங்களுடனும் கூட மிகுந்த கருணையோடு நடந்து கொண்டுள்ளார்கள்.

ஒரு தடவை, **'முதுமையடைந்த ஒட்டகம் ஒன்று ஓடோடி வந்து மூச்சிறைக்க நபிகளாரின் முன்பாக நின்றது. அதனைப் பிடித்து அறுப்பதற்காக ஒருவர் கத்தியுடன் வந்தார். அப்போது நபி (ஸல்) அவர்கள், 'என்ன காரணத்திற்காக இதனை விரட்டுகிறீர்' என்று அந்நபரிடம் வினவினார்கள். அதற்கு அந்நபர், 'இந்த ஒட்டகம் வயதாகி முதுமையடைந்து விட்டது. இதனால் பலன் ஏதும் இல்லை, ஆகவே இதனை அறுத்து உணவாக்கவே விரட்டி வந்தேன்' என்றார்.**

**அப்போது நபிகளார், 'இந்த ஒட்டகம் எவ்வளவு காலமாக உம்மிடம் இருக்கிறது. இதன் மூலம் நீர் என்ன பயன் அடைந்தீர்?' என வினவ, 'இதன் தாய் இதனை எங்கள் வீட்டில் தான் ஈன்றது, குட்டியில் இருந்தே நாங்கள்தான் இதனை வளர்த்து வருகின்றோம், இது பல குட்டிகளை எங்களுக்கு ஈன்று தந்துள்ளது. அதிகமான பாலையும் தந்துள்ளது. விவசாயத்திற்கும் பயன்பட்டது, நல்ல வாகனமாகவும் இருந்தது' என்றார் அந்நபர்.**

**அப்போது நபி (ஸல்) அவர்கள், 'இவ்வளவு உதவி செய்த இந்த கிழட்டு ஒட்டகத்திற்கு இதுதான் நீர் செய்யும் கைமாறா?, அதனை அறுக்கக் கூடாது. இந்த ஒட்டகம் இயற்கையாக மரணிக்கும் வரை, அதற்கு உணவும், தண்ணீரும், உறைவிடமும் தந்து, அது இறந்த பின் நல்ல முறையில் அடக்கம் செய்வது உமது கடமை' என்று கூறினார்கள்.** (ஆதாரம்: நபிமொழி)

அதேநேரம் மிருகங்களைப் பயன்படுத்தி அளவுக்கு மீறிய கடினமாக வேலை வாங்குவதையும் நபிகளார் தடுத்துள்ளார்கள். குறிப்பாக அதன் உடம்பில் சூடுபோடுவது, அவைகளை ஊசி கொண்டு குத்துவது, வேகமாக விரட்டுவது போன்ற இரக்கமற்ற செயல்களை செய்யக்கூடாது என்றும் அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் பறவைகள் கூட்டில் உறங்கி கொண்டிருக்கும்போது கல்லெறிந்து அவற்றைக் கலைப்பதையும் அன்னார் கண்டித்துள்ளார்கள். இதேபோன்று கருணையுடனும் இரக்கத்துடனுமே எல்லா உயிரினங்களுடனும் நபிகளார் நடந்து கொண்டார்கள்.

அன்னாரின் கருணை, இரக்க பண்புகள் முழு மனித சமூகத்திற்கும் சிறந்த முன்மாதிரியாகும். எல்லா உயிர்களுடனும் இரக்கமாகவும், கருணையாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்ற மனித பண்பையே இஸ்லாம் பெரிதும் வலியுறுத்தி இருக்கிறது. அதற்கேற்ப வாழ்வொழுங்கை அமைத்துக் கொள்வது ஒவ்வொரு இறைவிசுவாசியின் பொறுப்பாகும்.

**அப்துல் ரஹ்மான்...**

## போட்டிப் பொருளாதாரத்துடன் முன்னோக்கிச் செல்ல

# டிஜிட்டலுக்கான மாற்றத்தை துரிதப்படுத்துவது அவசியம்

## பட்ஜெட் உரையில் நாட்டுக்கு திட்டம் முன்வைப்பு



உலகின் போட்டிப் பொருளாதாரத்துடன் முன்னோக்கிச் செல்வதற்கு இலங்கையைத் தயார்படுத்தும் வகையில் டிஜிட்டல் பொருளாதார மாற்றம் துரிதப்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

இது தொடர்பான திட்டத்தை எதிர்வரும் வரவு செலவுத் திட்ட உரையில் நாட்டுக்கு முன்வைப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, இவ்வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான சட்டங்களைக் கொண்டு வர எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

கொழும்பு மொனார்க் இம்பீரியல் ஹோட்டலில் (25) பிற்பகல் நடைபெற்ற "தேசிய தகவல் தொழில்நுட்ப விருது வழங்கும் விழா – NBQSA 2023" நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

உள்நாட்டைச் சேர்ந்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் சிறந்த தகவல் தொழில்நுட்பத் தயாரிப்புகள் மற்றும் புத்தாக்கங்களுக்கு உயர் அங்கீகாரம் வழங்குவதற்காகவும், அவர்களின் தகவல் தொழில்நுட்பத் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கான தளத்தை உருவாக்கவும், தகவல் தொழில்நுட்ப பட்டய நிறுவனமான பிரிட்டிஷ் கணினி சங்கத்தின் இலங்கைப் பிரிவினால் ஆண்டுதோறும் இந்த விருது விழா நடத்தப்படுகின்றது.

மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதாவது: டிஜிட்டல் பொருளாதாரத்திற்காக பயிற்றுவிக்கப்பட்ட மனித வளம் எமக்கு அவசியப்படுகின்றது. அதனால் அந்த துறையில் பயிற்றுவிக்கப்பட்ட பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகள் உள்ளிட்ட திறன்மிக்க மனித வளத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

இது, நாம் முகம்கொடுக்க உள்ள பிரதான சவால்களில் ஒன்றாக அமையும். அதேபோல் தகவல் தொழில்நுட்பத் துறைக்குள் மனித மூலதனத்தை எவ்வாறு அதிகரிக்க முடியும் என்பது குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

# 'பலஸ்தீனப் பிரச்சினை என்பது அந்நாட்டுக்குரிய பிரச்சினை மாத்திரமல்ல'

## கலாநிதி அம்ஜத் தெரிவிப்பு

பலஸ்தீனம் சம்பந்தமாக பல நாடுகளும் தமது நிலைப்பாட்டினை உத்தியோகபூர்வமாகத் தெரிவித்து வரும் இவ்வேளையில், பலஸ்தீனம் என்ற நாடு 1967 ஆம் ஆண்டு ஐ. நா வின் தீர்மானத்திற்கேற்ப சுதந்திர மூச்சு விடவேண்டும் என்ற சவூதி அரேபியாவின் நிலைப்பாடு பல சர்வதேச அரங்குகளில் தொடர்ந்தும் உறுதிப்படுத்தப்பட்டு வருவதனை சவூதி அரேபிய ஆய்வுகளுக்கான ஆர்வலர் கலாநிதி அம்ஜத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், வளைகுடா நாடுகளுக்கான ஒத்துழைப்புக் கவுன்சிலில் அங்கம் வகிக்கும் நாடுகளின் இஸ்லாமிய விவகாரங்களுக்கான அமைச்சர்களின் ஒன்பதாவது உச்சி மாநாடு நேற்று முன்தினம் (25) ஓமானின் தலைநகர் மஸ்கட் இல் நடைபெற்றது. பலஸ்தீனத்தின் தற்போதைய நிலை பற்றி இதன் போது ஆழமாக விவாதிக்கப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்த சவூதி அரேபிய இஸ்லாமிய விவகாரங்களுக்கான அமைச்சர் கலாநிதி அப்துல் லத்தீப் ஆலுஸ் ஷேய்க்; "பலஸ்தீனப் பிரச்சினை என்பது; பலஸ்தீன மக்களுடன் சுருங்கிய அவர்களுக்கு மாத்திரமான பிரச்சினையாகக் கருத முடியாது. மாறாக அது, அரேபிய சமூகம் மற்றும் முஸ்லிம் உம்மத்தாகிய எம் அனைவரினதும் பிரச்சினையாகும்" எனத் தெரிவித்ததனையும் இங்கே சுட்டிக்காட்டினார்.

பலஸ்தீனப் பிரச்சினையை பலஸ்தீன மக்களுடன் சுருக்கி அவர்களைத் தனிமைப்படுத்த இஸ்ரேலும் சில மேற்கத்திய அரசுகளும் முயற்சித்து வருகின்றன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

# உலக முத்தமிழ் மாநாடு இறம்பொடையில்



அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவையும் உலக முத்தமிழ்க் கூட்டமைப்பும் இணைந்து நடத்தும் உலக முத்தமிழ் மாநாடும் அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவைக் குழுமங்களின் இரண்டாம் ஆண்டு விழாவும் நாளை 28ஆம் திகதியும் நாளை மறுதினம் 29 ஆம் திகதியும் இரண்டு தினங்களில் இறம்பொடை (நுவரெலியா) தொண்டமான் கலாச்சார மண்டபத்தில் நடைபெறஉள்ளது. இதொகாவின் தலைவரும் ஆளுநருமான செந்தில் தொண்டமான், மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் சதீஷ்குமார் சிவலிங்கம், உலக முத்தமிழ்க் கூட்டமைப்பின் நிறுவுநர் முனைவர் தாழை இரா. உதயநேசன், உலக முத்தமிழ்க் கூட்டமை ப்பின் பொதுச் செயலாளர் முனைவர் இரா. குறிஞ்சிவேந்தன் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர். இந்திய பல்கலைக்கழக துணைவேந்தர்கள், இலங்கை இந்திய பல்கலைக்கழக பேராசிரியர்கள், இலக்கிய ஆளுமைகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

### மின்சாரம், மின் போக்குவரத்து...

எனினும், இக்கண்காட்சி மற்றும் மாநாட்டை மார்ச் 22,23,24 வரை ஒத்தி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையிலான ஒருங்கிணைந்த நடவடிக்கை குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஆலோசணைக்கு அமைய, பரந்தளவிலான சர்வதேச பங்கேற்பு, பங்களிப்பை பெறுவதற்கு போதிய கால அவகாசத்தைப் பெறுவதற்காகவே கண்காட்சியை மார்ச் வரை ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன மற்றும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தலைமையிலான கண்காட்சி ஏற்பாட்டுக் குழு சர்வதேச பொதுப் போக்குவரத்து தினத்தை நவம்பர் 10ஆம் திகதியும், உலக நிலையான போக்குவரத்து தின மாநாட்டை நவம்பர் 26 ஆம் திகதியும் கொழும்பில் நடத்த தீர்மானித்துள்ளது. இலங்கையில் 2024 ஆம் ஆண்டை மின்இயக்க (e mobility) ஆண்டாக பெயரிடும் கருத்துடன் இணைந்ததாக நடத்துவதே, இக்கண்காட்சியின் முக்கிய நோக்கமாகும்.மேலும், நாட்டின் மின்சார, மின்சார போக்குவரத்து துறைக்கு உள்ளூர் மற்றும் சர்வதேச கவனத்தை ஈர்க்கும் நோக்கிலும் இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கண்காட்சியின் மூலம், உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு பாரிய வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை உருவாக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.



MDV எனும் புகைப்பட கலைஞர்களின் நவராத்திரி விழா (ஆயுத பூஜை) கொழும்பு 13, ஜிந்துபிட்டியில் அமைந்திருக்கும் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. இப்பூஜையில் பிரதம அதிதிகளாக புத்தக பூங்காவின் தலைவர் புரவலர் ஹாசிம் உமர், முன்னாள் கொழும்பு மாகாண சபை உறுப்பினர் ஜோசப் பெர்னாண்டோ, புதிய அலைகலை வட்ட ஸ்தாபகர் ராதா மேத்தாவுடன் இன்னும் பலர் இவ்விழாவை கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### சிவனொளிபாத யாத்திரை...

உச்சிக்கு புனிதப்பெட்டியும் சுமன சமன் கடவுளின் சிலையும் எடுத்துச் செல்லப்படவுள்ளது. இந்த ஏற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வணக்கத்துக்குரிய பெங்கமுவே ஸ்ரீ தம்மதின்ன தேரர், அடியார்கள் சிலரின் நடத்தைகளால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் அழிவுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளன. அதேவேளை, அடியார்கள் தமது வழிபாட்டு முறைகளை பாதுகாப்பான முறையில் முன்னெடுப்பதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

### சிறு, மத்தியத்தர மக்களுக்கென...

தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"இலங்கை இயற்கை அம்சங்களுடன் கூடிய, காலநிலை வலயங்கள், இயற்கை வளம் என்பவற்றை நிறைவாக கொண்ட அழகிய நாடாகும். பெறுமதியான கனிய வளங்களும் உலகில் இயற்கை அனர்த்தங்கள் குறைந்த நாடாகவும் இலங்கை காணப்படுகிறது.

எமது நாட்டின் மிகப் பெறுமதியான வளமான காணிகளே காணப்படுகின்றன. சனத்தொகை அதிகரிப்பினால் காணிகளுக்கான பெறுமதியும் அன்றாடம் அதிகரிக்கிறது.

### எரிபொருள் உட்பட சேவைகளை...

வழங்கப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.இந்த வகையில் எரிபொருள் உள்ளிட்ட கப்பலுக்கான சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கே இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இந்து சமுத்திரத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வு நடவடிக்கைகளுக்காகவே இக்கப்பல் இலங்கைக்கு வர அனுமதி கோரியிருந்தது.

நாரா நிறுவனத்தோடு இணைந்து ஒருவார காலத்துக்கு மாத்திரம் இந்து சமுத்திர நீர் தொடர்பில் விசேட ஆய்வுகளை மேற்கொள்வதற்கு உத்தேசித்திருப்பதாக நாரா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்து சமுத்திரத்தை அண்டிய பகுதிகளில் ஏற்பட்டுவரும் காலநிலை மாற்றம் தொடர்பிலான ஆய்வுகளை இந்தக் கப்பல் மேற்கொள்ளவுள்ளது.

2010 முதல் இந்த ஆய்வு நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வந்தது. 2019ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலையடுத்து இந்நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

### கல்வி அமைச்சு முன் ஆர்ப்பாட்டம்...

(24) பத்தரமுல்லையில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். இதன்போது அதனைக் கலைப்பதற்காக பொலிசார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த் தாரை பிரயோகங்களை மேற்கொண்டிருந்தனர்.

இதனால்,ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பலர் காயமடைந்திருந்தனர். இச்சம்பவம் தொடர்பிலேயே கல்வி அமைச்சு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் சம்பள முரண்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக கல்வி அமைச்சு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொண்டிருந்த போதே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது. இதன் போது பாதிக்கப்பட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கல்வி அமைச்சு தனது வருத்தத்தையும் கவலையையும் தெரிவித்துக் கொண்டுள்ளது.

### வீதி விபத்துக்கள்;...

விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த வருட விபத்துக்களில் 18 வயதுக்கு உட்பட்ட 129 சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஒக்டோபர் 15 வரையான காலத்தில் 115 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். இது சிறுவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள பெரும் அநீதியாகும். மோட்டார் சைக்கிள் விபத்துக்களிலே அதிகளவில் சிறுவர்கள் உயிரிழக்கின்றனர்.

தாய், தந்தையினர் தலைக்கவசம் அணிந்தாலும் பிள்ளைகளுக்கு அணிவிப்பதில்லை. இதனால் தலையில் அடிபட்டு சிறுவர்கள் உயிரிழக்கின்றனர்.

அண்மைக் காலங்களில் இதுபோன்ற பல விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

இதனை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### துறைமுக நகர E.C.சட்ட...

மூன்று முறைகளின் கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பது இங்கு தெரியவந்தது.

கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு உருவாக்கப்பட முன்னரான காலம், கொழும்பு துறைமுக நகரம் அமைக்கப்பட்ட காலம் மற்றும் துறைமுக நகரம் அமைக்கப்பட்ட பின்னர் என மூன்று சந்தர்ப்பங்களில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தங்கள் சட்ட ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாக, ஒரு முறைமையின் கீழ் கைச்சாத்திடப்படவில்லையென்பதைக் குழு சுட்டிக்காட்டியது. இதனால், இது தொடர்பில் நான்கு வாரங்களுக்குள் சட்டமா அதிபரின் நிலைப்பாட்டைக் குழுவுக்குத் தெரியப்படுத்துமாறும் குழு பரிந்துரைத்தது. இப் பிரதேசத்துக்குள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் கட்டுமானங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதன் அவசியத்தையும் குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

### ஒன்மெக்ஸ் பணிப்பாளர் மூவரின்...

சொத்துக்களை விற்பனை செய்தல் மற்றும் கை மாற்றுதல் என்பவற்றுக்கே இத்தடை விதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் நீதவான் பிரசன்ன அல்விஸ் காணி பதிவாளர் அலுவலகத்துக்கு நேற்று இந்த தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார். 08 காணிகளை தடை செய்து கண்டி மற்றும் குருநாகல் காணி பதிவாளர்களுக்கு மஜிஸ்திரேட் நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். ஒன்மெக்ஸ் தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர்களான அதுல சம்பத் சேம் என்ற பிரசன்ன சதுரங்க சமரகோன் மற்றும் சாரங்க ஜயநாத் ஆகியோருக்குச் சொந்தமான சொத்துக்களே இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் சட்டவிரோதமாக சம்பாதித்துள்ள பணத்தில் இச்சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களம் நிதி முறைகேடு சட்டத்தின் கீழ் முன்னெடுத்து வரும் விசாரணைகளுக்கு இணங்கவே, நீதிமன்றத்திடம் இந்த உத்தரவைக் கோரியுள்ளது. கடந்த செப்டெம்பர் மாதம் ஒன்மெக்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரான சம்பத் சந்தருவன் என்பவருக்கு சொந்தமான 63 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை நீதிமன்றம் தடை செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது. 20 காணிளை தடைசெய்து களுத்துறை, ஹம்பாந்தோட்டை, கடவத்தை காணிப் பதிவாளர்களுக்கு நீதவான் இதற்கான உத்தரவைப் பிறப்பித்திருந்தார். சந்தேக நபருக்கு சொந்தமான மேற்படி சொத்துக்களில், ஒரே தினத்தில் 08 காணிகளை அவரது மனைவிக்கும் மேலும் 12 காணிகளை அவரது நண்பருக்கும் வழங்கியுள்ளதாக குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களம் நீதிமன்றத்திடம் விடயங்களை சமர்ப்பித்திருந்தது. மாத்தறை பிரதேசத்தில் 6 காணிகளும், ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் 2 காணிகளும், களுத்துறை பிரதேசத்தில் 10 காணிகளும், கடவத்தை பிரதேசத்தில் 2 காணிகளும் இவ்வாறு தடை செய்யப்பட்டன.

## இன்றைய பலன்கள்

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)



**மேஷம்:**

கவலை தீரும். தொழில் மேன்மையாக இலாபகரமாக நடைபெறும்.எந்த வேலையும் கடின உழைப்புக்குப் பின்தான் பலம் தரும்.

**ரிஷபம்:**

அரசாங்க காரியங்கள் சாதகமாக முடியும். புதிய வீடு, மனை வாங்கும் யோகமும் உண்டு. கலைத் துறையில் உள்ளவர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

**மிதுனம்:**

வீடு கட்டும் பணிகள் விரைவாக முடியும். புதிய மனை வீடு வாங்கும் யோகம் ஏற்படும். எந்த பிரச்சினைகளையும் தைரியத்துடனும் சாதுரியமாகவும் சமாளிப்பீர்கள்.

**கடகம்:**

அரசாங்க காரியங்கள் சாதகமாக முடியும். பேச்சில் துணிச்சல் இருக்கும். வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு நல் வாய்ப்புக்கள் கிடைக்கும்.

**சிம்மம்:**

உங்கள் மதிப்பும் கௌரவமும் அதிகரிக்கும். முக்கியஸ்தர்களின் நட்பு கிடைக்கும். அரசியல்வாதிகள் உதவுவார்கள்.

**கன்னி:**

உங்கள் சந்தோசம் அதிகரிக்க செய்யும். புதிய ஆடை ஆபரணச் சேர்க்கை ஏற்படும். சுபச் செலவுகள் கூடும்.

**துலாம்:**

பண வரவு தாராளமாக இருக்கும். தொழில்கள் நன்றாக நடக்கும். அரசாங்க ஆதரவும் உண்டு. தெய்வ தரிசனம் உண்டு.

**விருச்சிகம்:**

அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு மனை வாங்கும் யோகம் உண்டு. வெளிநாட்டு வேலை திருப்தியாக இருக்கும்.

**தனுசு:**

பதவி உயர்வும் சம்பள உயர்வு கிடைக்கும் வாய்ப்புண்டு. வெளிநாட்டு வேலை கிடைக்கும். கணவன் மனைவி உறவுகள் நல்லவிதமாக இருக்கும்.

**மகரம்:**

உத்தியோகத்தில் புதிய திருப்பம் காண்பர். சிலருக்கு பதவி உயர்வோடு வெளியூர் மாற்றம் கிடைக்கக் கூடும் .

**கும்பம்:**

நினைத்த காரியங்கள் நிறைவேறும். கணவன் மனைவி உறவுகள் அன்பு கொண்டதாக இருக்கும். நண்பர்களால் ஆதாயம் உண்டு.

**மீனம்:**

ஆழ்ந்து உங்கள் மனது சொல்வதைக் கேளுங்கள் அவசரமோ படபடப்போ வேண்டாம். பணப் பற்றாக்குறை இருக்காது.

### போர்வை முஹியத்தீன்... (04ஆம் பக்கத் தொடர்)

இவ்வாறு வியாபார நோக்கமாக வந்த ஒருவர் இன்றுள்ள ஸியாரம் இருக்கும் இடத்தில் 'மீஸானை சுற்றி பல தென்னை மரங்கள் இருப்பதை கண்டுள்ளார். அதனை அடிப்படையாக வைத்து அல்லாஹ்வின் நல்லடியார் ஒருவர் இங்கு அடக்கம் செய்யப்பட்டிருப்பதை அவர்கள் ஊர்ஜிதப்படுத்திக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து மாரம்ப, பள்ளியாவத்த நில்வளா கங்கையின் மறுபக்கமாக வாழ்ந்த மக்கள் படிப்படியாக இப்பக்கமாக குடியேறத் தொடங்கினர்.

இதேவேளை முஸ்லிம்கள் இவ்விடத்திற்கு 'ஸியாரத்' (தரிசனம்) செய்ய வந்ததன் காரணமாக வெளியிடங்களிலும் இத்தலம் பிரசித்தி பெற வாய்ப்பு ஏற்பட்டது. அத்தோடு இப்பெரியாரின் பெயரில் வருடாந்தம் ரபீஉல் ஆகிர் 11 ஆம் நாள் கந்தூரி வைபவம் நடத்தப்பட ஆரம்பமானது. இங்கு வருபவர்கள் நேர்த்தியாக ஸியாரத்தை மூடுவதற்காக துணிகளை (போர்வை) கொண்டு போர்த்துவது வழக்கமாகிவிட்டது. அதன்பின் அப்பகுதியை போர்வை என்றழைக்க ஆரம்பித்து இன்றும் போர்வை என்றே ஆகிவிட்டது. இக்கந்தூரி வைபவம் சிறப்பாக நடத்தப்பட அத்துரலிய பிரதேச செயலாளரின் ஒத்துழைப்போடு பள்ளிவாசல் நிர்வாகம் அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### லங்கன் எயார் லைன்ஸ்...

நடவடிக்கைகளின் நிறைவில், ஒரு நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

### Milco தலைவர் உட்பட பணிப்பாளர்...

பேரில் கைது செய்துள்ளனர். அவர்களை கைது செய்த பின்னர் மேற்படி அலுவலகத்தில் தடுத்து, வைக்கப்பட்டிருந்த தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையினரை விடுவிக்க முடிந்ததாக கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

### பூநகர் சிவன்கோவில்...

மோட்டார்சைக்கிள், வேகக் கட்டுப்பாட்டையிழந்து விபத்துக்குள்ளானதாகவும் ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்ட இவர் பூநகர் சிவன்கோயிலில் பூசகராக பணி புரிபவரெனவும் ஈச்சிலம்பற்று பூநகர் பகுதியில் வசித்து வரும் கே.கஜரூபன் (34வயது) எனவும் தெரியவருகிறது. உயிரிழந்த பூசகரின் சடலம் ஈச்சிலம்பற்று பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

### ஒன்லைனில் கட்டண வசதி...

மேற்கொள்வதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். இதன்படி, நாடளாவிய ரீதியில் உள்ள 341 உள்ளூராட்சி நிறுவனங்களிலும் அடுத்த வருடம் முதல் உரிய வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்துள்ளார்.

### 25 வயதைக் கடந்த...

தெரிவிக்கையில், பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு மரணமடைவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ் மொழியில் பாடசாலை...

மூல பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாக அமைய வேண்டுமென்பதே தன்னுடைய எதிர்பார்ப்பாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். யாழ். மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள திறன் (ஸ்மார்ட்) வகுப்பறையை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். கல்லூரியின் பழைய மாணவனான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்வி கற்ற காலத்தில் அர்த்தம் புரிந்து கொள்ளாமல் கல்லூரி கீதத்தை மனனம் செய்து பாடியதாக தெரிவித்தார்.

### முன்னாள் இராணுவத் தளபதி...

பெற்று வந்த நிலையில், தனது 75ஆவது வயதில் நேற்று வியாழக்கிழமை காலை (26) காலமானார். இலங்கை இராணுவத்தின் பீரங்கி படையின் சிரேஷ்ட அதிகாரிகளில் ஒருவரான ஜெனரல் எல்.பி பலகல்ல கடந்த 2000 முதல் 2004ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இராணுவத்தின் 16ஆவது தளபதியாக கடமையாற்றிய அதேசமயம், பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரியாகவும் சேவையாற்றினார். அன்னாரது பூதவுடல் தற்போது இல. 21/12 சமனல வீதி, கொத்தலாவல, கடுவெல என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ளது. அன்னாரது இறுதிக்கிரியை இராணுவ மரியாதையுடன் எதிர்வரும் 28 சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு பொரளை பொது மயானத்தில் நடைபெறவுள்ளதாக இராணுவ தலைமையகம் அறிவித்துள்ளது.

### சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு...

மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் எந்தளவு சாத்தியமாக முன்னெடுக்கப்பட்டன என்பதில் சிக்கல்கள் உள்ளன. அந்த வகையில் புதிய அமைச்சரின் தலைமையில் இன்று நடைபெறவுள்ள இந்த பேச்சுவார்த்தையில் சுகாதாரத் துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொள்வதற்கு கவனம் செலுத்தப்படவுள்ளது.

# ஊடகத்துறை கொள்கை சட்ட உருவாக்கம் மட்டக்களப்பில் விசேட கலந்துரையாடல்

(கல்லடி குறூப் நிருபர்)



ஊடகத்துறைக்கான கொள்கை சட்டமொன்றை உருவாக்குவது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று மட்டக்களப்பில் நேற்று நடைபெற்றது. அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கிணங்க, வெகுசன ஊடக அமைச்சு, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்துடன் (UNDP) இணைந்து இலங்கையில் தேசிய ஊடகக் கொள்கைக்கான கட்டமைப்பொன்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுவருகின்றது.அதற்கமைய, வெகுசன ஊடக அமைச்சினால் கல்வியாளர்கள் மற்றும் ஊடகத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களை உள்ளடக்கி வழிநடத்தல் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இக் குழு பல சந்தர்ப்பங்களில் கூடி விசேட குழுக் கலந்துரையாடல்கள் மூலம் தேசிய ஊடகக் கொள்கையை உருவாக்கும் செயல்முறையில் அனைத்து பங்குதாரர்கள் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள முடிவு செய்துள்ளது. அதற்கமைவாக வெகுசன ஊடக அமைச்சின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களை சேர்ந்த ஊடகவியலாளர்களுடனான விசேட கலந்துரையாடலொன்று நேற்று காலை 9.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளர் டீ.எல்.யூ.பீரீஸ் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தின் மொழி மற்றும் தொடர்பாடல் கற்கைகள் துறைத்தலைவர் கலாநிதி வி.ஜே.நவீன்ராஜ், கிழக்கு பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.சிவபிரியா, வெகுஜன ஊடக அமைச்சின் பணிப்பாளர் (அபிவிருத்தி) டபிள்யூ.பீ.செவ்வந்தி, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் இலங்கை பத்திரிகை பேரவையின் தலைவருமாகிய மஹிந்த பத்திரன, மட்டக்களப்பு மாவட்ட ஊடகப்பிரிவின் பொறுப்பதிகாரி வ.ஜீவானந்தன், வெகுசன ஊடக அமைச்சின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) ஊடகம்சார் விசேட நிபுணர் சதுரங்க அப்புவாராச்சி, உயரதிகாரிகள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

## 2024 ஆம் ஆண்டிற்கான சபைக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு விடல்

### மெதிரிகிரிய பிரதேச சபை

மெதிரிகிரிய பிரதேச சபைக்கு சொந்தமான சொத்துக்கள் (மீன்தட்டு/ வாரச்சந்தை/வாகன நிறுத்துமிடம்) களில் வர்த்தக உரிமையை 2024.01.01 முதல் 2024.12.31 வரை (2024ம் ஆண்டிற்கு) குத்தகைக்கு விடுவதாகவும், மெதிரிகிரிய பஸ் நிலையம் அருகில் தற்காலிக கடை அறைகளை 03 வருடத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காகவும் தற்போது குத்தகைக்கு வழங்கப்படாத ஏனைய கடை அறைகளை 2029.12.31 வரை குத்தகைக்கு விடுவதற்காக என்னால் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| விலைமனுக்கள் விநியோகித்தல் | : 2023.11.08 முதல் 2023.11.15 வரை (மு.ப.8.30 முதல் பி.ப.1.00 வரை மட்டும்) |
| விலைமனுக்கள் ஒப்படைத்தல் | : 2023.11.16 மு.ப. 10.00 வரை |
| விலைமனுக்கள் திறத்தல் | : 2023.11.16 மு.ப. 11.00 வரை |

குறித்த சொத்துக்கள் மற்றும் சகல விபரங்களையும் வார நாட்களில் அலுவலக நேரங்களில் அலுவலகத்திற்கு வருகைதந்து அல்லது இல 0272248842 மற்றும் 0707886885 என்ற தொ.பே இலக்கங்களின் மூலம் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**2023 ஒக்டோபர் 27ம் திகதி**
**மெதிரிகிரிய பிரதேச சபை**

**வை.பீ.எச்..ஜயசாந்தி**
**செயலாளர் மற்றும் செயற்பாடுகளை**
**மேற்கொள்ளும் அதிகாரி**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2023.10.25
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5278
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 36,205,528.00
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 6 1 6 0 4 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3520 சீட்டிழுப்பு திகதி 2023.10.25
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,486,680.80
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 03 24 42 49 விசேட எழுத்து D
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 73536

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1626 2023.10.25
50584
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 412,022,800.00
ஆங்கில எழுத்து C சுப்பர் இலக்கம் 09 வெற்றி இலக்கங்கள் 41 56 69 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

லக்கி 7 Lucky லக்கி
திகதி 2023.10.25
சீட்டிழுப்பு இலக்கம் 0104
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 7 8 2 4 9 1
L7 இலக்கம் 2 2
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,950,022.56

ராசி சுப பலன்
திகதி 2023.10.25 சீட்டிழுப்பு இலக்கம் 587
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,000,000.00
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 04 31 32 58 விசேட இலக்கினம் தனுசு

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1308 2023.10.25
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 117,148,144.80
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 16 29 49 55 விசேட எழுத்து J
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 40198

## கேள்விகளுக்கான அழைப்பு

### இலங்கை பொலிஸ்

01. கீழ்க்காணும் பெறுகைக்காக தகைமையும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை பொலிஸ் சார்பாக திணைக்கள பெறுகைக்-குழுவின் தலைவர் பொறியிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

**பொருட்களின் உருப்படிகள்**

| தொடர் இல. | உருப்படி | எண்ணிக்கை | பெறுகை இலக்கம் | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி மற்றும் விலைமனு மூடப்படும் திகதி | விலைமனு பிணைத் தொகை இ. ரூபா | ஆவணக் கட்டணங்கள் | | பொது ஒப்பந்த சட்டத்தின் தேவைப்பாடுகள் (ஆம்/ இல்லை) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் (பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு) இ.ரூபா | பதிவு செய்யப்படாத வழங்குநர்கள் இ.ரூபா | |
| 01 | Cleaning & Maintenance of Criminal Investigation Department . (One year) | - | LA/S1/ 415/2023 | 16.11.2023 | 246,350.00 | 3,500.00 | 4,000.00 | Yes |
| 02 | Digital CCTV Camera & Equipment for Presidential Security Division | As per list | LA/S1/416/2023 | 16.11.2023 | 187,950.00 | 3,500.00 | 4,000.00 | Yes |
| **Transport Division** | | | | | | | | |
| 03 | Motor Spare Parts for Yamaha XT 250 Trail Bike | As Per List | LA/S1/TPT/81/2023 | 16.11.2023 | 176,670.00 | 3,500.00 | 4,000.00 | Yes |
| 04 | Batteries for Motor cycles & Three Wheelers 12V 35A (12V NS 40Z) | 250 Nos. | LA/S1/TPT/82/2023 | 16.11.2023 | 115,500.00 | 1,000.00 | 1,500.00 | Yes |
| 05 | Tyres for Miscellaneous Vehicles 750 x 16 (14PR) | 120 Nos. | LA/S1/TPT/83/2023 | 16.11.2023 | 91,700.00 | 1,000.00 | 1,500.00 | Yes |
| **Hospital Item** | | | | | | | | |
| 06 | Pasteurized Milk (450 ml) and Set Yoghurt Vanila Flavor for Narahenpita Police Hospital (01 Year) | 29,760 Pkts 3,600 Cup | LA/S1/PMS/33/2023 | 16.11.2023 | 78,250.00 | 1,000.00 | 1,500.00 | Yes |

**02. 2023.10.12ம் திகதி பத்திரிகைகளில் பிரசுரமான கீழ்க்காணும் உருப்படியின் விலைமனு ஆவணம் வழங்குதல் மற்றும் விலைமனு திறத்தல் கீழ்க்காணுமாறு நீடிக்கப்பட்டுள்ளது**

| தொடர் இல. | உருப்படி | எண்ணிக்கை | பெறுகை இலக்கம் | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி மற்றும் விலைமனு மூடப்படும் திகதி | விலைமனு பிணைத் தொகை இ. ரூபா | ஆவணக் கட்டணங்கள் | | பொது ஒப்பந்த சட்டத்தின் தேவைப்பாடுகள் (ஆம்/ இல்லை) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் (பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு) இ.ரூபா | பதிவு செய்யப்படாத வழங்குநர்கள் இ.ரூபா | |
| 01 | Breathalyzers (10 Tubes in 01 Packet) | 15000 Pkts. | LA/S1/375/2023 | 16.11.2023 | 1,177,900.00 | 12,500.00 | 13,500.00 | Yes |

02. தேசிய போட்டி விலைமனு முறைமையின் ஊடாக பெறுகை வழிகாட்டல் 2006இன் 3.2இன் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

03. பொது விடுமுறைகள் தவிர்ந்த வார நாட்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 03.00 வரை உருப்படிகளுக்கு வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரில் "பணிப்பாளர் வழங்கல்கள்" இடமிருந்து நிலையான விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யுமாறு ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

04. விலைமனுப் பிணையுடன் பூர்த்தி செய்யப்பட்ட விலை ஆவணங்களை மேலே குறிப்பிடப்பட்ட நாட்களில் பி.ப. 02.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கொழும்பு-01, பொலிஸ் தலைமையகம், 2ம் மாடி, கணக்காளர் - வழங்கல்கள் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

05. சாம்பிள்களை பி.ப. 01.00 மணி அல்லது அதற்கு முன்பு கொழும்பு-01, பொலிஸ் தலைமையகம், - வழங்கல்கள் பிரிவின் பிரதம இலிகிதரிடம் விலைமனு திறத்தல் திகதியின் பிரகாரம் கையளித்தல் வேண்டும். தாமதமான சாம்பிள்கள் ஏற்கப்படமாட்டாது.

06. சாம்பிள்களில் மொடல் பெயரைக் குறிப்பிடக்கூடாது.

07. பட்டியலின் பிரகாரம் "ஆம்" என்று குறிப்பிடப்படும் ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும் விலைமனுக்கள் ரூபா ஐந்து மில்லியனுக்கு மேற்படும் போது மேற்படி கடைசி நிரலில் குறிப்பிடப்பட்டது போன்று 1987 03ம் இலக்க அரச பொது ஒப்பந்த சட்டத்தின் மூலம் ஒன்லைன் பதிவின் மூலம் (eroc.drc.gov.lk) மாத்திரமான வழங்குநர்களாக இருத்தல் வேண்டும்.

08. ஒவ்வொரு விலைமனுதாரருக்கும் ஒரு விலைமனு ஆவணம் மாத்திரம் வழங்கப்படும்.

09. சம்பந்தப்பட்ட பெறுகைகளுடனான கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்படும் விலைமனுக் கூட்டம் நடைபெறும்.

| இல | உருப்படிகள் | கோவை இலக்கம் | திகதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| i. | Motor Spare Parts for Yamaha XT 250 Trail Bike | LA/S1/TPT/81 /2023 | 06.11.2023 - 10.00 am | பொலிஸ் தலைமையகம் தரைமாடி மாநாட்டு மண்டபம் |
| ii. | 250 Nos. Batteries for Motor Cycles & Three Wheelers 12V 35A (12V NS 40Z) | LA/S1/TPT/82 /2023 | 06.11.2023 - 10.20 am | |
| iii. | 120 Nos. Tyres for Miscellaneous Vehicles 750 x 16 (14PR) | LA/S1/TPT/ 83/2023 | 06.11.2023 - 10.40 am | |
| iv. | Pasteurized Milk (450 ml) pkts, Set Yoghurt Vanila Flavor for Narahenpita Police Hospital (01 Year) | LA/S1/PMS/ 33/2023 | 06.11.2023 - 11.00 am | |
| v. | Cleaning & Maintenance of Criminal Investigation Department . (One year) | LA/S1/ 415/2023 | 06.11.2023 - 11.20 am | |
| vi. | Digital CCTV Camera & Equipment for Presidential Security Division | LA/S1/416/2023 | 06.11.2023 - 11.40 am | |

10. ஆர்வம் காட்டும் தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் பின்வரும் முகவரி அல்லது தொலைபேசி இலக்கங்களில் இருந்து மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர்,**
**வழங்கல்கள் பிரிவு,**
**2ம் மாடி, பொலிஸ் தலைமையகம்,**
**கொழும்பு – 01.**

| | |
|---|---|
| கேள்விப் பிரிவு | - 011-2013116/3117 |
| ASP / வழங்கல்கள் | - 011-234915 / 071-8591955 |
| மாதிரிகள் (Sample) பிரிவு | - 011-2013711 |
| பெக்ஸ் இலக்கம் | - 011-2320729 |
| மின்னஞ்சல் | - dir.supplies@police.gov.lk |
| இணையதளம் | - www.police.lk |
| கம்பனி பதிவாளர் திணைக்களம் | - 011 2689215 |

**- பொலிஸ் மா அதிபர்**

LE/RE/208

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (HDFC வங்கி)

**(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான**

### பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்

**கடன் இலக்கம்: 601725000097 மற்றும் 601730000001**
**கடனாளியின் முழுப் பெயர்: கடுபிட்டி நுவன் சஞ்சய தி சில்வா.**

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு **2023.04.21** ஆம் திகதி **2329** ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியிலும் **2023.04.21** ஆம் திகதி **"தினமின", "தினகரன்" மற்றும் "டெய்லி நியூஸ்"** பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் **இலக்கம் 134, பெத்தகான வீதி, கோட்டே** என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர் பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் **2023.11.27ஆம் திகதி பி.ப.3.30** மணியில் இருந்து **கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில் அல்லது HDFC வங்கி ஜா-எல கிளையில்** பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

இலக்கம் **3989** திகதி - **30/12/2016**, இலக்கம் **4335** திகதி - **07/06/2018**ஆம் இலக்கங்களைக் கொண்ட அடகுப்பத்திரங்களின்படியும், இலக்கம் **4400** திகதி - **03/12/2018** மற்றும் இலக்கம் **4461** திகதி - **23/05/2019** ஆம் இலக்கங்களைக் கொண்ட துணை அடகுப்பத்திரங்களின்படியும், **ஆறு கோடி இருபத்து மூன்று இலட்சத்து தொன்னூற்று ஐந்தாயிரத்து நூற்று இரண்டு ரூபா ஐம்பத்து நான்கு சதம் (ரூபா 62,395,102.54) 2023.01.31**ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

01. **முதலாவது கடன் தொகை 601725000097**

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான அறுபத்து எட்டு இலட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து நாநூற்று தொன்னூற்று இரண்டு ரூபா தொன்னூற்று ஐந்து சதம் (6,856,492.95) 2023.01.31 ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள முப்பத்து மூன்று இலட்சத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து ஏழு ரூபா நாற்பத்து ஏழு சதத்தினையும் (ரூபா 3,304,987.47) இதன்படி முழுத் தொகையான **ஒரு கோடி ஒரு இலட்சத்து அறுபத்து ஓராயிரத்து நாநூற்று எண்பது ரூபா நாற்பத்து இரண்டு சதத்தினையும் (ரூபா 10,161,480.42)**

**இரண்டாவது கடன் தொகை 601730000001**

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான **மூன்று கோடி ஆறு இலட்சத்து இருபதாயிரத்து முந்நூற்று நாற்பத்து ஏழு ரூபா நாற்பத்து ஏழு சதம் (ரூபா.30,620,347.47) 2023.01.31** ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள **இரண்டு கோடி பதினாறு இலட்சத்து பதின் மூன்றாயிரத்து இருநூற்று எழுபத்து நான்கு ரூபா அறுபத்து ஐந்து சதத்தினையும் (ரூபா 21,613,274.65)** இதன்படி முழுத் தொகையான **ஐந்து கோடி இருபத்து இரண்டு இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து அறுநூற்று இருபத்து இரண்டு ரூபா பன்னிரெண்டு சதத்தினையும் (ரூபா 52,233,622.12)**

02. குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான **அறுபத்து எட்டு இலட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து நாநூற்று தொன்னூற்று இரண்டு ரூபா தொன்னூற்று ஐந்து (6,856,492.95)** சதத்திற்காக அறவிட வேண்டிய **16.63%** வீத வருடாந்த வட்டியினையும் இரண்டாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான **மூன்று கோடி ஆறு இலட்சத்து இருபதாயிரத்து முந்நூற்று நாற்பத்து ஏழு ரூபா நாற்பத்து ஏழு (ரூபா.30,620,347.47)** சதத்திற்காக அறவிட வேண்டிய **18.50%** வீத வருடாந்த வட்டியினையும், **2023.02.01** ஆம் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்கும்,

03. **2023.02.01**ஆம் திகதி தொடக்கம் ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்கூறப்பட்ட முதலாவது கடனின் மொத்த நிலுவைத் தொகையான **இரண்டு கோடி நான்கு இலட்சத்து எண்பத்து ஏழாயிரத்து எழுபத்து இரண்டு ரூபா ஐம்பத்து எட்டு (ரூபா 20,487,072.58)** சதத்திற்காக மாதாந்தம் **2.00%** வீத தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்வதற்கும்,

04. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை, அறவீடு செய்வதற்காகும்.

**கடன் இலக்கம் 601725000097 மற்றும் 601730000001**

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

01. மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், நீர்கொழும்பு காணிப்பதிவுப் பிரிவுக்கு உட்பட்ட இலக்கம் **145-B** மேற்கு முக்கலன்கமுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில், **கட்டான** பிரதேச செயலாளர் பிரிவில், மற்றும் கட்டுநாயக்க சீதுவ நகரசபை எல்லையில், அலுத்குருகோரளையில் தாசியப்பத்துவவில், முக்கலன்கமுவவில் அமைந்துள்ள பிஸ்கல்வத்த எனப்படும் வரிமதிப்பீட்டிலக்கம் 432 நீர்கொழும்பு பாதையில் அமைந்துள்ள காணிக்கு 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் **கே.டி.ஜி வீரசிங்ஹ** என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2380 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 236ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக **வடக்கே** இதே காணிவரைபடத்தின்படி 237 ஆம் இலக்க காணித்துண்டும் **கிழக்கே** இதே காணிவரைபடத்தின்படி 238 ஆம் இலக்க காணித்துண்டும் **தெற்கே** இதே காணிவரைபடத்தின்படி 338 ஆம் இலக்க காணித்துண்டும் **மேற்கே** இதே காணிவரைபடத்தின்படி 330 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு **பத்து பேர்ச்சஸ்கள் ஆகும் (ஏக். 0 ரூட் 0 பேச் 10) (0.0253) ஹெக்டயர்களாகும்.** இக் காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்தும் அடங்கலாக நீர்கொழும்பு காணிப்பதிவு காரியாலயத்தில் **H303/03** என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

02. **21.08.2018**ஆம் திகதி **1916** ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி காணித்துண்டு இலக்கம் 1 இல் குறிக்கப்பட்ட நிலத்தின் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட அனைத்து ஒதுக்கீடுகளும் முக்கலன்கமுவ கிராமத்தில் அமைந்துள்ள மரங்கள் பழவகைகள் மற்றும் அனைத்தும். பிஸ்கல்வத்த எனப்படும் காணியின் அனுமதிபெற்ற நில அளவையாளர் **வை.கே. சமரசிங்ஹ** என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட **2380**ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 279 மற்றும் 278 பகுதிகளால் காணித்துண்டு இலக்கம் 1இல் **வடக்கில்** எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. 2380 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி **கிழக்கே** 239 ஆம் இலக்க காணித்துண்டும், **தெற்கே** 338 ஆம் இலக்க காணித்துண்டும் (பாதைக்கான ஒதுக்கம் 20 அடி, கால்வாய் 0.60 மீ. அகலம்) மற்றும் அதே திட்டத்தில் காணித்துண்டு இலக்கம் 2 மற்றும் காணித்துண்டு இலக்கங்கள் 237 மற்றும் 280 ஆகும். இதன் பரப்பளவு **பத்து தசம் ஏழு ஏழு பேர்ச்சஸ்கள் ஆகும் (ஏக். 0 ரூட் 0 பேச் 10.77) (0.2724) ஹெக்டயர்களாகும்.** இக் காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்தும் அடங்கலாக நீர்கொழும்பு காணிப்பதிவு காரியாலயத்தில் **H364/109** என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

03. **21.08.2018** ஆம் திகதி **1916** ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி காணித்துண்டு இலக்கம் 2 இல் குறிக்கப்பட்ட நிலத்தில் அமைந்துள்ள மரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்தும் பிஸ்கல்வத்த எனப்படும் காணியின் அனுமதிபெற்ற நில அளவையாளர் வை.கே. சமரசிங்ஹ என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட **2380** ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி **கிழக்கே** 1 ஆம் இலக்க காணித்துண்டும் **தெற்கே** 338 ஆம் இலக்க காணித்துண்டும் (பாதைக்கான ஒதுக்கம் 20 அடி, கால்வாய் 0.60 மீ. அகலம்) மற்றும் **மேற்கே** இதே காணிவரைபடத்தின்படி 236 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு **இரண்டு பேர்ச்சஸ்கள் ஆகும் (ஏக்.0 ரூட் 0 பேச் 2.00) (0.00506) ஹெக்டயர்களாகும்.** இக் காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்தும் அடங்கலாக நீர்கொழும்பு காணிப்பதிவு காரியாலயத்தில் **H364/110** என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் பின்வரும் காணித்துண்டு பாதை என்றவகையில் பாவிப்பதற்கான உரிமையுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

04. மேல் மாகாணத்தில் மேற்குறிப்பிட்ட முக்கலன்கமுவவில் அமைந்துள்ள பிஸ்கல்வத்த என்ற காணிக்கு 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் **கே.டி.ஜி வீரசிங்ஹ** என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட **2380** ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி காணித்துண்டு இலக்கம் 338 (பாதை) பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது. **வடக்கே** காணித்துண்டு 236, மற்றும் 238ல் இருந்து 257 வரையிலும் **கிழக்கே** 334 ஆம் இலக்க காணித்துண்டும் **தெற்கே** காணித்துண்டிலக்கம் 213 இருந்து காணித்துண்டிலக்கம் 232 மற்றும் 235 வரை **மேற்கே** 330 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு மேற்குறிப்பிட்ட 2380ஆம் காணிவரைபடத்தின்படி **இரண்டு ரூட் பதினாறு தசம் ஒன்பது எட்டு பேர்ச்சஸ்களாகும். (ஏக்.0 ரூட் 2 பேச்16.98)** பொதுவாக பாதை என்ற வகையில் அதை பாவிப்பதற்கான உரிமையுடன் **2380** ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 334 மற்றும் 330 ஆம் இலக்க காணித்துண்டுகளில் உள்ள ஏனையவை அனைத்துடன் நீர்கொழும்பு காணிப்பதிவு காரியாலயத்தில் **H232/110** என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொது முகாமையாளர்**

திகதி - 20.10.2023

**இ.வீ.அ.நி. கூ. வங்கி**
**தே.வீ.அபி.அ.சபை கட்டிடம்**
**சேர். சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை**
**த.பெ.இல. 2085, கொழும்பு-02.**



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி. பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

**I. கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்குக.**

கடற்கரையில் சிறுவர்கள் பட்டாம் பூச்சிகளைப் போல் அங்கும் இங்கும் ஓடியாடி விளையாடிக்கொண்டிருந்தனர். அக்காட்சியை பெற்றோர்கள் இரசித்த வண்ணம் கடற்கரை மணலில் அமர்ந்திருந்தனர். சில சிறுவர்கள் மணல்வீடு கட்டி விளையாடினர். சிலர் கடல் அலைகளில் தம் கால்களை நனைத்து மகிழ்ந்தனர். சூரியன் தன் பொன்கரங்களை தன்னுள்ளே எடுத்துக் கொண்டு மறையத் தொடங்கினான்.

01. சிறுவர்கள் எங்கு மணல் வீடு கட்டினர்?

..................................................................................................

02. சிறுவர்களை இரசித்த வண்ணம் அமர்ந்திருந்தவர்கள் யாவர்?

..................................................................................................

03. இக்காட்சி ஒரு நாளில் எவ்வேளையைக் குறிக்கின்றது?

..................................................................................................

04. இப்பந்தியிலுள்ள உயர்திணை பன்மை பெயர்ச்சொல் இரண்டினை எழுதுக.

..................................................................................................

05. பிரித்தெழுதுக.

i. மணல் வீடு - ........................... ii. ஓடியாடி - ...............................

06. ஒத்தகருத்து எழுதுக.

i. கடல் - ...................................ii. சூரியன் - ...............................

**II.**

07. பின்வரும் வாக்கியத்தை இறந்தகால வாக்கியமாக மாற்றுக.

i. நான் நாளை விளையாடுவேன். - .............................................

08. ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

i. நீ சாப்பிட்டாயா - .............................................................

09. சரியாக எழுதப்பட்ட சொல்லைத் தெரிக.

i. பாகற்காய் / பாவக்காய் ii. வியர்வை / வேர்வை

10. பொருத்தமான பயனிலை சொல்லைத் தெரிக.

i. யானைக் கூட்டம் பயிர்களை (அழித்தன / அழித்தது)

ii. அதிகாலையில் காகங்கள் (கரைந்தது / கரைந்தன)

11. தொடர்மொழிக்கு தனிமொழி எழுதுக.

i. ஒருவர் தானே தன்னைப்பற்றிக் கூறுவது - ...................................

12. பசி - உணவு என்பது போல தாகத்துக்கு - ..........................................

13. வாழையின் இளையது குட்டி எனில் மாவின் இளையது - ..........................

14. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.

i. பெரியவரே ஓய்வெடுங்கள் - ..................................................

15. முகம் மலர்தல் எனும் மரபுத்தொடரின் கருத்து - ..................................

16. குருவி கீச்சிடும் அதுபோல ஆந்தை - ..............................................

17. எதிர்கருத்து தருக.

i. அண்மை - ............................. ii. வாய்மை - ..............................

18. சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.
i. வானொலி / ஒரு / ஊடகமாகும் / சிறப்பான / செவிப்புல

..................................................................................................

19. Please come to school every day இவ்வாக்கியத்தின் கருத்தினை தமிழில் எழுதுக.

..................................................................................................

20. கீழே படத்தில் காட்டப்பட்ட உருவங்களின் சிங்கள பெயர்களை தமிழில் எழுதுக.





i. ........................................ ii. ........................................

**III.**

21. 

இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

22. 

6cm

இந்த செவ்வகத்தின் நீளம், அகலத்தைப் போல இரண்டு மடங்கு எனில் இதன் சுற்றளவு யாது?

..................................................................

23. 

நிறம் தீட்டப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பங்கு?

..................................................................

24. 

இவ்வுருவில் எத்தனை சமச்சீர் அச்சுக்கள் உள்ளன?

..................................................................

25. 00 : 00 இந்த நியம நேரத்தை கடிகார முகத்தில் குறித்துக் காட்டுக.





26. இவ்வெண் சட்டத்தில் உள்ள எண்ணில் பத்தினிடத்து பெறுமானம் யாது?

..................................................





27. 2550g + 1450g இதனை kg இல் எழுதினால்? ..........................................

28. 500 இன் ¼ பங்குடன் 75 ஐக் கூட்டினால் வரும் விடை ...............................

29. 



இவ் இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகச்சிறிய எண் யாது?

..................................................................

**IV. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. நாம் நடந்து செல்லும் போது முதலில் நிலத்தில் பட வேண்டிய காலின் பகுதி
i. குதிகால் ii. உள்ளங்கால் iii. விரல்கள்

31. உடல் வளர்ச்சிக்குரிய உணவாக அமைவது?
i. சோறு ii. பயறு iii. பழங்கள்

32. மண்ணில் மண்வளியை அதிகரிக்க உதவும் பிராணி
i. மண்புழு ii. கரையான் iii. எறும்பு

33. வீட்டுத் தோட்டப் பயிர்செய்கையில் வேலிக்கம்புக்குப் பொருத்தமானது
i. இலவம் ii. பலா iii. கிளிசிறிடியா

34. கூடியளவு பயணிகளையும் பொருட்களையும் கொண்டு செல்ல பொருத்தமான போக்குவரத்துச் சாதனம்
i. பேருந்து ii. புகையிரதம் iii. லொறி

35. இலங்கையிலுள்ள இயற்கை துறைமுகம் அமைந்துள்ள இடமானது
i. திருகோணமலை ii. கொழும்பு iii. காலி

36. கொத்தாக பூக்கும் பூவகை அல்லாதது
i. தொட்டாச்சுருங்கி ii. முள்முருங்கை iii. செவ்வரத்தை

37. ஊசித்துளைக் கமராவின் திரையில் தோன்றும் விம்பம்
i. தலைகீழானது ii. நேரானது iii. சாய்வானது

38. மீனவனுக்கு வலை போன்று உழவனுக்கு
i. வயல் ii. கலப்பை iii. பயிர்

39. பௌத்த சமயத்தின் புனிதமரம்
i. தென்னை ii. பலா iii. வெள்ளரசு

40. பறக்க முடியாத பறவை
i. கொக்கு ii. கிவி iii. கோழி

41. மின்சாரம் பயணிக்காதது
i. இரும்பு கம்பியின் ஊடாக ii. செப்பு கம்பியின் ஊடாக
iii. நூலின் ஊடாக

42. இலங்கையில் வெப்பநிலை குறைவான நகரம்
i. நுவரெலியா ii. காலி iii. மாத்தறை

43. மிக விரைவில் உக்கக்கூடியது
i. பலகைத் துண்டு ii. பிளாஸ்டிக் iii. கண்ணாடி

44. இலங்கைக்கே உரித்தான தாவரம்
i. தேயிலை ii. தென்னை iii. நிலவேம்பு

45. திசையறி கருவி அதிகமாக தேவைப்படுவது
i. வைத்தியர்களுக்கு ii. விவசாயிகளுக்கு iii. கப்பல் ஓட்டிகளுக்கு

46. காற்றின் மூலம் பரம்பல் அடையும் தாவரம்
i. எருக்கலை ii. நாயுண்ணி iii. தென்னை

47. வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தின் முதற் பருவம் எது?
i. நிறையுடலி ii. முட்டை iii. குடம்பி

48. ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு தொற்றாத நோய்
i. நீரிழிவு ii. தடிமன் iii. சொறிசிரங்கு

49. இரவு நேரத்தில் பிரயாணம் செய்யும் போது அணிவதற்கு பொருத்தமான நிறம்
i. நீலம் ii. கறுப்பு iii. வெள்ளை

50. புத்தாண்டு காலத்தில் மருத்துநீரைப் பயன்படுத்துபவர்கள்
i. முஸ்லிம்கள் ii. இந்துக்கள் iii. கிறிஸ்தவர்கள்

51. சந்திரன் தோன்றாத நாள்
i. பௌர்ணமி ii. பூரணை iii. அமாவாசை

52. இலையின் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம்
i. குப்பைமேனி ii. பெகோனியா iii. வாழை

53. நீரில் முழுமையாக கரையாத பொருள்
i. சீனி ii. உப்பு iii. மஞ்சள் தூள்

54. காந்தம் கவராத பொருள்
i. குண்டூசி ii. ஆணி iii. ரெஜிபோம்

55. பாதுகாப்பற்ற ஒரு இடம்
i. புற்று ii. புல்வெளி iii. பாடசாலை

(09ஆம் பக்கம் பார்க்க)

(08 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

56. யானைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்
i. யால ii. கண்டி iii. பின்னவல

57. வேறொரு பிராணியின் கூட்டில் முட்டையிடும் பிராணி
i. காகம் ii. குயில் iii. ஆமை

58. இயற்கை பசளையானது
i. கூட்டுப்பசளை ii. யூரியா iii. அமோனியா

59 இலங்கையிலுள்ள மலைகளில் அதிஉயரமான மலை
i. இமயமலை ii. சிவனொளிபாதமலை iii. பிதுருதாலகால

60. ‘எமது நாடு இயற்கை வளம் மிக்கது’ என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருப்பதுடன் எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக பேணப்பட வேண்டும்.

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

## கடந்த வார (20.10.2023) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 2 | 11. 2 | 21. 3 | 31. 3 |
| 02. 1 | 12. 1 | 22. 1 | 32. 1 |
| 03. 1 | 13. 2 | 23. 1 | 33. 2 |
| 04. 3 | 14. 3 | 24. 2 | 34. 3 |
| 05. 1 | 15. 2 | 25. 3 | 35. 1 |
| 06. 1 | 16. 1 | 26. 3 | 36. 2 |
| 07. 3 | 17. 2 | 27. 1 | 37. 1 |
| 08. 2 | 18. 2 | 28. 2 | 38. 1 |
| 09. 2 | 19. 1 | 29. 1 | 39. 3 |
| 10. 1 | 20. 2 | 30. 2 | 40. 3 |

# யாழில் எட்டு அபிவிருத்தித் திட்டங்கள்; குழுத் தலைவராக சிவஞானம் நியமனம்





**யாழ். விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள எட்டு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயும் குழுவின் தலைவராக வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எச்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நேற்று வியாழக்கிழமை (26) நடைபெற்றது.

இதன்போது, நகர அபிவிருத்தி அதிகார சபையால் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள எட்டு திட்டங்கள் தொடர்பாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. இந்நிலையிலேயே, எட்டு அபிவிருத்தித் திட்டங்களை ஆராயும் குழுத் தலைவராக வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த எட்டு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து, அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், ஜனாதிபதியின் வடக்குக்கான இணைப்பாளர் மற்றும் அந்தந்த பிரதேச செயலாளர்கள் அடங்கிய குழு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்றும் இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கல்வி, சுகாதாரம், கால்நடை, விவசாயம், கமநல சேவை, போக்குவரத்து, காணி, நீர்வழங்கல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கேசிவஞானம், பொலிஸார், அரச திணைக்களத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வடக்கின் உதயம்

## கிளிநொச்சியில் இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு



**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி மாவட்டத்தின் இராமநாதபுரம், மாயவனூர் பிரதேசத்தில் அடி காயங்களுடன் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலத்தை நேற்று முன்தினம் புதன்கிழமை (25) இரவு பொலிஸார் மீட்டுள்ளனர்.

மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான நவரத்தினராசா மதுஸன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீதியில் கிடந்த இந்த சடலத்தை பொதுமக்கள் அடையாளம் கண்டு, இராமநாதபுரம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை தொடர்ந்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், சடலத்தை மீட்டுள்ளனர். இந்த சடலத்தின் வாய் மற்றும் காதிலிருந்து இரத்தம் வெளியேறிக் காணப்பட்டமையால், இவர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கலாமென, பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

### மாங்கொல்லையில் சில காணிகளை

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு உரியதெனக் கூறியதால் குழப்ப நிலை

**யாழ். விசேட நிருபர்**

யாழ். காங்கேசன்துறை, மாங்கொல்லை பிரதேசத்தில் தனியார் காணிகள் சிலதை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமானதென அதிகாரிகள் சிலர் நேற்று வியாழக்கிழமை (26) உரிமை கோரியதால், குழப்ப நிலை ஏற்பட்டது.

சுமார் 33 வருடகாலமாக இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த மாங்கொல்லையிலிருந்து இராணுவத்தினர் வெளியேறிய பின்னர், தமது காணிகளை அப்பிரதேச மக்கள் எல்லைப்படுத்துகின்றனர். இந்நிலையில், பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளாக தம்மை அடையாளப்படுத்திய சிலர் நேற்று மாங்கொல்லைக்கு சென்றதுடன், காணிகள் சிலதை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு உரியதெனவும் கடந்த 40 வருடகாலத்துக்கு முன்னர் காணி உரிமையாளர்களிடம் காணிகளை கொள்வனவு செய்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

இதற்கு பதிலளித்த அக்காணி உரிமையாளர்கள், தமது காணிகளை தாம் எவருக்கும் விற்கவில்லையென்பதுடன், இவை தமது காணிகளெனவும் தெரிவித்துள்ளனர்.

காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளதை ஏற்க மறுத்த அந்த அதிகாரிகள், இது தமது காணிகளென்பதற்கு உறுதியைக் காட்டி உறுதிப்படுத்துமாறு தெரிவித்துள்ளனர்.



இதற்கு காணி உரிமையாளர்கள், எதற்காக தாம் உறுதி காட்ட வேண்டுமென்பதுடன், தங்களின் காணி உறுதியை பரிசீலித்து தங்களது காணியை உறுத்திப்படுத்துமாறு அந்த அதிகாரிகளுக்கு தெரிவித்த போதே, குழப்பம் ஏற்பட்டதாக, காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

# முல்லைத்தீவில் இ.போ.ச. சாரதி மீது தாக்குதல்

**ஓமந்தை விசேட நிருபர்**

முல்லைத்தீவு, சிலாவத்தை பிரதேசத்தில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துச் சாரதி ஒருவர், ஹயஸ் வானில் பயணித்த ஒருவரால் கடந்த செவ்வாய்க்கிழமை (24) தாக்குதலுக்கு உள்ளாகியதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு நகரிலிருந்து சிலாவத்தையினூடாக மாங்குளம் நோக்கி பேருந்தை செலுத்திச் சென்ற இந்தச் சாரதி, சிலாவத்தையில் பேருந்தை இடைநிறுத்தி பயணிகளை ஏற்றிக்கொண்டிருந்தார். அவ்வேளையில் அங்கு ஹயஸ் வானில் பயணித்த ஒருவர், இ.போ.ச. சாரதி மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், தாக்குதலுக்கு உள்ளான சாரதி முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றதுடன், இந்த தாக்குதல் தொடர்பாக முல்லைத்தீவு வைத்தியசாலை பொலிஸாரிடமும் இவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவரை கைது செய்யும் நோக்கில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

### இலங்கை நிர்வாகசேவை தரத்துக்கு

# பருத்தித்துறை பிரதேச செயலாளர் நியமனம்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துக்கு பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அண்மையில் நியமனம் பெற்றுள்ளார்.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே இவரது நியமனம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலோலியை சேர்ந்த அவர், 1999ஆம் ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தராக மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இணைந்தார். இதன் பின் 2002ஆம் ஆண்டு உதவித் திட்டமிடல் பணிப்பாளராகவும் பணியாற்றினார்.

நானாட்டான், வவுனியா உதவிப் பிரதேச செயலாளராகவும் நெடுந்தீவு, நல்லூர் பிரதேச செயலாளராகவும் பணிபுரிந்து, 2017ஆம் ஆண்டு முதல் பருத்தித்துறை பிரதேச செயலாளராக பணிபுரிகின்றார்.

### யாழ். நகரில் தடைசெய்யப்பட்ட

# மீன்பிடி வலைகளுடன் கடை உரிமையாளர் கைது



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் நகரிலுள்ள கடையொன்றிலிருந்து 140 கிலோகிராம் நிறைகொண்ட தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளை யாழ். கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை (25) கைப்பற்றியுள்ளதுடன், இந்த மீன்பிடி வலைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் அக்கடை உரிமையாளரையும் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக தமக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து மேற்படி கடையில் சோதனை நடத்திய போது, தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளை கண்டுபிடித்துள்ளதாக, யாழ். கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை யாழ். கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

### புல்லறுத்தான்கண்டல் இடத்தை

# மேய்ச்சல் நிலமாக பிரகடனப்படுத்த கோரி மன்னாரில் ஆர்ப்பாட்டம்

**தலைமன்னார் விசேட, மன்னார் குறூப் நிருபர்கள்**




கட்டுக்கரைக்குளத்துக்குட்பட்ட புல்லறுத்தான்கண்டல் இடத்தை மேய்ச்சல் நிலமாக பிரகடனப்படுத்த வேண்டுமெனக் கோரி நானாட்டான் முசலி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் நேற்று வியாழக்கிழமை (26) ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையுடன் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், மெசிடோ நிறுவன இணைப்பாளர் யாட்சன் பிகிராடோ, நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மகஜரையும் கால்நடை வளர்ப்பாளர்கள் கையளித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் பல்வேறு கோஷங்களை எழுப்பியதுடன், பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

### அம்பாள்புரத்தில்

# 25 குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்



**பரந்தன் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பாள்புரம் பிரதேசத்தில் 25 குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்களை நேற்று அப்பிரதேச செயலாளர் றஞ்சனா நவரத்தினம் வழங்கி வைத்துள்ளார்.

அம்பாள்புரம் பிரதேசத்தில் நீண்டகாலமாக காணி ஆவணங்கள் எதுவுமின்றி வாழ்ந்த குடும்பங்களுக்கே காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அம்பாள்புரம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் காணி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

# லுக்மானியா மகா வித்தியாலயம் பங்கொள்ளாமட – அக்குறணை

## பாடசாலை அறிமுகம்










அக்குறணை நகரின் பங்கொள்ளாமட எனும் எழில் கொஞ்சும் கிராமத்தில் அமைந்திருக்கின்ற க/ லுக்மானியா மகா வித்தியாலயம் அக்குறணைப் பிரதேசத்தில் காணப்படும் ஒரு தொன்மை மிகு பாடசாலையாகும். இப்பாடசாலை அண்மைக் காலமாக பல்வேறு துறைகளிலும் துரித முன்னேற்றம் கண்டு வருகிறது.

லுக்மானியாவில் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமை காட்டி, சாதனை படைத்த மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் விருது வழங்கல் வைபவம் ((Award Ceremony 2023) அண்மையில்



அதிபர் திருமதி நுஸுஹதுன் நிஸா யூனுஸ் காதர்



பிரதம அதிதி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எம் ராசிக்



கௌரவ அதிதி வைத்தியர் பாத்திமா அஸ்ஹறா ரஹ்மதுல்லாஹ் (பாடசாலையின் பழைய மாணவி)

பாடசாலை வளாகத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலையின் பழைய மாணவிகளின் பூரண அனுசரணையில், அதிபர் திருமதி நுஸ்ஹதுன் நிஸா யூனுஸ் காதரின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றிருக்கின்ற, சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்கள், கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளில் திறமை காட்டிய மாணவர்கள், மீலாத்தின, தமிழ் மொழித் தின, ஆங்கில மொழித் தின, சமூக விஞ்ஞான, ஒலிம்பியாட் போன்ற போட்டிகளில் வலய மற்றும் மாகாண ரீதியில் வெற்றி

> ஒரு சமூகத்தின் கல்வி முன்னேற்றத்திற்கு மூன்று பிரதான தளங்களில் மாற்றம் தேவை அவை வீடு, பள்ளிவாசல், பாடசாலை என்பனவாகும். வீடுகளிலும், பள்ளிவாசல்களிலும் மாற்றம் ஏற்படும் பொழுது பாடசாலைகள் இயல்பாகவே முன்னேற்றம் காண்கின்றன. இலங்கையில் எந்தப் பிரதேசங்களில் வீடுகளும், பள்ளிவாசல்களும் கல்விக்குப் பங்களிக்கின்றனவோ அப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளின் முன்னேற்றம் மிக வேகமாகவும், சிறப்பாகவும் அமைந்திருக்கின்றன.

பெற்ற மாணவர்களும் இதன்போது பரிசில்கள் வழங்கப் பட்டும், பதக்கங்கள் அணிவிக்கப்பட்டும் கௌரவிக்கப் பட்டமை விசேட அம்சமாகும்.

கட்டுகஸ்தோட்டை கல்விப் பணிமனையின் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் பொறுப்பதிகாரி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எம் ராசிக் பிரதம அதிதியாகவும் லுக்மானியாவின் பழைய மாணவிகளில் ஒருவரான வைத்தியர் திருமதி பாத்திமா அஸ்ஹறா ரஹ்மதுல்லாஹ் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர். மேலும் பல சிறப்பு விருந்தினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டமை இவ்விழாவிற்கு மேலும் அழகு சேர்த்தது.

அதிபர் அவர்களின் உரையில்; தனது சேவைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்ற வேலை திட்டங்களை ஞாபகப்படுத்தியதுடன் அண்மைக்காலமாக பாடசாலை அடைந்து வரும் துரித வளர்ச்சி மகிழ்ச்சி அளிக்கிறது எனவும் கூறினார். மேலும் பரிசுகளும் பதக்கங்களும் பெறுகின்ற மாணவர்களைப் பாராட்டியதுடன், பாடசாலை சமூகம் ஒன்றுபட்டு செயல்படுவதன் மூலம் பாடசாலையை மேலும் முன்னேற்றமடையச் செய்ய முடியும் எனவும் கூறினார்.

லுக்மானியாவில் உயர்தர மாணவர்களுக்கு முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற உயர்தர கலைப்பிரிவு விஷேட வேலைத் திட்டம் (A/L Arts Special Project) அக்குறணைப் பிரதேசத்திற்கே முன்மாதிரியான ஒரு செயற்திட்டமாகும் என்பதனையும் அது முன்னேற்றப் பாதையில் நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பதனையும் ஞாபகப்படுத்தினார்.

விழாவின் கௌரவ அதிதி வைத்தியர் பாத்திமா அஸ்ஹறா ரஹ்மத்துல்லாஹ் அவர்கள் இந்நிகழ்வில் உரையாற்றும் போது; நான் ஒரு வைத்தியராக உருவாவதற்கான அடித்தளத்தை இப்பாடசாலையே அமைத்துத் தந்தது என்பதனை நன்றியோடு நினைவு கூறுவதுடன், ஒவ்வொரு மாணவரும் ஒரு குறித்த இலக்குடன் தொடர்ந்தேர்ச்சியாகவும் வேகமாகவும் செயற்படும் பொழுது வாழ்க்கையில் சாதனையாளர்களாக மிளிர முடியும் என்பதனை தனது கல்வி வாழ்க்கையின் அனுபவங்களை ஆதாரம் காட்டி தெளிவுபடுத்தினார். அத்தோடு பாடசாலையின் வளர்ச்சிக்கு எப்பொழுதும் பங்களிக்கத் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எம் ராசிக் தனது உரையில்; லுக்மானியாவின் அண்மைக்கால அடைவுகள் திருப்திகரமானதாக இருப்பதாகவும் அது தொடர்ந்தும் முன்னேற்றப்பாதையில் பயணிக்க எமது வழிகாட்டலையும் ஒத்துழைப்பையும் நல்குவதில் என்றும் முன்னிற்போம் எனவும் உறுதியளித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; ஒரு சமூகத்தின் கல்வி முன்னேற்றத்திற்கு மூன்று பிரதான தளங்களில் மாற்றம் தேவை. அவை வீடு, பள்ளிவாசல், பாடசாலை என்பனவாகும். வீடுகளிலும், பள்ளிவாசல்களிலும் மாற்றம் ஏற்படும் பொழுது பாடசாலைகள் இயல்பாகவே முன்னேற்றம் காண்கின்றன. இலங்கையில் எந்தப் பிரதேசங்களில் வீடுகளும், பள்ளிவாசல்களும் கல்விக்குப் பங்களிக்கின்றனவோ அப்பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளின் முன்னேற்றம் மிக வேகமாகவும், சிறப்பாகவும் அமைந்திருப்பதனை சுட்டிக்காட்டினார்.

எமது முன்னேற்றத்திற்கு மிக அடிப்படையான விடயம் ஒற்றுமையாகும். முஸ்லிம் சமூகத்தின் மிகப்பெரிய சக்தி இறை சக்திக்குப் பிறகு சமூகத்தின் ஒற்றுமை எனும் பலமாகும் எனக் கூறிய அவர், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களுடன் பெற்றோர், பழைய மாணவ மாணவியர்,



ஆசிரியர் குழாம்

தனவந்தர்கள், நலன்விரும்பிகள் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தைச் சேர்ந்த அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலம் பாடசாலையின் வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்தலாம் என்றார்.

இம்மேடையில் கௌரவிக்கப்படுகின்ற மாணவர்கள் அனைவருக்கும் இறையருள் கிட்ட வேண்டும் எனவும், இவர்கள் ஒவ்வொருவரும் சமூகத்தை நேசிக்கக் கூடியவர்களாக சமூகத்தை மேம்படுத்துகின்றவர்களாக மாற வேண்டுமெனவும் இக்கைங்கரியத்தை இவர்கள் செவ்வனே நிறைவேற்றுவார்கள் என்ற எதிர்பார்ப்பு தனக்கிருப்பதாகவும் கூறினார்.

இங்கு ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்ற விருது வழங்கல் வைபவம் (Award Ceremony) எல்லா வகையிலும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் ஒரு முன்னணிப் பாடசாலையின் தரத்தில் இவை அனைத்தும் அமைந்துள்ளதையிட்டு மகிழ்ச்சியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

**★ கலைப் பிரிவு – விஷேட செயற்திட்டம் (A/L ARTS Special Project)**

லுக்மானியாவின் வரலாற்றிலேயே முதன்முறையாக 2022 (2023) உயர்தரப் பரீட்சைக்கு 08 மாணவிகள் தோற்றி 06 மாணவிகள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளமை பாடசாலை மூலம் முன்னெடுக்கப்படுகின்ற

> லுக்மானியா மகா வித்தியாலயம் கலைப்பிரிவு மாணவிகளுக்கான (Girls) விஷேட வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்து வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றது. இவ்விஷேட வேலை திட்டம் 'வீட்டுக்கொரு பட்டதாரி' எனும் மகுடம் தாங்கி 'கட்டுகஸ்தோட்டை கல்வி வலயத்தில் உயர்தர கலைப்பிரிவில் முதன்மைப் பாடசாலையாகத் திகழ்தல்' (To be the best School in Arts stream at Katugastota Educational zone) எனும் இலக்குடன் செயற்பட்டு வருகிறது.



உயர்தர கலைப்பிரிவு விஷேட செயற்திட்ட பொறுப்பாசிரியர்கள் குழு

உயர்தர கலைப்பிரிவு விஷேட செயற்திட்டத்தின் வெற்றிக்கு சான்று பகர்கிறது.

அக்குறணைப் பிரதேசத்தில் கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்களுக்கான செயற்திட்டம் ஒன்று இல்லாத குறை தொடர்ந்து இருந்து வந்தது. அதிலும் குறிப்பாக கலைப் பிரிவு மாணவர்களுக்கான முறைப்படுத்தப்பட்ட செயற்திட்டம் ஒன்றின் அவசியம் பலராலும் உணரப்பட்டது. இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் லுக்மானியா மகாவித்தியாலயம் கலைப்பிரிவு மாணவிகளுக்கான (Girls) விஷேட வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்து வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றது. இவ்விஷேட வேலை திட்டம் 'வீட்டுக்கொரு பட்டதாரி' எனும் மகுடம் தாங்கி 'கட்டுகஸ்தோட்டை கல்வி வலயத்தில் உயர்தர கலைப்பிரிவில் முதன்மைப் பாடசாலையாகத் திகழ்தல்' (To be the best School in Arts stream at Katugastota Educational zone) எனும் இலக்குடன் செயற்பட்டு வருகிறது.

இச்செயற்திட்டம் மாணவர்கள், பெற்றோர்கள், மற்றும் ஆசிரியர்கள் என கல்வியுடன் தொடர்புபடும் முத்தரப்




பினரையும் கவனத்திற் கொண்டு, மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை மாத்திரமல்லாது அவர்களது ஒழுக்க, ஆன்மீக, ஆளுமை விருத்தியையும் இலக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

இச்செயற்திட்டத்தின் மூலம் பின்வரும் செயற்பாடுகளில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றது.

★ க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கான திட்டமிட்ட செயற்பாடுகள்

★ கற்றல் திறன் விருத்தி வழிகாட்டல்கள்

★ வாழ்வியல் திறன் விருத்திப் பயிற்சிகள்

★ ஒழுக்க பண்பாட்டு ஆன்மீக மேம்பாட்டு நிகழ்ச்சிகள்

★ உளநல விருத்திக்கான பயிலரங்குகள்

★ தலைமைத்துவப் பயிற்சிகள்

★ இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்கள், பயிற்சிகள்

★ பெற்றோருக்கான வழிகாட்டல் நிகழ்ச்சிகள்

★ ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கான செயற்திட்டங்கள்

ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடனும், நலன்விரும்பிகளின் உதவியுடனும் திருமதி டீ.எப். ரிஸானா ஆசிரியையின் தலைமையில் பாடசாலை அதிபரின் வழிகாட்டலுடன், கட்டுகஸ்தோட்டை கல்விப் பணிமனையின் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கான பொறுப்பதிகாரி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எம் ராசிக் அவர்களின் மேற்பார்வையுடனும் சிறப்பாக முன்னெடுக்கப்படும் இவ்விஷேட வேலைத்திட்டத்தில் எதிர்வரும் வருடங்களில் வெளிப்பிரதேச மாணவிகளையும் இணைத்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. கல்விக்குக் கரம் கொடுக்கத் தயாராகவுள்ள அனைவரையும் ஓரணியாய் கரம் கோர்த்து செயற்பட அழைக்கிறது லுக்மானியா.

**எம். சி. எம். சினாஷ்**





# சுயமுன்னேற்றம்

## புதிய பார்வை

'குறிஞ்சி மலர்' என்னும் தொனிப் பொருளில் மலையகத்தில் கல்வி, சமூகம் சுற்றுச் சூழல் அபிவிருத்தி நோக்கிய செயற் திட்டத்தின் கீழ் இரத்தினபுரி கஹ வத்தை நீலகம தமிழ் வித்தியாலயத்தில் நிர் மாணிக்கப்பட்ட திறந்தவெளி வகுப்பறை கட்டடம் திறப்பு விழா வைபவம் அதிபர் ராஜகோபால் அமிர்தலிங்கம் தலைமையில் அண்மையில் வெகு விமர்சையாக நடை பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஓய்வு பெற்ற நீதிபதி ஜெனிவர் சுமித், திறந்த வெளி வகுப்பறை கூடத்தை மாணவர்களின் பாவனைக்காக திறந்து கையளித்தார்.

இந்நிகழ்வு தொடர்பில் இரத்தினபுரி கஹ வத்தை நீலகம தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் ராஜகோபால் அமிர்தலிங்கம் கருத் துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

எஹெலியகொட பாடசாலை அதிபர் தேவராஜ் எம்மை கிளிநொச்சிக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஐந்து நாள் தங்கியிருந்து எமது பிரதேச கல்வி குறை நிறைகள் தொடர்பான கலந்துரையாடல்



எழுப்பி மேலே சீட்டினைப் போட்டு சாதார ணமாகச் செய்து முடிக்கலாம் என்று யோசித்து வேலைகளை ஆரம்பித்தேன். கல்வி வலயத் திலுள்ள அபிவிருத்தி உத்தியோகஸ்தர் நேர டியாக வந்து பார்த்து விட்டு அவ்வாறு செய்ய முடியாது என்று தடை விதித்து விட்டார். உறு

பிள்ளை தேசிய மட்டப் போட்டிற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பா ஓதல் பிரிவு 3 பகு தியில் எமது பாடசாலைப் பிள்ளையொன்று பங்கேற்கவுள்ளார். பா ஓதல் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட அந்தப் பிள்ளைக்கு பாடசாலையில் அந்தப் பிள்ளையின் பெயரில்

மூலம் பாடசா லைக்கு வருமா னத்தையும் பெறக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. இதனை சரியான முறையில் நடைமுறைப்படுத்தினால் பாட சாலைகளின் சில தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப் பாக அமையும்.

குடிநீர்ப் பிரச்சினைகள் நீண்ட காலமாக இருக்கின்றன. அர சாங்கத்தின் மூலம் நிர்மாணிக் கப்பட்ட கிணறு இருக்கிறது. எனினும் கோடை காலத்தில் அதில் நீர் வற்றிப்போய் விடும். பின்பு வீடுகளில் அக்கம் பக் கங்களில் இருந்து தான் நீரைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மழை பெய்தால் மட்டும் தான் அந்தக் கிணறு நிறைந்து இருக்கும். அந்த நீரைக் குடிக்க முடியாது. அந்த இடத்தில் நன்கு ஊற்று நீர் இருந்தது. அந்த ஊற்று நீர் வரட்சி வந்தால் வற் றிவிடும். இக்கால கட்டத்தில் கடுமையான தண்ணீர் பிரச்சி னையை பிள்ளைகள் எதிர் நோக்குவார்கள். அப்பொழுது அக்கம் பக்கத்தில் இருந்து கொண்டு வந்து தண்ணீர் எடுத்து வந்து வைத்திருப்போம். இதே பிரச்சினை லயன்களிலும் இருக்கின்றன. தண்ணீர் இல்லா விட்டால் வேறு அங்குமிங் கும் சென்று சமாளித்துக் கொண்டு இருக்கிறார்கள். நீர் விநியோகத் திட்டம் இந்தப் பகுதியில் இல்லை.

பிள்ளைகளுக்கும் போசாக்கு, உணவுப் பிரச்சினைகள் இருக்கின் றன. ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு சத்து ணவு வழங்கப்படுகின்றன. ஆனால் மற்றைய பிள்ளைகளுக்கும் போசாக்கு உணவு வழங்



தோடு அதன் காரணத்தையும் 'சூம்' கூட் டத்தில் தெளிவாக விளக்கினார்.

அந்த தாயார் என்னை தனியே அழைத்து வந்து என்னிடம், அதாவது எத்தனை பிள்ளைகள் பாடசாலையில் கல்வி பயி லுகின்றார்கள்? எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்று கேட்ட அவர், பாடசாலைக்கு என்ன தேவை? நான் என்ன செய்ய வேண்டும் என்று என்னிடம் வினவினார். செயற்கை நுண்ணறிவு கற்கை கூடமும், போசாக்கு உணவும் தேவை

களில் ஈடுபட்டோம். அதன் போது அங்குள்ள பல முக்கிய பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். ஒவ்வொரு அதிபர்களும் தத்த மது பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை அங்கு எடுத்துக் கூறினர். அப்பொழுது நான், 2018 ஆம் ஆண்டு எனது பாடசாலை யில்

க. பொ. த. சாதாரண தர வகுப் பினை ஆரம்பித்தேன். வகுப்ப றைப் பிரச்சினைகள் எமக்கும் உள்ளன. மாணவர்களுக்கான வகுப்பறைகளை நிர்மாணித்துக் கொடுத்தால் மிகவும் பயனுள்ள தாக அமையும் என்ற கோரிக்கை யினை அவர்களிடம் முன்வைத் தேன். என்னுடைய கோரிக்கைக்கு இணங்க அவற்றை நிவர்த்தி செய்து தருவதாக வாக்குறுதி வழங்கினார்கள்.



ஓர் இடத் திற்கு 'சலோமி வளாகம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. அதே போன்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திய டைந்த பிள்ளையின் பெயரில் ஆரம்ப பிரிவுப் பகுதியொன் றுக்கு பெயர் சூட்டியுள்ளேன். காரணம் ஏனைய பிள்ளைகள் இதன் மேல் ஆர்வம் காட்ட வேண்டும் என்பதற்காக புதிய புதிய வேலைத் திட்டங்களை யும் இப்பாடசாலையில் அறிமு கம் செய்து வருகின்றோம்.

எமது பாடசாலைப் பிள்ளை களின் பெற்றோர் மத்தியில் 'பொருளாதாரத்தை வலுவூட்டுதல்' என்ற புதிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை இரத்தின புரி மாவட்டத்திலுள்ள தோட்டப்புற பாட சாலைகளில் முன்னெடுத்து வருகின்றேன். இது தொடர்பில் எமது பாடசாலைகளிலுள்ள பெற்றோர்களிடத்தில் தேயிலை பயிர்ச்



எனினும், அவர்கள் சிறிய வகுப்பறை ஒன்றை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு முயற்சி செய்தார்கள். அதற்கு அவர் கள் மூன்று இலட்சம் ரூபா தருவதாகக் கூறினார்கள். அப்பொழுது அது எனக்கு வேண்டாம். சிறிய வகுப்பறை வழங்கு வதை விட எமது பாடசாலையில் பெரியள விலான மைதானம் இருக்கிறது. அதில் திறந் தவெளி வகுப்பறை ஒன்றை நிர்மாணித்துத் தாருங்கள். அதற்கு ஆறு இலட்சத்து 75,000 ரூபா செலவாகும் என்று கூறி பட வரை பொன்றை செய்து கொடுத்தேன்.

இந்த திறந்தவெளி வகுப்பறை மைதா னத்தில் அமைந்தால் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். அது மட்டுமல்ல பாடசாலை நாட்களில் வகுப்ப றையாகவும் விளையாட்டுப் போட்டிகள் வந்தால் விளையாட்டு அரங்கின் பார்வை

தியானதாகவும் திறன்படவும் செய்யப்பட வேண்டும் என்று கூறினார். அதற்கு இணங்க இரும்பினாலும் உறுதியான தூண்களைப் போட்டு நீண்ட காலம் நிரந்தமாகப் பயன்ப டுத்தக் கூடிய மாதிரி சிறந்த முறையில் நிர்மா ணித்து முடித்து விட்டேன். இதில் இருந்து மாணவர்கள் பெரிதும் பயன்பெறுவார்கள். ஒன்று வகுப்பறையா கவும் விளையாட்டு மைதானத்தின் மண்ட பமாகவும் பயன்படுத் தக் கூடியதாக அமைந் துள்ளன.







இப்பாடசாலையில் விளையாட்டுக்களில் ஈடுபடக் கூடிய பிள் ளைகள் நிறைய இருக் கின்றார்கள். இதனை விளையாட்டுக்காக வும் வகுப்பறைக்கா கவும் பயன்படுத்தலாம் என்ற மனத்திருப்தி இருக்கிறது. குறிப்பாக துணைப் பாடங் களைக் கற்றுக் கொடுப்பதற்கு தற்போது பிரச்சினைகள் இல்லை. இந்த வகுப்பறை யினை எட்டாம் ஆண்டுப் பிள்ளைகளுக்கு கொடுத்து விட்டு மேல் பகுதியில் துணைப் பாடங்களை கற்பித்தலைச் செய்வதற்கு மிக இலகுவானதாக இருக்கும். வகுப்பறையாகப் பயன்படுத்தலாம்.

எமது பாடசாலையில் 221 பிள்ளைகள் உள்ளனர். ஆரம்ப பிரிவில் இருந்து 11 ஆம் ஆண்டு வரையிலும் பிள்ளைகள் உள்ளார்கள். இப்பாடசாலைக்கு 90 வருடங்கள் ஆகப் போகின்றன. கடந்த 1934 03 16 ஆம் திகதி 52 பிள்ளைகளோடு ஒரே ஒரு ஆசிரியருடன் ஆரம்பிக்கப்பட்டது. மாணவர்கள் முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் ஆண்டு வரை மட்டும் தான் கல்வி பயிலலாம்.

அதன் பின்பு ஆறு, ஏழு என்று காலம் காலமாக வளர்ச்சி பெற்று வந்து 1996 இல் ஒன்பதாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்பு நான் 2018 இல் இப்பாடசா லைக்கு அதிபராக நியமனம் பெற்று வரும் போது 2019 இல் தரம் பத்து வகுப்பினை ஆரம் பித்தேன். 2020 இல் தரம் 11 வகுப்பினை ஆரம்பித்தேன். முதல் தடவையாக 20 பிள் ளைகள் க. பொ. த சாதாரண பரீட்சைக்கு தோற்றினார்கள். அதில் இரு பிள்ளைகள் முழுமையான சித்திபெறவில்லை. நான்கு பேர் ஐந்து, ஆறு பாடங்களில் சித்தி பெற்றார் கள், ஏனைய 15 பேரும் க. பொ. த உயர் தரம் கற்பதற்கு தகுதி பெற்று விட்டார்கள். அடுத்த வருடமும் 15 பேர் பரீட்சைக்குத் தோற்றினார் கள். 9 பேர் க. பொ. த உயர் தரம் படிப்பதற்கு தகுதி பெற்றார்கள். இம்முறையும் க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்கள். அவர்களுடைய பெறுபேறுகள் இன்னும் வர வில்லை. இதிலும் 11 பேர் க. பொ. த உயர் தர வகுப்புக்கு தகுதி பெற்றவர்களாகி விடுவார் கள் என்ற நம்பிக்கையோடு இருக்கின்றோம். இவ்வாறு இப்பாடசாலை வளர்ச்சிப் போக்கி னையே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்பட்டது. இப்பொழுது ஆசிரியர் பற் றாக்குறைகள் என்பது இல்லை. எல்லாப் பாடங்களுக்கும் ஆசிரியர்கள் இருக்கிறார் கள். கஷ்டப் பிரதேச பாடசாலையானா லும் கல்வி தரத்தில் நாங்கள் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம்.

இம்முறை தமிழ்த் தின விழாவிலும் எமது



யாளர் மண்டபமாகவும் பயன்படுத்தலாம் என்ற வகையில் இந்த திட்டத்தை அவர்க ளிடம் முன் வைத்தேன். அது பார்ப்பதற்கு விளையாட்டு அரங்கின் மண்டபமாகவே தென்படும். நவீன முறையில் திறந்த வெளி வகுப்பறை அமைக்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் நான் அப்பொழுது உறு தியாக இருந்தேன். மேலும் இந்தச் செயற் திட்டத்தை நிறைவு செய்த பின்பு அதற்கு சுற்றிவர சுவரினைக்கட்டி மறைவினை ஏற்படுத்தினால் மாணவர்களுக்கான நிரந் தர வகுப்பறையாகக் கூட மாற்றிக் கொள்ள லாம் என்ற எண்ணம் எனது மனதில் இருந் தது. இந்த வேலைத் திட்டத்திற்கு பணம் போதாமையால் பெற்றோர்களின் பங்களிப் பையும் இணைத்துக் கொள்ள வேண்டும். அதேவேளையில் பாடசாலையில் சில உப கரணங்களும் உள்ளன என்று உத்தேசித்துத் தான் இந்தக் கருத்தினை முன்வைத்தேன். இந்த வகுப்பறை நிர்மாணிக்கப்படும் பட் சத்தில் பிள்ளைகளின் கற்றலுக்கு நன்கு கவரக் கூடியதாகவும் அழகுமிக்கதாகவும் சூழல் காணப்படும்.

அந்த வகையில் அவர்கள் இந்த வேலைத் திட்டத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கி னர். அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் வழங் கினார்கள்.

அதன் பின்பு கல்வி வலயத்தில் தற்காலிக மான வகுப்பறை மண்டபம் ஒன்றை நிர்மா ணிப்பதற்கென அனுமதியை வேண்டி விண் ணப்பம் கோரிவிட்டு நான்கு தூண்களை

செய்கை மேற்கொள்வதற்காக காணிகள் இருக்குமாயின் அவற்றில் தேயிலை நடுவ தற்கான பங்களிப்பை முன்னெடுப்பதற்கு நிறைய வாய்ப்புக்கள் உள்ளன. உண்மையி லேயே இவை நல்லதொரு வேலைத் திட்ட மாகும். இவை பற்றி பெற்றோர்களின் கவனத் திற்கு கொண்டு வந்துள்ளோம். ஆனாலும் சொந்தமாக தேயிலை நடுவதற்கான காணிகள் வைத்திருப்பவர்கள் கிடைக்கவில்லை. அவ்வாறு கிடைக்கும் பட்சத்தில் நிச்சய



மாக எமது பாடசாலையின் மூலமாக இவ் வேலைத் திட்டத்தை முன்னெடுக்க எமது பாடசாலை நிர்வாகம் தயாராக இருக்கின்றது.

இருந்த போதிலும் இப்பாடசாலைக்கு சுற்றிவர மதில் வேலி இல்லை. கம்பிவே லிகள்தான் இருக்கின்றன. இது மிக நீண்ட நாட்களுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட வேலி என்பதால் கம்பிகள் இத்துப்போய் உள்ளன. இதனால் பாடசாலை வளாகத்திற்குள் ஆடு மாடு, பன்றி, நாய் போன்ற மிருகங்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளன. இந்த வேலிகளை திருத்தியமைக்கப்படும் பட்சத் தில் பாடசாலைத் தோட்டத்தில் கருவா உற் பத்திகளை மேற்கொள்ளலாம் என்ற தீர்மா னம் எடுத்துள்ளோம்.

இரண்டு ஏக்கர் காணி இருக்கிறது. மைதா னத்தைச் சுற்றி அங்குமிங்கும் அழகாக நாட்ட முடியும். அதற்கென பராமரிப்புத் தேவை யில்லை. சந்தையில் அதிக விலைக்கும் விற்பனை செய்ய முடியும். அதை நட்டினால் தனாக வளர்ந்து விடும். எப்படிப் பார்த்தாலும் ஒரு கால் ஏக்கருக்குள் இந்த கருவாவை நட முடியும். அது ஒருவருடத்தில் வளர்ந்து விடும். இரு முறை அறுவடை செய்ய முடியும். இதன்

கினால் அவர்களுடைய கற்றலுக்கு மிகுந்த ஆரோக்கியமானதாக இருக்கும். இது தொடர் பில் 10, 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கும் இந்தப் போசாக்கு உணவு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினை இந்தச் சந்தர்ப்பத்தில் விடுத்துள்ளோம். இவை வரும் காலங்களில் நிச்சயம் கிடைக்கலாம் என்று நம்பிக்கை யோடு எதிர்பார்த்திருக்கின்றோம்.

இங்குள்ள பெற்றோர்கள் இன்னும் லயன் களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இத் தகைய பெற்றோர்களின் பிள்ளைகள் தான் எங்கள் பாடசாலையில் கல்வி பயிலுகிறார் கள். தோட்டத்தில் வேலை வாய்ப்பின்மை யால் அநேகமான மக்கள் வெளிநாடுகளுக் குச் சென்று உழைத்து வருகிறார்கள். இந்த வெளிப்படையான வகுப்பறைக் கட்டட நிர் மாணப் பணிகளுக்கு பெற்றோர்களின் பங்க ளிப்பும் இருந்து கொண்டிருக்கின்றது. அவர்க ளிடத்தில் எந்நேரமும் உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. இந்தப் பிரதேசத்தில் 65 பேர் அளவில் வெளிநாட்டில் இருக்கிறார் கள். அதிலும் அதிகமானவர்கள் தாய்மார்கள். அவர்கள் வெளிநாட்டில் வேலை செய்கிறார் கள். அவர்கள் வெளிநாட்டில் இருப்பதனால் பிள்ளைகளின் பராமரிப்பு சரியான முறையில் இல்லை. எனினும் இவற்றைத் தடுக்கவும் இயலாது.

காரணம் இன்றைய பொருளாதார நெருக் கடியான சூழலில் ஏதோ வெளிநாட்டிலுள்ள

**கார்த்திக்கேசு திருக்குமரன்**

குடும்பங்கள் சந்தோசமாக வாழக் கூடியதாக உள்ளன. இதில் இங்கே வந்து நிகழ்வுகளில் கலந்து விட்டுச் சென்றவர்கள் உடனடியாக 'சூம்' கூட்டத்தைக் கூட்டி நன்றி தெரிவித்தார் கள். இந்நிகழ்வில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஓய்வு பெற்ற நீதிபதி ஜெனிவர் சுமித் அவர்களும் கலந்து கொண்டார். அவர் மிகுந்த வயதுமிக்கவர். அந்தத் தாயின் நலன் கருதி கூட்டங்களை விரைவாகவும் துரிதமா கவும் நடத்தி முடிக்க வேண்டும் என்ற அவா வுடன் அவர் அன்று மிகுந்த சுறுசுறுப்புடன் செயற்பட்டார். காரணம் அந்த தாய்மீது அவர் கொண்டுள்ள பற்றும் பாசமும் வெளிப்படை யாக அவரிடம் அன்று கண்டு கொள்ளக் கூடி யதாக இருந்தது. இந்த விடயம் தொடர்பில் தான் அவசரப் பட்டு விட்டோமோ என்ற விட யத்தைக் கூறி மன்னிப்புக் கேட்டுக் கொண்ட

என்று அவரிடம் கோரிக்கை விடுத்தேன். அப்பொழுது அதற்கு அவர் உதவி வழங்கு வதாகத் தெரிவித்தார்.

அது மட்டுமல்ல கணிதப் பாடத்திற்கு பிரத்தியேகமான முறையில் ஒரு ஆசிரிய ரைத் தந்துள்ளார்கள். அவர் எமது பாட சாலைப் பிள்ளைகளுக்கு விஞ்ஞானம் மற்றும் கணிதப்பாடம் கற்பித்து வருகிறார். இத்தகைய உதவியினால் எங்களுடைய பாடசாலைப் பிள்ளைகள் எதிர்காலத்தில் கணித, விஞ்ஞானப் பாடங்களில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தரும் என்று எதிர்பார்க்கின்றேன். இது போன்று ஏனைய பாடங்களுக்கும் பிரத்தியேக வகுப்புக் களை நடத்த திட்டமிட்டுள்ளார்கள்.

எமது பாடசாலையில் விளையாட்டுத் துறையிலும் திறமைகளைக் காட்டக் கூடிய பிள்ளைகள் உள்ளார்கள். அவர்க ளுக்கு விளையாட்டு உபகரணங்கள் தேவை யெனக் கோரிக்கை விடுத்துள்ளேன். 200 ஆவது ஆண்டை மலையகம் நிறைவை கொண்டுள்ள தருணத்தில் மலையக சமூ கத்தின் கல்வி மேம்பாடு என்பது பொரு ளாதார சமூகத்தோடு தொடர்புபட்டவை என்ற அடிப்படையில் பெற்றோர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவதற்கும் தன்னிறைவுள்ள ஒரு வருமானத்தை ஏற் படுத்துவதற்குமான நோக்கத்தை அடிப் படையாகக் கொண்டு பெற்றோர்களின் தொழில் மேம்பாட்டுக்கான திட்டத்தை இரத்தினபுரி புனித ஜோக்கிம் பாடசாலை யின் பெற்றோர் ஒருவரின் இல்லத்தில் ஆரம்பித்து வைத்துள்ளோம்.

மலையக மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த எம்மால் இயன்ற பங்களிப் புக்களைச் செய்யவுள்ளோம். சொந்தக் காணிகள் இருக்குமாயின் அவர்களுடைய காணியில் தேயிலையோ, கருவாவோ நடுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். அதே போன்று கல்வியிலும் மலையக சமூகம் எழுச்சியை நோக்கிச் செல்வ தற்கு மலையக மக்களின் சுய உழைப்பும் மிக அவசியம்.

இதன் மூலம் பொருளாதார ரீதியில் தோட்டப்புற மக்கள் முன்னேற்றத்தைக் காணும் பட்சத்தில் கல்வி தானாகவே எழுச்சி பெற்று புதிய மாற்றங்களுடன் நிலவும் என்பதில் எவ்வித சந்தேகமு மில்லை என்று அவர் மேலும் தெரிவித் தார்.

### பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

# தென்னை பயிர்செய்கை சபை

### சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான கேள்விகோரல் – 2024

**பெறுகை இல :** E/7/G/P/U/CLEANING SERVICE 2024

01. தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் பெறுகைக் குழுவின் தலைவரால் தலைமையகத்தின் சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவை விடயங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்விகோரல் (NCB) இன் மூலம் மேற்கொள்ளப்படும்.

03. விண்ணப்பதாரிகளால் கீழ்க்காணும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

  I. விண்ணப்பதாரிகளால் சமர்ப்பிக்கப்படும் வருடாந்த கேள்விப் பெறுமதியொன்று இரு மடங்குகளாக வருடாந்த வருமானத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

  II. சேவை அனுபவத்துடன் 04 ஊழியர்கள் (55 வயதிற்கு மேற்படாத செயற்பாடுள்ள மற்றும் ஆரோக்கியமான) நாளாந்த சேவையில் ஈடுபட வேண்டியதுடன் அத்தரப்பினருக்கிடையில் குறைந்தபட்ச ஒரு ஆண் ஊழியர், பெண் ஊழியர் இருத்தல் வேண்டும். சேவையில் ஈடுபடும் ஊழியர்கள் 04 பேரில் ஒருவர், சாதாரண கடமைகளுக்கு மேலதிகமாக வேலை பரிசீலனை (Working Supervisor) ஆகவும் கடமையாற்றல் வேண்டும்.

04. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடைய கேள்விதாரருக்கு தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் வழங்கல் அதிகாரி மூலம் மேலதிக தகவல்களை : 011-2193457, தொ.பே இலக்கம் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், கீழே காணப்படும் முகவரியில் 2023.10.27 முதல் 2023.11.16 வரை, வார நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை) எழுத்துமூல வேண்டுதலை மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை சமர்ப்பித்து, மீளளிக்கப்படாத ரூ. 3000/= தொகையை பத்தரமுல்ல, டென்சில், கொப்பேகடுவ மாவத்த இல 9/428 இல் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைமையகத்தில் காசாளருக்கு செலுத்திய பின்னர் கேள்வி ஆவணத்தொகுதி-02 ஐ பெற்றுக்கொள்ளலாம்.

05. சகல கேள்வியுடன் கேள்வியில் வருடாந்த பெறுமதியில் 1% பெறுமதிக்கு குறையாத 90 நாள் காலத்திற்கு செல்லுபடியாகும் "பொது முகாமையாளர் தென்னைப் பயிர்ச்செய்கை சபை" பெயரில் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட எந்த வர்த்தக வங்கியிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனையற்ற கேள்வி பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

06. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணத்தொகுதிகள்-02 (மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு) வேறுவேறு கடித உறைகளில் இட்டு, பின்னர் இரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு, அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் "சுத்திகரிப்பு, துப்புரவேற்பாட்டு சேவை வழங்குதல் - 2024 இற்கான விலைமனுக்கள்" என்று தெளிவாக குறிப்பிட்டு, பொறியிட்டு 2023.11.17 பி.ப 2.00 இற்கு முன் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு, பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கொண்டுவந்து இவ் அலுவலகத்தின் தரைமாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் உள்ளிடல் வேண்டும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

07. 2023.11.17 பி.ப 2.00 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன், கேள்விதாரர் அல்லது பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**தென்னைப் பயிர்ச்செய்கை சபை,**
**9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,**
**பத்தரமுல்ல**

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டதன் பிரகாரம் காணி சுவீகரித்தல் சட்டத்தின் (460 வது அத்தியாயம்) 7 வது பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இலக்கம்:**
**THI/LND/L2/ACQVI/147**

**காணி அமைச்சின் தொடர்பு இலக்கம்:**
**4-3/12/2018/WS/257**

இங்கு கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி கல்கெடிய நிலக்கீழ் நீர்த்தேக்கத்தையும் நிலையப் பொறுப்பாளருக்குரிய உத்தியோகபூர்வ விடுதியையும் நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்திற்கு சுவீகரித்துக் கொள்வதற்கு எண்ணியுள்ளது. இவ்விடயம் சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2352/18 மற்றும் 2023.10 மாதம் 04 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையை பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாகாணம் | : | தெற்கு |
| மாவட்டம் | : | மாத்தறை |
| பிரதேச செயலகம் | : | திஹகொட |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : | 349B. கிதலகம மத்திய |
| கிராமத்தின் பெயர் | : | கிதலகம |
| ஆரம்ப திட்டப்பட இலக்கம் | : | ஆ.தி. மாத்தறை 2890 |
| உரிய துண்டு இலக்கம் | : | 01 |
| விஸ்தீரணம் | : | 0.0763 ஹெக்டயார் |

**பிரதேச செயலாளர்/காணி சுவீகரிப்பு அதிகாரி**
**திஹகொட பிரதேச செயலகப் பிரிவு**

**2023.10.26 ஆம் திகதி**
**திஹகொட பிரதேச செயலகத்தில்**

## சமூக சேவைகள் திணைக்களம் (வடமேல் மாகாணம்)

### 2024ம் ஆண்டிற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்

வடமேல் மாகாண சபையின் சமூக சேவைகள் திணைக்களத்திற்காக மூக்குக்கண்ணாடி,கேட்டல் உபகரணம், கைத்தாங்கல் நடமாடும் சட்டம், அக்குள் தாங்கி, சக்கர நாட்காலி, கொமட் சக்கர நாற்காலி, டிரைசிக்கல், செயற்கை கை மற்றும் பாதம், கெலிபஸ், சப்பாத்து மற்றும் வெள்ளைப்பிரம்பு போன்ற அங்கவீனர் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 2023.10.30 முதல் 2023.10.29 பி.ப 2.00 வரை விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுவதுடன் பூர்த்தி செய்யப்பட்ட் விண்ணப்பங்கள் 2023.11.29 பி.ப 2.00 வரை ஏற்கப்படும். வடமேல் மாகாண சமூக சேவை திணைக்களத்தில் இருந்து பெற்றுக் கொள்ளும் விண்ணப்பங்களை முறையாகக் பூர்த்தி செய்து, சமூக சேவை மாகாண பணிப்பாளர் (வடமேல்) சமூக சேவை திணைக்களம், இரண்டாம் மாடி, ஈகட்டிடம், மாகாண சபை கட்டிடத் தொகுதி குருநாகல் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**நிபந்தனைகள்**

1. போதுமானவாறு வழங்குநர்கள் பதிவு செய்வதற்காக முன்வராதுவிடின், வேறு அங்கீகரிக்கப்ப்ட்ட வழங்குநர்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படும்.
2. இவ்அலுவலகத்திற்கு ஒரு உருப்படிக்காக ரூ.2,000.00 காசாகச் செலுத்தி விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள முடிவதுடன், விண்ணப்பத்துடன் காசு செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை இணைத்து அனுப்புதல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. ஒரு உருப்படிக்கு மேல் பதிவு செய்வதற்கு உத்தேசிப்பதாயின் அவ்வாறு அதிகரிக்கும் ஒவ்வொரு உருப்படிக்கும் ரூ.1,000.00 கட்டணத்தைச் செலுத்த வேண்டியதுடன், ஒரு உருப்படிக்கு ஒன்று வீதம் விண்ணப்பங்கள் வேறுவேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.
4. போலியான ஆவணங்களை சமர்ப்பிக்கும் நிறுவனங்கள் பற்றி கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

**கே.ஜி.ஜி.அயோமி வீரவர்தன,**
**சமூக சேவை மாகாண பணிப்பாளர் (வடமேல்)**
**பெறுகைக் குழுத்தலைவர்,**
**சமூக சேவைத் திணைக்களம்,**
**ஈ கட்டிடம், இரண்டாம் மாடி,**
**வடமேல் மாகாண சபை கட்டிடத்தொகுதி**
**குருநாகல்**
**2023.10.27**

Wherever you are..,
The best way to Fulfil your Future Dreams...
Gather with,




Green Light for Online Transfer
Lake House Branch Acc. No. 000000377

E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 | 011 2 429 342/ 343

# சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

### இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA)

### விலைமனு சமர்ப்பித்தலை நீடித்தல்

### SLTDA வில் சூரிய சக்தி மின்சார உற்பத்தி அமைப்பு மற்றும் மின்னல் பாதுகாப்பு அமைப்பின் வழங்கல், நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் விற்பனைக்குப் பின்னரான சேவை

ஒப்பந்த இல.: **SLTDA/HR&PM/G/NCB/Solar/2023/6**

இது மேலுள்ள விடயம் தொடர்பில் 2023 ஒக்டோபர் 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரம் தொடர்பானது. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித்திகதி பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளதை இங்கு அறியத்தரப்படுகிறது.

**விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி: 2023 நவம்பர் 9 அன்று பி.ப. 2:00**

**விலைமனு செல்லுபடி திகதி : 91 நாட்கள் (2024 பெப்ரவரி 8 ஆம் திகதி உட்பட வரை இருக்கும்)**

**விலைமனு பிணை செல்லுபடி திகதி : 119 நாட்கள் (2024 மார்ச் 7ஆம் திகதி உட்பட வரை இருக்கும்)**

**மற்ற விதிகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி நீடிக்கும்.**

**sltdaproc@srilanka.travel, amilam@srilanka.travel** என்ற மின்னஞ்சல் முகவரி, 0112426800 (நீடிப்பு: 303, 305, 277) என்ற தொலைபேசி இலக்கத்தில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, உதவி பணிப்பாளர் (பெறுகை) இடமிருந்து ஒப்பந்தத்திற்கான தெளிவுகளை பெற்றுக்கொள்ளவும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை**
**இல. 80, காலி வீதி,**
**கொழும்பு 03**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## அம்பலாந்தோட்டை பிரதேச சபை

### 2024ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவுசெய்தல்

இப் பிரதேச சபைக்கு 2024ஆம் ஆண்டிற்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்ய விரும்பும் புகழ்பெற்ற வழங்குநர்கள் / நிறுவனங்கள் / அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் / தனிநபர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வழங்குநர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக பதிவு செய்ய வேண்டும் மற்றும் திரும்பப்பெற முடியாத பதிவுக் கட்டணமான ரூ. 1000.00 இனை ஒவ்வொன்றுக்கும் செலுத்த வேண்டும்.

ஆர்வமுள்ள வழங்குநர்கள் A4 அளவுள்ள சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் அடங்கிய உறையின் இடதுபுற மேல் மூலையில் "வழங்குநர்களை பதிவு செய்தல் - 2024" என்ற தலைப்பு குறிப்பிடப்பட வேண்டும். மேலும், நீங்கள் பதிவு செய்ய விரும்பும் பொருள் இலக்கங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும் மற்றும் நீங்கள் பதிவு செய்ய விரும்பும் பொருட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உரிய கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

பதிவுக் கட்டணம் ஒரு காசோலை மூலம் செலுத்தப்பட்டால், அது "செயலாளர், பிரதேச சபை, அம்பலாந்தோட்டை" பெயருக்கும் வரையப்பட வேண்டும், மேலும் விண்ணப்பங்களை "செயலாளர், பிரதேச சபை, அம்பலாந்தோட்டை" என்ற முகவரிக்கு 30.12.2023க்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து கையளிக்கலாம்.

| இல | வழங்கல் | பதிவுக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|
| 1 | அனைத்து வகையான அலுவலக எழுதுபொருட்கள் வழங்கல் | 1000.00 |
| 2 | அலுவலக உபகரணங்கள் (மரம் / உருக்கு / இரும்பு) | 1000.00 |
| 3 | கணினிகள் மற்றும் தொடர்புடைய துணைக்கருவிகள் /பிரிண்டர்கள் /போட்டோ காப்பியர்கள், தொலைநகல் இயந்திரங்கள் / டுப்லோ இயந்திரங்கள், மல்டிமீடியா, ப்ரொஜெக்டர்கள், அச்சுப்பொறிகளுக்குத் தேவையான மைகள் மற்றும் டோனர்கள், பணம் எண்ணும் இயந்திரங்கள், | 1000.00 |
| 4 | சுகாதார உபகரணங்கள் (ஈக்கில் விளக்குமாறு, துடைப்பங்கள், சோப்புகள், டைல் கிளீனர்கள், ஹார்பிக், ஃபீனால், லைசோல், கையுறைகள், முகமூடிகள், கிருமிநாசினிகள் | 1000.00 |
| 5 | மோட்டார் வாகனங்களுக்கான உதிரி பாகங்கள் (டயர்கள், டியூப்கள், பேட்டரிகள், ரிம் டேப்கள் போன்றவை மற்றும் லூப்ரிகண்டுகள் வழங்கல்) | 1000.00 |
| 6 | கட்டுமானப் பொருட்கள், கட்டுமான உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்கல் (பலகைகள், ராஃப்டர்கள், பாறைகள், கான்கிரீட் தொடர்பான பொருட்கள், மணல், உலோகம், இடிபாடுகள், பூமி, சரளை, தார், செங்கற்கள் போன்றவை) | 1000.00 |
| 7 | தெரு விளக்குகள் மற்றும் மின் சாதனங்கள், கருவிகள் | 1000.00 |
| 8 | நூலக புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் | 1000.00 |
| 9 | அச்சிடப்பட்ட ஆவணங்கள் (ரப்பர் ஸ்டாம்புகள் / தேதி முத்திரைகள் / பதக்கங்கள், நினைவு பரிசுகள், கோப்பைகள்) | 1000.00 |
| 10 | விளையாட்டு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (பள்ளிக்கு முந்தைய விளையாட்டு பாகங்கள் மற்றும் பிற விளையாட்டு உபகரணங்கள்) | 1000.00 |
| 11 | தீயை அணைக்கும் கருவிகளை வழங்குதல் | 1000.00 |
| 12 | தண்ணீர் வடிகட்டிகள், குடிநீர் பாட்டில்கள் வழங்கல் | 1000.00 |
| 13 | சாலை பராமரிப்புக் கருவிகள் (மேசன்ரி பான்கள், ரேக்குகள், மம்மோட்டிகள், வீல் பேரோக்கள், காக்கை கம்பிகள், புல் வெட்டும் இயந்திரங்கள் போன்ற பராமரிப்பு உபகரணங்கள்) | 1000.00 |
| 14 | தாவர வகைகள் / விவசாய இரசாயனங்கள், கரிம உரங்கள் மற்றும் களைக்கொல்லிகள், / நிலத்தை ரசிப்பதற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் கருவிகள் | 1000.00 |
| 15 | தண்ணீர் மோட்டார்கள், பிளாஸ்டிக் தண்ணீர் தொட்டிகள், பிளம்பிங் வேலைகளுக்கு தேவையான PVC பாகங்கள் மற்றும் உரத் தொட்டிகள் | 1000.00 |
| | **சேவைகள்** | |
| 16 | அனைத்து வாகனங்களையும் பழுது பார்த்தல் மற்றும் சர்வீஸ் செய்தல், டிராக்டர் டிரெய்லர்கள், குப்பை வண்டிகள், வெல்டிங் வேலைகள், டயர்களை ரீட்ரேடிங் செய்தல், பழைய டயர்களை இழுத்தல் மற்றும் வாங்குதல் / வாகனங்களை குஷனிங் செய்தல் / ஏர் கண்டிஷனிங், மோட்டார்கள் மற்றும் கராஜ் சேவை பிரதேசத்தில் இருக்க வேண்டும். | 1000.00 |
| 17 | காப்பீட்டு கவரேஜ் சேவை, சட்ட சேவை, உரிமம் பெற்ற சர்வேயர் சேவைகள், மொழிபெயர்ப்பு சேவைகள் | 1000.00 |
| 18 | கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் உள்ளிட்ட மின்னணு பாகங்கள் பழுதுபார்த்தல் | 1000.00 |
| 19 | பிரதேச சபையினால் (சாலைகள், கட்டிடங்கள், பொது) செயற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்காக CIDA இல் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் பதிவு | 1000.00 |
| 20 | கழிவு மேலாண்மை மையம் (பிளாஸ்டிக், வெள்ளை, பச்சை, பழுப்பு கண்ணாடி பாட்டில்கள், இரும்பு, பீர் கேன்கள், அலுமினியம், PET பாட்டில்கள்) மூலம் சேகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகளின் விற்பனை | 1000.00 |
| 21 | பிரதேச சபை அதிகார வரம்பிற்குள் ஆபத்தாக வைக்கப்பட்டுள்ள மரங்களை வெட்டுதல் மற்றும் அகற்றுதல் | 1000.00 |
| 22 | ஏர் கண்டிஷனர்களின் சேவை | |
| 23 | ஒப்பந்த சங்கங்கள் (விவசாயி அமைப்புகள், கிராம மேம்பாட்டு சங்கங்கள், சமூகம் சார்ந்த சங்கங்கள் போன்றவை) | 2000.00 |

19.10.2023
அம்பலாந்தோட்டை பிரதேச சபை

பி.சுதுசிங்க
செயலாளர்
அம்பலாந்தோட்டை பிரதேச சபை

## சிவில் பாதுகாப்பு திணைக்களம்

### விலைமனுக்கோரல்

01. சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான 09 நெற்கதிர் அடிக்கும் தளங்கள் (Threshing field) கட்டுமானத்திற்காக தேவைப்படும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக திறந்த மனுக்கள் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | விபரம் | மனு ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படும் திகதி | மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி | மனு ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி | மீள்செலுத்தப்படாத மனுக்கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|---|
| 01 | 09 நெற்கதிர் அடிக்கும் தளங்கள் (Threshing field) கட்டுமானத்திற்காக தேவைப்படும் பொருட்கள் | 2023.10.30 | 2023.11.20 | 2023.11.21 (1000 மணிக்கு முன்னர்) | 5,000.00 |

02. மனுக்கோரலானது தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

03. மேலே குறிப்பிட்டுள்ள மீளச்பெற முடியாத கட்டணத்தை பணமாக செலுத்திய பின்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பொது விடுமுறைகள் தவிர்ந்த வார நாட்களில் **மு.ப.09.00 மணி** முதல் **பி.ப.03.00 மணி** வரை நிதிப் பிரிவில் பொருளாலரிடம் செலுத்தி மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

04. விலைமனுக்கள் **இரண்டுன் பிரதிகளுடன்** சமர்ப்பிக்கப்பட வேண்டும். முத்திரையிடப்பட்ட மூலப்பிரதியுடன் நகல் பிரதி இணைக்கப்பட்டு குறிப்பிட்ட திகதி முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

05. இதற்காக ஆர்வம் காட்டும் அல்லது தகுதியான மனுதாரர்கள் பின்வரும் முகவரியில் மீள்செலுத்தப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர் மனு ஆவணங்களை பரிசீலனை செய்துகொள்ளலாம் மேலும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களினூடாக மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர் - வழங்கல்,**
**சிவில் பாதுகாப்பு திணைக்களம்,**
**ஜெய மாவத்தை, கட்டுபெத்த,**
**மொரட்டுவ.**

**பணிப்பாளர் வழங்கல்** : 011-2044854/5
**தொலைநகல் இல** : 011-2044855

**பணிப்பாளர் நாயகம்,**
**சிவில் பாதுகாப்பு திணைக்களம்.**

SELACINE

# Marriage Proposals

Decades of Trusted Service

Sunday Observer For 15 Words - Rs. 1,500/- For each additional word Rs. 25/-

For 15 Words - Rs. 1,200/- For each additional word Rs. 25/-

வாரமஞ்சரி For 15 Words - Rs. 600/- For each additional word Rs. 25/-

COLOMBO DISTRICT

AVISSAWELLA 036-2230446
Famous Bake House, No. 31, Seethawakapura

ANGODA 011 3069404
Kotikawatte Junction, Kudabuthgamuwa,

ATHURUGIRIYA 011 2760479, 011 4876968
267, Godagama Road,

BATHTHARAMULLA 011 2866705, 077 0736770
West Town, Bake House, Sweet House,

BORALESGAMUWA 071 6505533, 011 2519954
No. 17, Wewa Rd,

HANWELLA 011 4967962, 011 4967960
Sithumina Newspaper Agency, 144, High Level Rd, Pahathgama,

HOKANDARA 071 8685437
No. 501, North Hokandara,

HOMAGAMA 011 2892262, 077 7304046
"Aradanas", Senanayake Shopping Complex, Station Road,

KADUWELA 011 2579609
Nayana Bake House

KADUWELA 011 2412291, 011 4443566
375/1, Pahala Bomiriya, Yakkala,

KALUBOWILA 077 3551145, 011 2767259
No 195, Hospital Road,

KESBEWA 011 2703415
Seedevi Newspaper Office, 19, Horana Rd,

KIRULAPONE 071 5439396, 011 2514166
Ramani Book Shop, 27-A High Level Rd,

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380


இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு துப்புரவு பணிக்கான சேவை வழங்குநர் ஒருவரை தேர்வு செய்வதற்கான பெறுகை

**ஒப்பந்த இலக்கம் (IFB): DIE/PRO/03/2023/45**

01. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின், திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் மூலம் கீழுள்ள அலுவலகங்களுக்காக சுத்தம் செய்தல் மற்றும் துப்புரவு சேவையை வழங்குவதற்காக தகுதியுடைய வழங்குநர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| |
|---|
| 1. தலைமை அலுவலகம் "சுஹுருபாய" ஸ்ரீ சுபதிபுர வீதி, பத்தரமுல்லை |
| 2. கண்டி பிராந்திய அலுவலகம் |
| 3. வவுனியா பிராந்திய அலுவலகம் |
| 4. குருணாகலை பிராந்திய அலுவலகம் |
| 5. மாத்தறை பிராந்திய அலுவலகம் |
| 6. திருகோணமலை துறைமுக அதிகாரிகள் ஓய்வறை |
| 7. கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமானநிலைய அதிகாரிகள் ஓய்வறை |
| 8. ஹம்பாந்தோட்டை துறைமுக அதிகாரிகள் ஓய்வறை |
| 9. மத்தல சர்வதேச விமானநிலைய ஓய்வறை |
| 10. யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலைய ஓய்வறை |
| 11. கொழும்பு துறைமுக அலுவலகம் |
| 12. காலி துறைமுக அலுவலகம் |
| 13. வெலிசர வெளிநாட்டவர் தடுப்பு நிலையம் |

03. இந்த விலைக்கேட்பு தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படும்.
04. இது தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு மேலதிக விபரங்களை பிரதி கட்டுப்பாட்டாளர் (பெறுகை), பெறுகைப் பிரிவு, குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், 05ஆவது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூத்திபுரவீதி, பத்தரமுல்லை என்ற இடத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு, அந்த முகவரியில் இருந்தே விலைமனு ஆவணங்களை பரீட்சிப்பது எந்த ஒரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை மேற்கொள்ளப்படும்.

   அழைப்பு இலக்கம்: 011-2101559
05. ரூபா ஐயாயிரத்து ஐந்நூறு (ரூபா 5,500.00) மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி மற்றும் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை பிரதி கட்டுப்பாட்டாளர் (பெறுகை), பெறுகைப் பிரிவு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், 05ஆவது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு சமர்ப்பித்த பின் 2023.10.27 ஆம் திகதி தொடக்கம் 2023.11.16 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில், முத்திரை பொறிக்கப்பட்ட முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியை கொள்வனவு செய்ய முடியும். கட்டணம் ரொக்கப்பணத்தில் செலுத்துதல் வேண்டும்.
06. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை "மூலப் பிரதி" (Original) மற்றும் "நகல் பிரதி" (Duplicate) என இரு பிரதிகளை கொண்டதாக வெவ்வேறு உறைகளில் இட்டு அந்த உறைகளை ஓர் உறையில் இட்டு முத்திரை இட்டு இந்த உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, 5ஆவது மாடி. பெறுகைப் பிரிவு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், "சுஹுருபாய", ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு 2023.11.17 ஆம் திகதி பி.ப. 2.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கொண்டுவந்து ஒப்படைக்க முடியும். தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு கோரல் நிறைவடைந்த உடன், வருகை தர விருப்பத்தை வெளியிடும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
07. ஒப்படைக்கப்படும் விலைமனு விலைமனுக்களை ஏற்கும் இறுதித் திகதி தொடக்கம் நூற்று ஐந்து (105) நாட்கள் அல்லது கொள்வனவாளர் மூலம் நிர்ணயிக்கப்படுகின்ற எந்த ஒரு நீடிப்பு காலத்திற்காக செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
08. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2023.11.07 ஆம் திகதி மு.ப. 2.00க்கு பெறுகைப் பிரிவு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், 05ஆவது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை என்ற முகவரியில் இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**05ஆவது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## தேசிய போட்டி விலைமனுக் கோரல் (NCB)

### ஹோமாகம, பிட்டிபன, தலகல வீதி, மாஹேன்வத்த, கட்டம் I கட்டிடம் ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியுட் ஒப் பயோடெக்னொலொஜி (பிரைவட்) லிமிட்டட் (SLIBTEC) நிறுவனத்திற்கு ஆய்வுக்கூட உபகரணங்களின் பெறுகை.

**ஒப்பந்தம் இல: SLIBTEC/PROC/126/NCB/G&S/Laboratory Equipment**

01. ஹோமாகம, பிட்டிபன, தலகல வீதி, மாஹேன்வத்த, கட்டம்-I கட்டிடம், SLIBTEC இற்கு ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகைக்காக தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியுட் ஒப் பயோடெக்னொலொஜி (பிரைவட்) லிமிட்டட் (SLIBTEC) இன் திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவர் அழைக்கின்றார்.
02. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் தகைமை தகவுத்திறனின் பிரகாரம் சம்பந்தப்பட்ட துறையில் வர்த்தக பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
03 ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஹோமாகம, பிட்டிபன, தலகல வீதி, மாஹேன்வத்த, கட்டம் I கட்டிடம், ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியுட் ஒப் பயோடெக்னொலொஜி (பிரைவட்) லிமிட்டட்(SLIBTEC) நிறுவனத்திலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். தொ.பே இல : 0113431844, இலத்திரனியல் மின்னஞ்சல் முகவரி: slbtec@gmail.com, info@slibtec.gov.lk அத்துடன் விலைமனு ஆவணங்களை SLIBTECஇன் பெறுகைப் பிரிவில் வேலைநாட்களில் மு.ப 9.30 முதல் பி.ப 15.30 வரை பரிசீலிக்கலாம் / SLIBTEC இணையதளம் (https://www.slibtec.gov.lk/procurement) இலும் கிடைக்கும்.
04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் 2023 ஒக்டோபர் 27 முதல் 2023 நவம்பர் 17 வரை SLIBTEC இணையதளம் (https://www.slibtec.gov.lk/procurement) இலிருந்து ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை பதிவிறக்கம் செய்ய முடியும். விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் 2023 நவம்பர் 02ம் திகதி மு.ப 10.30 மணிக்கு சொல்லப்பட்ட முகவரியில் நடைபெறும்.
05. இலங்கை பயோடெக்னோலஜி பிரைவட் லிமிட்டட் மக்கள் வங்கி ஹோமாகம கிளை கணக்கு : 049-1-001-7-0067474 வங்கிக்கு மீளளிக்கப்படாத கட்டணம் இ.ரூபா 4,000.00 கட்டணத்தை வைப்பிலிடல் வேண்டும். (கவனிக்கவும் : "மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்" என காசு வைப்பு பற்றுசீட்டில் வைப்பு செய்யும் வைப்பாளரின் விபரம் மற்றும் நோக்கத்தை தயவு செய்து பூர்த்தி செய்யவும்) அத்துடன் விலைமனுவுடன் சொல்லப்பட்ட காசு வைப்பு பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும். கொடுப்பனவுகள் காசாக மேற்கொள்ளப்படல் வேண்டும் அத்துடன் ஏனைய கொடுப்பனவுகள் அனுமதிக்கப்படமாட்டாது.
06. விலைமனுக்கள் 2023 நவம்பர் 17, பி.ப 2.30க்கு அல்லது அதற்கு முன்பு ஹோமாகம, பிட்டிபன, தலகல வீதி, மாஹேன்வத்த, கட்டம் I கட்டிடம், இலங்கை பயோ டெக்னோலஜி பிரைவட் லிமிட்டட் நிறுவனம், திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவருக்கு நகல்களுடன் விநியோகிக்கப்பட்ட வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் விலைமனுதாரர்களின் சமுகமளிக்கும் பிரநிதிகள் முன்னிலையில் மூடப்பட்ட பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.
07. விலைமனுக்கள், விலைமனு திறக்கப்படும் திகதியில் இருந்து 60 நாட்கள் செல்லுப்படியாதல் வேண்டும். அத்துடன் எல்லா விலைமனுவுடனும் இ.ரூபா 100,000.00 கொண்ட ஓர் விலைமனு பினை இணைக்கப்படல் வேண்டும். விலைமனு பிணையானது விலைமனு செல்லுப்படியாகும் திகதியிற்கு அப்பால் 28 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும் (2024 பெப்ரவரி 13).
08. ஓர் ஊழியர் அல்லது ஓர் நிறுவனம் மற்றும்/அல்லது ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியுட் ஒப் பயோடெக்னொலொஜி (பிரைவட்) லிமிட்டட் (SLIBTEC) ஊழியர் உடன் ஓர் நெருங்கிய குடும்ப உறவைக் கொண்டுள்ள தனிப்பட்டவர்கள் மற்றும் கல்வியமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஏனைய நிறுவனங்களின் ஊழியர்கள் இந்த ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமையற்றவர்கள் ஆவர்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியுட் ஒப் பயோடெக்னொலொஜி (பிரைவட்) லிமிட்டட் (SLIBTEC),**
**2023 ஒக்டோபர் 27**


Repeat Your ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk


## 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

# பொல்கஹவெல பிரதேச சபை

2024ஆம் வருடத்தில் இந்த சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிர்மாண ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2023.12.10ஆம் திகதி வரை இடம் பெறும்.

பதிவு செய்வதற்காக இங்கு கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தை (A4 அளவில் தயாரிக்கப்பட்ட) பயன்படுத்துதல் வேண்டும். விண்ணப்பிக்கும் நிறுவனம் தமது நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழின் புகைப்படப் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல் எனவும் குறித்த உருப்படியின் பெயரையும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**அ. உபகரணங்கள் வழங்கல்**

01. மின்சார உபகரணங்கள் மற்றும், வீதி விளக்குகள்
02. காகிதாதிகள் மற்றும் காகிதங்கள்
03. அலுவலக உபகரணங்கள் / மரத் தளபாடங்கள் /உருக்கு/ வீட்டுத் தளபாடங்கள்.
04. கொங்கிறீட் பொருட்கள் மற்றும் ஹியும் குழாய். (புளொக் கல்/ கப்பில் தூண்/ ஹியூம் குழாய்/ எல்லை தூண்/ வேலித்தூண்/ மலர் சாடி/ இன்டர்லொக்)
05. டயர், ரியுப், மற்றும் பெட்டரி
06. வாகனங்கள், இயந்திராதி உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள்.
07. கணனி உபகரணங்கள் மற்றும் கணனிகள் / டோனர் வகைகள், டெப்
08. இலத்திரனியல் தட்டச்சுப் பொறி/ தட்டச்சுப் பொறி /புகைப்படப் பிரதி இயந்திரம்/ தொலைநகல் இயந்திரம்/ ரோணியோ இயந்திரம்/ டுப்ளோ இயந்திரம்
09. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
10. சீருடைகள் / சப்பாத்துகள் / திரைச்சீலைகள் / மேசை விரிப்புகள் (நிறுவனத்திற்கு அருகிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
11. நூலகப் புத்தகங்கள்/ சஞ்சிகைகள் / பத்திரிகைகள்
12. கல் / மணல் / கிரவல் / கற்தூள்கள் / ABC
13. சீமெந்து / இரும்பு / நிறப்பூச்சுகள் / ரைனோ சீட் / தகடு / ஆணிகள் உட்பட கட்டிட நிர்மாணப் பொருட்கள்.
14. முன் பாடசாலை உபகரணங்கள்.
15. அறிவித்தல் பலகை / கட்அவுட் / பெனர் / ஸ்டிக்கர்
16. விளக்குமாறு / தும்புத்தடி/ தூரிகை / கூடைகள் / கால் துடைப்பான் உட்பட்டதாக சுகாதார உபகரணங்கள்.
17. கன்று வகைகள் / பசளை / கிருமிநாசினிகள் / மண்வெட்டிகள், தோட்ட அலங்காரத்துக்குத் தேவையான பொருட்கள்.
18. பாடசாலைப் புத்தகங்கள்/பாடசாலைப் பைகள் /பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல்கள்
19. நீர்க்குழாய் உபகரணங்கள் மற்றும் சகல ஹாட்வெயார் பொருட்கள் (நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
20. எரிவாயு வழங்குதல் (நிறுவனத்திற்கு அருகிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
21. புல் வெட்டும் இயந்திரம்
22. பழைய பத்திரிகைகள் / புத்தகங்களைக் கொள்வனவு செய்வோர்
23. சகலவிதமான இரும்பு வேலை/ அலுமினியம் வேலை/ உருக்கியொட்டும் வேலைகள் (வீ.ஐ.பீ. கொட்டகைகள் / படலைகள்)
24. முத்திரைகளைத் தயாரித்தல் (சீல் வகைகள்) ஞாபகச் சின்னங்கள்/ பதக்கங்கள்
25. வீச்சுக்கத்திகள் / அரிவாள் / முள் உட்பட்ட உபகரணங்கள்
26 மின்பிறப்பாக்கிகள்
27 உணவு பானங்களை வழங்குதல் (நிறுவனத்திற்கு அருகிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
28 CCTV கமரா மற்றும் உபகரணங்கள்
29 சகல தார் வகைகள் மற்றும் தார் சார்ந்த பொருட்கள்
30 குடிநீர் (நிறுவனத்திற்கு அருகிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
31 தீயணைப்பு உபகரணங்கள்
32 சோலார் முறைமை மற்றும் உபகரணங்கள்

**ஆ. சேவை வழங்கல்**

01. அச்சு சேவைகள் வழங்கல்/அறிவித்தல் பலகைகள்/ பதாகை/ கட்அவுட்
02. மொழிபெயர்ப்புச் சேவைகள் வழங்குதல்
03. வாகனங்கள் இயந்திராதிகள் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள்
04. கணனி இயந்திரம் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள்
05. வளிச்சீராக்கி இயந்திர திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
06. புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், தட்டச்சுப் பொறி, ரோணியோ, டுப்ளோ இயந்திரங்களின் திருத்தவேலைகள்
07. டயர் மீள் நிரப்பல்
08. உள்ளக தொலைபேசி முறைமைகளின் திருத்தவேலைகள்
09 மரத் தளபாடங்களின் திருத்தவேலைகள்
10 கட்டிட திருத்தவேலைகள்
11. வீச்சுக் கத்தி, கத்தி, முள்ளு உட்பட்டதாக உபகரணங்களின் திருத்தவேலைகள்
12. தகனசாலை திருத்தவேலைகள்
13. புல் வெட்டும் இயந்திரங்களின் திருத்தவேலைகள்
14. போக்குவரத்திற்கான வாகனங்களை வழங்குதல் (1/2/3 கியூப் டிப்பர்கள்-1கி.மீற்றருக்கான கட்டணத்தை குறிப்பிடுதல் வேண்டும்)
15 சட்டத்தரணி சேவைகள் மற்றும் நொத்தாரிசு சேவைகள்
16. நில அளவையாளர் சேவை (நிறுவனத்திற்கு அருகிலுள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
17. சிறுவர் பூங்கா திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு

**இ. ஒப்பந்தக்காரராக பதிவு செய்வதற்கான பதிவுக் கட்டணங்கள்**

| | |
|---|---|
| 100,000.00 முதல் 500,000.00 ரூபா வரையான ஒப்பந்த வேலைகளுக்கு | ரூபா 2000.00 |
| 500,000.00 முதல் 1,000,000.00 ரூபா வரையான ஒப்பந்த வேலைகளுக்கு | ரூபா 3000.00 |
| 1,000,000.00 ரூபாவிற்கு மேற்பட்ட ஒப்பந்த வேலைகளுக்கு | ரூபா 4000.00 |

(கவனிக்கவும்: 10 இலட்சத்திற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ICTAD சான்றிதழ் கட்டாயமாகும்)

**நிபந்தனைகள்:**

01. பதிவுக் கட்டணமாக உருப்படி இல. (அ) 01 (மின் உபகரணங்கள் மற்றும் வீதி விளக்குகள்) வழங்குநராக பதிவு செய்வதற்கு ரூ. 1500.00 தொகையும் ஏனைய வழங்கல் மற்றும் சேவைகளுக்கு பதிவு செய்வதற்கு ஒவ்வொரு உருப்படிக்கும் ரூ. 1000.00 தொகையையும் செலுத்துதல் வேண்டும்.
02. அத்தொகையை, காசாக அல்லது செயலாளர் பொல்கஹவெல பிரதேச சபையின் பெயரில் எழுதப்பட்ட காசோலை மூலம் செலுத்த வேண்டும்.
03. பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் பிரதியை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
04. பதிவு செய்துள்ள வழங்குநர்களிடமிருந்தே விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பதிவு செய்துள்ள வழங்குநர்களுக்குப் புறம்பாகவும் பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்ளும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
05. பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு உரிய முறையில் வழங்குநர்களைத் தெரிவு செய்யும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது
06. கோரப்படும்போது விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத மற்றும் தருவித்தற் கட்டளை வழங்கப்படும்போது பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களினதும் மற்றும் உரிய தரத்தில் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கத் தவறும் வழங்குநர்களினதும் பதிவு இரத்துச் செய்யப்பட்டு பெயர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படும்.
07. குறித்த தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்படமாட்டாது என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.
08. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் 037-2243274 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி: 037 - 2243274**

**டி. டி. விக்கிரமசிங்க,**
**செயலாளர்,**
**பொல்கஹவெல பிரதேச சபை**

**2023 ஒக்டோபர் 25ஆம் திகதி**
**பொல்கஹவெல பிரதேச சபையில்**

## பொல்கஹவெல பிரதேச சபை

**வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம்.**

01. வழங்குநரின்/ ஒப்பந்தக்காரரின் பெயர் :
02. முகவரி:
03. தொலைபேசி இலக்கம் :
04. தொலைநகல் இலக்கம் :
05. மின்னஞ்சல் முகவரி :
06. வழங்கப்படும் சேவை/ பொருள் மற்றும் உருப்படி இலக்கம் (உ+ம் (அ)01, (ஆ)02)
07. ஒப்பந்த பொருட்கள் மற்றும் குறித்த இலக்கம் - ((இ) 03)
08. ICTAD பதிவு இலக்கம்/ வியாபார பதிவு இலக்கம்/ அடையாள அட்டை இலக்கம்
09. பதிவுக் கட்டணம் :
10. காசேலைகள் இலக்கம் :

மேற்படி தகவல்கள் சரியானது எனவும், குறித்த பதிவுச் சான்றிதழ் இதனோடு இணைக்கப்பட்டுள்ளதாகவும் இத்தால் உறுதி செய்கிறேன் மேலும் வழங்குநர்கள்/ பதிவு செய்வோர் பதிவு செய்வதற்கு குறித்த அறிவித்தலின் நிபந்தனைகளுக்கு இணங்குகிறேன்.

திகதி:........................ ...............................
கையொப்பம்

# கம்புறுப்பிட்டிய பிரதேச சபை

## 2024ஆம் ஆண்டிற்காக வழங்குநர்கள் மற்றும் சேவைகளைப் பதிவு செய்தல்

2024ம் ஆண்டிற்காக கீழ்க்காணும் வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வழங்குநராக பதிவு செய்து கொள்ளும் முகமாக உற்பத்தியாளர்கள், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிலிருந்து அல்லது நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வழங்கல்கள்**

1. சகல அலுவலக காகிதாதிகள்
2. சாதாரண களஞ்சியப் பொருட்கள் (இரும்பு, ஜிஐ பைப் மற்றும் உதிரிப்பாகங்கள் மற்றும் மண்வெட்டி, முள்ளு ரேக்கை, சவல், அலவாங்கு, தீந்தை வகைகள் போன்ற சகல உபகரணங்களும்)
3. சுகாதாரம் சார்ந்த உபகரணங்கள் (பிளாஸ்டிக் கூடை, விளக்குமாறு, தும்புத்தடி, கையுறை, பினோல், விம், ஹாபிக், அடுக்கு கூடை போன்றன
4. சீருடைக்குத் தேவையான துணி வகைகள்/ திரைச்சீலை/ மேசைத்துணி
5. விளையாட்டுப் பொருட்கள் (விளையாட்டு உபகரணங்கள்)
6. டயர், டியூப் மற்றும் பற்றரி (திரீவீல், டிரக்டர், டபிள் கெப் மற்றும் ஜே.சீ.பீ)
7. வாகன உதிரிப்பாகங்கள் (டபிள் கெப், முச்சக்கர வண்டி, டிரக்டர், ஜே.சி.பீ இயந்திரம், மண் அழுத்தும் இயந்திரம், நீர் பவுசர் உட்பட வாகன உதிரிப்பாகங்கள்)
8. ஜெனரேட்டர், புல் வெட்டும் இயந்திரம் மற்றும் நீர் மோட்டார் மற்றும் நீர் மீட்டர் போன்றன
9. அலுவலக மின் உபகரணம் (கல்கியூலேட்டர், மின் விசிறி மற்றும் மின் கேத்தல், ஹீட்டர் போன்றன)
10. கணனி, போட்டோப் பிரதி இயந்திரம், பெக்ஸ் மற்றும் அது சார்ந்த துணைப்பாகங்கள் (டோனர், கார்ட்ரிஜ்)/ கணனி மென்பொருள் வலையமைப்புக்கு உட்படுத்தல் போன்றன
11. அலுவலக உபகரணம், பலகை மற்றும் உருக்கு தளபாடங்கள் (ராக்கை, அலுமாரி, மேசை, பைல் கெபினெட் போன்றன)
12. மின் சேவைகளை வழங்குவதற்குத் தேவையான துணைப்பாகங்கள் (வயர், சுவிட்ச், பல்ப், பிளக், வீதி விளக்கு போன்றன)
13. அச்சு விடயங்கள் (அச்சுப் படிவங்கள் மற்றும் ஆவணங்கள் சார்ந்த சகல விடயங்கள்)
14. கட்டிடப் பொருட்கள் (கல், களிமண், செங்கல், மணல், சீமெந்து போன்றன)
15. ஹியூம் பைப் மற்றும் கொங்கிறீட் தூண், எல்லைக்கல், சீமெந்து புளொக்கல், கொங்கிறீட் சார்ந்த பொருட்கள் மற்றும் கொங்கிறீட் கலவை
16. பலகை வழங்குதல் (பலகை, திராந்து, ரீப்பை போன்றன)
17. சப்பாத்து, கையுறை, கம்பூட்ஸ் போன்றன
18. திகதி முத்திரை மற்றும் இறப்பர் முத்திரை
19. நீரை சுத்திகரிக்கும் இரசாயனப் பொருட்கள் (ஹைட்ரேட்டட் லைம், அலுமினியம் சல்பேட், குளோரின், டி.சி.எல். பவுடர் மற்றும் கிருமியழிப்பு இரசாயனப் பொருட்கள்)
20. நீர் உபகரணம் வழங்கல் (பீ.வீ.சீ. உபகரணம், ஜீ.ஐ, ஜீ.ஐ. நீர்க்குழாய் துணைப்பாகங்கள் போன்ற பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், பிளாஸ்டிக் நீர்த்தாங்கி, நீர் மோட்டர், நீர் மீட்டர், கொம்போஸ்ட் பெரல்)
21. கண்ணாடி மற்றும் கண்ணாடிப் பொருட்கள்
22. பொலித்தீன், அச்சிடப்பட்ட பொலித்தீன் உறை மற்றும் பசளை உறை வழங்குதல்
23. டோர்ச் பெற்றரி, ரீசாஜபல் டோர்ச் போன்றன
24. விளக்குமாறு மற்றும் தும்புத்தடி உற்பத்தி
25. சகல வகையான அச்சிடப்பட்ட போட், அச்சிடப்பட்ட போட் வழங்குதல் மற்றும் பொருத்துதல்
26. தீயணைப்பு உபகரணம் வழங்குதல்
27. வளிச்சீராக்கி இயந்திரம்
28. கேஸ் மற்றும் கேஸ் தாங்கி
29. புத்தகம், பத்திரிகை, சஞ்சிகை கொள்வனவு செய்தல்
30. உராய்வுநீக்கி எண்ணெய் வகை
31. நீர் மோட்டருக்கான உதிரிப்பாகங்கள்
32. கிருமிநாசினி திரவம், செனிடைசர், மாஸ்க்
33. உணவு பானங்கள் வழங்குதல்/ சில்லறைப் பொருட்கள்

**சேவைகள்**

1. மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் விடயங்கள் (ஜே.சி.பி. டிரக்டர், டபிள் கெப் மற்றும் திரீவீல், மண் அழுத்தும் இயந்திரம் மற்றும் நீர் பவுசர்)
2. தகனசாலை பழுதுபார்த்தல் மற்றும் சேவை விடயங்கள்
3. ஜெனரேட்டர் மற்றும் நீர் மோட்டர் மற்றும் நீர் சுத்திகரிப்பு அமைப்பு பழுதுபார்த்தல்
4. கணனி, அச்சு இயந்திரம் பழுதுபார்த்தல்
5. கதிரை குஷன் செய்தல், பின்னுதல் மற்றும் பழுதுபார்த்தல்
6. வாகனம் வாடகைக்கு வழங்குதல் (டிரக்டர், வேன், பயணிகள் வாகனம், டிப்பர், கம்பெக்டர், மரம் வெட்டும் இயந்திரம் மற்றும் நகரின் அவசர தேவைப்பாடுகளுக்கு தேவையான இயந்திராதிகள் போன்றன)
7. சட்டத்தரணி சேவைகள் வழங்குதல்
8. நில அளவை சேவைகள் வழங்குதல்
9. வளிச்சீராக்கி இயந்திரம் சேர்விஸ் செய்தல்
10. மரம் வெட்டுபவர்கள்
11. பட்டறை வேலைகள் மற்றும் அது சார்ந்த சேவை வழங்குதல்
12. டயர் மீள் நிரப்புதல் மற்றும் பழைய டயர் கொள்வனவு செய்தல்
13. பல்வேறு உற்சவ வேலைகளில் புகைப்படம் எடுத்தல் விடயங்கள்
14. கெனபி வகைகள் வழங்குதல்
15. காப்புறுதி காப்பீடு (வாகனங்களுக்கானது)

**நிபந்தனைகள்:**

1. விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதியின் பின்னர் ஒரு நாளில் காசு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு, காசோலைகள் அல்லது காசுக் கட்டளைகள் அடிப்படையில் வேண்டுதல் நிராகரிக்கப்படும்.
2. மேற்படி ஒரு வகைக்காக வேறுவேறாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன், அதற்காக வேறுவேறாக கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும்.
3. பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்படும் சகல விண்ணப்பங்களுடன் பதிவுக் கட்டணமாக ரூ. 250.00 செலுத்த வேண்டியதுடன், அத்தொகையை அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இவ் அலுவலகத்திற்குச் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொண்ட பின் அல்லது செயலாளர், பிரதேச சபை, கம்புறுப்பிட்டிய என்ற பெயருக்கு காசோலை அல்லது காசுக் கட்டளையை அனுப்பி கொடுப்பனவு மேற்கொள்வதுடன் விண்ணப்பங்களை 2023.12.31ம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.
4. இதற்காக தகைமையுள்ள சாதாரணமாக ஆறு மாத (06) காலத்திற்குள் மாறுபடாத நிலையான நிலையில் வைத்திருத்தல் வேண்டும். தேவை என கருதும் வேளையில் பதிவு செய்துள்ள வழங்குநர்களுக்கு வெளியிருந்தும் வேறு வழங்குநர்களிடமிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு விலைமனுக்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் அதனடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் உரிமை கம்புறுப்பிட்டிய பிரதேச சபைக்கு உரியது. மேலும் வழங்குநர்கள் 30 நாள் கால எல்லைக்கு கடன் சிட்டைகளின் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் வருகை தந்து பெற்றுக்கொள்ள முடிவதுடன், தொ.பே.இல. 041-2292275 மூலம் விசாரித்து அறிந்து கொள்ளலாம்.
6. இதற்காக தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

**கம்புறுப்பிட்டிய பிரதேச சபையில் பதிவு செய்வதற்காக வழங்குநர்களுக்கு இருக்க வேண்டிய தகவுத் திறன்கள்**

* கூட்டுத்தாபனமாயின் கூட்டுத்தாபனமாக சட்டரீதியாக்கப்பட்டதாக வழங்கப்படும் சான்றிதழ்.
* தனி நபர் வியாபாரமாயின் பதிவுச் சான்றிதழ்.
* கம்பனியின் கம்பனி சட்டத்தின் அடிப்படையில் பதிவு செய்த சான்றிதழ்
* இதற்கு முன்பு அரச நிறுவனங்கள் ஐந்திற்கு பொருட்கள் அல்லது சேவைகளை வழங்கியிருத்தல்.
* வாகன பழுதுபார்த்தல் சம்பந்தமாக தென் மாகாண சபையில் அனுமதித்த மோட்டார் கராஜ் ஆக இருத்தல் விசேட தகைமை ஆவதுடன், அரச நிறுவனங்கள் ஐந்திற்காவது சேவை வழங்கியுள்ள அனுபவமுள்ள நிறுவனமாக இருத்தல்.
* வெட் வரி செலுத்துவதாயின் அதற்காக வெட் வரி பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று.

**எல்.எல்.ஜே. சந்தமாலி**
**செயலாளர்,**
**கம்புறுப்பிட்டிய பிரதேச சபை.**

2024.10.06ம் திகதி
**கம்புறுப்பிட்டிய பிரதேச சபையில்.**

## கம்புறுப்பிட்டிய பிரதேச சபை
## 2024ம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம்

1. வியாபாரத்தின்/ வழங்குநரின் முழுப் பெயர்: ....................
2. தபால் முகவரி: ....................
3. தேசிய அடையாள அட்டை இல:....................
4. கையடக்க தொ.பே. இலக்கம்: ....................
5. நிறுவன தொ.பே. இலக்கம் மற்றும் பெக்ஸ் இல: ....................
6. ஈமெயில் முகவரி:....................
7. பதிவு செய்வதற்கு உத்தேசித்துள்ள பொருட்கள் மற்றும் சேவைகளின் உருப்படி இலக்கம் மற்றும் பெயர்:....................
8. வியாபார பதிவுச் சான்றிதழின் இலக்கம் மற்றும் வெட் இலக்கம்:.................... (புகைப்படப் பிரதியை இணையுங்கள்)
9. வழங்கக்கூடிய அதிகூடிய கடன் எல்லை:....................
10. கடன் அடிப்படையில் வழங்கக்கூடிய அதிகூடிய கால எல்லை: ....................
11. பதிவுக் கட்டணம் ரூ....................
12. காசுக்கட்டளை இலக்கம் மற்றும் பெறுமதி:.................... (காசுக்கட்டளையின் போட்டோப் பிரதியை இணையுங்கள்)
13. வேறு குறித்த சான்றிதழ் பிரதிகள்:....................
14. போக்குவரத்து வசதிகளை வழங்குதல்:....................

மேற்படி தகவல்கள் உண்மையானதும், சரியானதும் ஆகும் என உறுதி செய்கிறேன். அதனடிப்படையில் எமது நிறுவனம் .................... ஆண்டிற்காக வழங்குநராக பதிவு செய்யுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

திகதி ....................                ....................
**விண்ணப்பதாரியின் கையொப்பம்**

---

# அறிவித்தல்
## காலி மாநகர சபை

**2024 வருட வரவு - செலவு அட்டவணை**

2024 ஆம் வருடத்திற்கான மதீப்பீட்டு வருமானமும் செலவுகளும் உள்ளடக்கிய வரவு - செலவு அட்டவணை 2023.10.27 ஆம் திகதி முதல் 07 நாட்கள் காலி மா நகர சபை காரியாலயத்தில் மக்கள் பார்வைக்காக பகிரங்கமாக் வைத்துள்ளதை மாநகர சபை கட்டளையின் (252 அதிகாரம்) 212 "ஆ" அதிகாரத்தின் படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஆர்.எம்.டி.கே. ரஸ்நாயக**
**நகர ஆணையாளர்**
**2023 ஒக்டோபர் மாதம் 04 ஆம் திகதி**
**காலி மாநகர சபை காரியாலயத்தில்**

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

**பகிரங்க அறிவித்தல்**

2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(1) ஆம் பிரிவின் விதிகளுக்கமைய, கீழே விபரிக்கப்படும் ஓர் கம்பனியின் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

**சிலோன் வேஸ்ட் மெனேஜ்மன்ட் ரிபைனரி (பிவிட) எல்டிடி** ஆனது **சிலோன் வேஸ்ட் மெனேஜ்மன்ட் ரிபைனரி லிமிட்டட்** என மாற்றப்படுகிறது.

---

**2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்**

# கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை — ராகம

2024ஆம் வருடத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு இவ்வைத்தியசாலையில் பதிவு செய்ய உத்தேசிக்கும் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களது ஏக முகவர்கள் / அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் / வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அரச நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. வழங்கல்கள்**

1. அலுவலக காகிதாதிகள் (கணனிக் காகிதாதிகள் உட்பட)
2. அலுவலக தளபாடங்கள் (மரம், உருக்கு, நாரிழை)
3. அலுவலக உபகரணங்கள் (புகைப்படப் பிரதி இயந்திரம், டிஜிட்டல் டுப்ளிகேட்டர்கள், தொலைநகல் இயந்திரம், கணித்தல் இயந்திரங்கள் ஏனைய அலுவலக உபகரணங்கள்)
4. கணனி மற்றும் அதனைச் சார்ந்த துணைப்பொருட்கள்
5. மின்னுபகரணங்கள் (வளிச்சீராக்கி இயந்திரம், குளிர்சாதனம், சலவை இயந்திரம், மின்விசிறிகள்)
6. சீருடைத் துணிகள் / அனைத்து வகையான வைத்தியசாலை துணிகள் (படுக்கை விரிப்புகள், கட்டம் போட்ட துணிகள், திரைச்சீலைகள், துவாய்கள், நுளம்பு வலைகள், பஞ்சுத் தலையணைகள் போன்றன)
7. கொதிகலன்கள், கோப்பைகள், பிடிச்சட்டிகள் மற்றும் மின் சுருள்கள் (எலிமன்ட்)
8. கனரகப் பொருட்கள் (இரும்புக் குழாய்கள், ட்ரொலிகளுக்கான சக்கரங்கள், ஆணிகள் மற்றும் சுரைகள், பூட்டுகள், திறப்புகள், சிறிய கருவிகள் போன்றன)
9. வாகனங்களுக்கான டயர், டியூப் மற்றும் பட்டறிகள்
10. பெட்டறிகள் (AA, AAA, C, D Rechargeable)
11. பீ.வீ.சீ. குழாய்கள் மற்றும் நீர்க்குழாய் இணைப்புப் பொருட்கள்
12. குப்பை கூழங்களை அகற்றுவதற்கான பொலித்தீன் உறைகள்
13. மின் இணைப்புகள் மற்றும் மின் வழங்கல்களுக்குத் தேவையான மின்குமிழ்கள் மற்றும் மின் கம்பிகள் மற்றும் பல்வேறு வகையான சுவிட்ச்கள் போன்றன.
14. இறப்பர் கலந்த தும்பு மெத்தைகள் மற்றும் இறப்பர் மெத்தைகள்
15. மெகின்டோஸ்கள் மற்றும் ரெக்ஸின்கள்
16. தோற் காலணிகள் மற்றும் தோற் பொருட்கள்
17. சவர அலகுகள் (பிளேட்) (சவரம் செய்வதற்காக)
18. டிஜிட்டல் பிரின்டிங் (பெனர்களுக்காக), திகதி முத்திரைகள், இறப்பர் முத்திரைகள், பிளாஸ்டிக் வேலைகள், பெயர்ப் பலகைகள் மற்றும் ஸ்டிக்கர் தயாரித்தல்
19. அலுவலக அடையாள அட்டைகளைத் தயாரித்தல்
20. மருத்துவ உபகரணங்கள்
21. ஆய்வுகூட உபகரணங்கள்
22. மருந்துகள்
23. சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள்
24. இரசாயனப் பொருட்கள் / ஆய்வுகூட பாவனைப் பொருட்கள்
25. மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரண உதிரிப்பாகங்கள் வழங்குதல்
26. வைத்தியசாலைக் கட்டில்கள், நோயாளர் காவிகள், ட்ரொலிகள், உணவு ட்ரொலிகள், சக்கர நாற்காலிகள், சேலைன் ஸ்டான்ட்கள், ஒக்ஸிஜன் ஸ்டான்ட்கள்
27. நறுமண சவர்க்காரங்கள், சலவை சவர்க்காரங்கள், சலவைத் தூள்கள், சுத்திகரிப்புத் தூள்கள்
28. SLSPO பிரிவிற்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
29. CCTV கமரா முறைமையை பொருத்துதல் மற்றும் திருத்தவேலைகள்
30. உள்ளக தொலைபேசி முறைமையை வழங்கி பொருத்துதல்
31. பொதுமக்கள் தொடர்பு முறைமையை வழங்கி பொருத்துதல்

**02. சேவைகள்**

1. வளிச்சீராக்கி இயந்திரம் மற்றும் குளிர்சாதனம், மத்தியமயப்படுத்தப்பட்ட வளிச்சீராக்கி முறைமைகள், சடல அறைக்கான குளிர்சாதன முறைமைகளை பராமரித்தல் மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல்
2. கணனி இயந்திரங்கள், அச்சுப் பொறிகள், தொலைநகல், புகைப்படப் பிரதி, காசோலை அச்சுப் பொறி, டுப்ளோ இயந்திரம், பல்லூடக இயந்திரம், தட்டச்சுப் பொறிகள் உட்பட அலுவலக உபகரணங்களுக்கான திருத்தவேலைகள்
3. சலவை இயந்திரம், மின்விசிறிகள், நீர்ப் பம்பிகள், மின் கேத்தல்கள், கொதிகலன்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், தையல் இயந்திரங்கள், மைக்ரோவேவ் அவன் உட்பட ஏனைய மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள்
4. பொதுமக்கள் தொடர்பு முறைமையின் திருத்தவேலைகள்
5. வேலைத்தளங்களுக்கான (Work shop) மின்சாரக் கருவிகள் (Power Tools) உட்பட ஏனைய உபகரணங்களின் திருத்தவேலைகள்
6. அலுமினிய பிடிச்சட்டிகள் மற்றும் துருப்பிடிக்காத உபகரணங்களின் திருத்தவேலைகள்
7. கதிரை பின்னுதல் மற்றும் மரத் தளபாட திருத்தவேலைகள்
8. வாயு அடுப்பு திருத்தவேலைகள்
9. வாகனங்களின் திருத்தவேலைகள்
10. வாகனங்களை சேர்விஸ் செய்தல்
11. வாகன வளிச்சீராக்கி முறைமை திருத்தவேலைகள்
12. வாகன மின்சார முறைமை திருத்தவேலைகள்
13. முச்சக்கரவண்டி திருத்தவேலைகள்
14. வாகன குஷன், கார்பட், ஆசன மேலுறை இடுதல்
15. வாகன தகரவேலை மற்றும் நிறப்பூச்சு வேலை
16. வாகனங்களை காப்புறுதி செய்தல்
17. போக்குவரத்து வசதிகளை வழங்குதல் (பயணிகள் மற்றும் பொருட்கள்)
18. வர்த்தகப் பெறுமதியற்ற மரம் மற்றும் கிளைகளை வெட்டி அகற்றுதல்
19. இணையதள முறைமைகளின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
20. விசேடத்துவமான சக்கர நாற்காலிகளுக்கு வெள்ளி முலாம் பூசுதல் / கல்வனைஸ் செய்தல் / துகள் முலாம் (Powder Coating) இடுதல்
21. மின்பிறப்பாக்கி இயந்திரங்களின் திருத்தவேலை மற்றும் சேர்விஸ் செய்தல்
22. மின்னுயர்த்திகளின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
23. மருத்துவ வாயு முறைமையின் பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல்
24. மருத்துவ உபகரணங்கள் மற்றும் இரசாயன உபகரணங்களின் திருத்தவேலைகள்
25. CCTV கமரா முறைமை திருத்தவேலைகள்
26. உள்ளக தொலைபேசி முறைமையைப் பொருத்துதல், பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
27. எரியூட்டியை பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்

- 2.09 முதல் 2.15ஆம் இலக்கத்தின் கீழான சேவைகளுக்காக ஜா எல, வத்தளை, மஹர மற்றும் களனி போன்ற பிரதேச சபைகளின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் அமைந்துள்ள சேவை நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

03 நிபந்தனைகள்

3.1 பதிவுக் கட்டணமாக ஒரு விடயத்திற்காக 1000.00 ரூபாவை (மீளளிக்கப்படாதது) ரொக்கப் பணமாக 2023-10-27ஆம் திகதி முதல் 2023-11-23ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் சிறாப்பருக்கு செலுத்த வேண்டும் என்பதுடன் அதன்பொருட்டு வைத்தியசாலையினால் வழங்கப்படும் பற்றுச்சீட்டின் (பொது 172) மூலப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். (காசுக் கட்டளைகள், காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)

3.2 ஒரு விண்ணப்பதாரி பல விண்ணப்பங்களை அனுப்புவதாயின் அவை அனைத்தையும் ஒரே உறையிலிட்டு அனுப்பலாம்.

3.2 பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும்போது பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே விலைமனுக்கள் கோரப்படும். எனினும் ஏனைய வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோரும் உரிமையை வைத்தியசாலை பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

3.4 வேண்டுகோள் விடுக்கப்படும் வேளையில் விலைமனுக்களை சமர்ப்பிக்கத் தவறுபவர்கள், கட்டளை விடுக்கப்பட்டபின் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் மற்றும் தேவையானபோது மாதிரிகள் மற்றும் விபரமான தகவல்களை வழங்காமல் தவிர்க்கும் வழங்குநர்களின் பெயர்கள் முன்னறிவித்தலின்றி பதிவுவேட்டிலிருந்து அகற்றப்படும்.

3.5 1.20 மற்றும் 1.24ஆம் இலக்க விடயங்களுக்கு வழங்குநர்களால் தமது நிறுவனத்தில் உள்ள உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருட்களில் பட்டியலொன்றை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

3.6 கட்டளை விடுக்கப்பட்ட பொருட்களின் எதிர்பார்க்கப்பட்ட தரத்துடன் பூரணமாக ஒப்படைத்திருத்தல் அல்லது குறித்த சேவையை திருப்திகரமான முறையில் நிறைவேற்றப்பட்டிருந்தால் மாத்திரமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். வழங்குநர்களால் ஆகக்குறைந்தது 02 மாத கால கடன் வசதி வழங்கப்படல் வேண்டும்.

3.7. வழங்கல் செயற்பாடுகளின் போது நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் அரசாங்கத்தினால் அவ்வப்போது விடுக்கப்படும் அறிவுரைகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

3.8 பதிவு செய்வதற்கான விண்ணப்பம் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் பின்வரும் மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய தங்களால் தயார் செய்து கொள்ளப்பட்ட விண்ணப்பத்தை உபயோகிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

3.9 அனைத்து விண்ணப்பங்களையும் பின்வரும் முகவரிக்கு 2023-11-24ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024'' எனக் குறிப்பிடல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும் அன்றைய தினத்திற்குப் பின் இது தொடர்பான எந்தவொரு விண்ணப்பமும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

3.10 இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் இறுதித் தீர்மானத்தை பிரந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களை 0112959261/2 நீடிப்பு 722 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர்,
கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை,
ராகம.

**வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம் - 2024ஆம் வருடம்**

01. வியாபாரத்தின் / வழங்குநரின் பெயர் : ....................
02. முகவரி:....................
03. வியாபார நடவடிக்கையின்போது தொடர்புகொள்ளக்கூடியவரின் பெயர்:....................
04. தொலைபேசி இல:....................    தொலைநகல் இல:....................
05. மின்னஞ்சல் முகவரி:....................
06. பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் வழங்கல் / சேவையின் பெயர் மற்றும் இல:....................
07. வியாபாரத்தின் தன்மை (உற்பத்தியாளர் / உள்ளூர் முகவர்):....................
08. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் இல:....................
(குறித்த சான்றிதழின் புகைப்படப் பிரதியை இணைக்கவும்)
09. கடன் வசதிகள் (i) கால எல்லை: ....................
(ii) தொகை: ....................
10. பெறுமதி சேர் வரி பதிவிலக்கம் (VAT): ....................
- இயைபுடைய வருடத்திற்கு செயல்நிலை வெட் வரி செலுத்துபவரா என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கவும்.
11. பதிவுக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இல.: ....................
திகதி:....................
தொகை:....................
12. போக்குவரத்து வசதிகள் உள்ளனவா என்ற விபரம்: :....................

மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன் என்பதுடன் வடகொழும்பு போதனா வைத்தியசாலையின் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுகிறேன்/றோம்.

....................    ....................    ....................
விண்ணப்பதாரியின் கையொப்பம்    திகதி    நிறுவனத்தின் முத்திரை

---

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

JZ-3928 MITSUBISHI CANTER 2005, LORRY கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 . 068617

PX-7081 MAHINDRA MAXIMO 2014, கூடிய விலைக் கோரிக்கை க்கு . வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 . 068615

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

HH-5831 BAJAJ 2003, THREEWHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 068616

## வேலைவாய்ப்பு

**319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

கொழும்பு04ல் உள்ள வீட்டிற்கு 45 -55 வயதிற்குட்பட்ட பெண் சமையல், சுத்திகரிப்பு வே லைக்கு ஆள் தேவை. திறைமைகேற்ப ந ல்ல சம்பளம் வழ ங்கப்படும். தொலைபே சி இலக்கம் 07774 84033. 068670

## காணி/தோட்டம்

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

அத்திடிய, ஹரமானிஸ் மாவத்த முடிவில் பேரஸ் கங்கைக்கு முகப்பாக 10.5 பேர்ச் விற்பனைக்கு. ஒரு பேர்ச் 18 இலட்சம். சட்டத்தரணி அசேல 0773480414, 0759480414. 068631

தலவத்துகொட விக்ரமசிங்ஹபுர வீதி 6ம் ஒழுங்கையின் அடுத்ததாக அமைந்துள்ள 10 பேர்ச் மற்றும் 8 துண்டுகள் விற்பனைக்கு. சட்டத்தரணி அசேல 0773480414. 068634

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை வீதி 40 பேர்ச் காணி, 06 பேர்ச் மற்று ம் 08 பேர்ச் துண்டுகளாக விற்பனைக்கு. அசேல 0773480414. 068622

it's what you want www.adz.lk

# பெறுகை அறிவித்தல்

பொல்கஹவெல பிரதேச சபைக்குச் சொந்தமான பொல்கஹவெல சிறுவர் பூங்காவில் விளையாட்டு ரெயிலை (மின்) மற்றும் “மெரிகோ ரவுன்”ஐ பழுதுபார்ப்பதற்காக 2023.12.31 முதல் 2023.11.13 வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன. பொல்கஹவெல ரயில் நிலையத்திற்கு முன்னால் உள்ள குறித்த இடத்தைப் பரீட்சித்துப் பார்த்து விலைமனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன், அதனோடு சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பங்களை பொல்கஹவெல பிரதேச சபை தலைமையகத்திற்கு வருகைதந்து மீளளிக்கப்படாத ரூ.1000.00 கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்: 037-2243274

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**பொல்கஹவெல.**

## இலங்கை வங்கி

### ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

**கடன் தொடர்பு இலக்கங்கள்: 81558450, 81558621, 81558845, 83051991**

வெரலப்பார, போகத்தரமுல்ல, வாத்துவ என்ற முகவரியிலுள்ள வரையறுக்கப்பட்ட ஈ எம் ஹொட்டேல்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

**முன்னாள் பணிப்பாளர்கள்**
1. வெரலப்பார, போகத்தரமுல்ல, வாத்துவ என்ற முகவரியைச்சேர்ந்த திரு. மன்சிமோவ் எல்ஷாத்
2. இல. 58/A, ஆசிரி நிவாச, அன்ஹெட்டிகம என்ற முகவரியைச் சேர்ந்த திரு. அன்ஹெட்டிகம கமரால்லகே கிரேஷான் ஷாம்லி வீரவர்தன

**இந்நாள் பணிப்பாளர்கள்**
1. வெரலப்பார, போகத்தரமுல்ல, வாத்துவ என்ற முகவரியைச்சேர்ந்த திரு. மன்சிமோவ் எல்ஷாத்
2. இல. 28, வெலிகெட்டிய, பமுனுகம என்ற முகவரியைச் சேர்ந்த திரு. கண்டமுல்ல ஆரச்சிகே ஜோசப் டக்ளஸ் பீரிஸ்

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.10.06ஆம் திகதி 2353 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.10.03ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் நிலமனையையும் இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த M/S T & H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்கள் 08.12.2023 ஆம் திகதி 10.00 a.m. மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

**1. காணி பற்றிய விபரம்**
- a) மாவட்டம் : களுத்துறை
- b) பிரதேச செயலகம் : களுத்துறை
- c) கிராம சேவையாளர் பிரிவு : போகத்தரமுல்ல மேற்கு
- d) கிராமம் அல்லது நகரம் : போகத்தரமுல்ல
- e) வீதி :
- f) வரி மதிப்பீட்டு இலக்கம் :
- g) நில அளவைப்பட இலக்கம் : 530015
- h) தொகுதி இலக்கம் : 01
- i) காணித்துண்டு இலக்கம் : 0249
- j) பரப்பளவு : 0.3254 ஹெக்டயர்
- k) அறுதியளிக்கப்பட்ட பரப்பளவு : 0.3254 ஹெக்டயர்
- i) கூட்டாட்சி (Condominium) ஆதனமெனில் கூறுகளின் எண்ணிக்கை

**2. முன் பதிவுத் தொடர்பு:**
- a) பதிவுசெய்த இடம் : களுத்துறை
- b) உரித்துச் சான்றிதழ் இல. : 00080002244
- c) உரித்தின் வகை : முதலாவது வகை

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.**

விலைகூறுவோர், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனத்துடன் / ஆதனங்களுடன் தொடர்புடைய உரிமைத்துவ உறுதியையும் அதனுடன் தொடர்புடைய ஏனைய ஆவணங்களையும் இலங்கை வங்கி மொரட்டுவ அதிமேற்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளரைத் தொடர்புகொள்வதனூடாக பார்வையிடலாம். தொடர்புகளுக்கு - 0112644161 / 011264527

**பெயர் : திருமதி. ஐ.பி.கே.என். பெரேரா**
**பதவி : சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மொரட்டுவ அதிமேற்தரக் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2023/10/31 திகதிக்கு காலாவதியாகும் இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2023/11/16 மற்றும் 2023/11/17 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

Orient Finance
ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 577 577

## அறிவித்தல்

### நிகவெரட்டிய பிரதேச சபை

### ௨0௨4 வருடாந்த ஆவணம் பொது மக்களின் பார்வைக்காக வைத்தல்

வடமேல் மாகாண ஆளுநரின் 2020.10.29 ஆம் திகதி இலக்கம் 2199/15 அதிவிஷேட அரசாங்க வர்த்தமானி பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள வரவு செலவுத்திட்டம் தயாரித்தல் மற்றும் அதிகாரமளித்தல் தொடர்பான சட்ட விதிமுறை இலக்கம் 10(2) ஆம் பிரிவின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட ஆவணம் பொது மக்களின் பார்வைக்காக பிரதேச சபையின் பிரதான காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதனை சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசாங்க விடுமுறை தினங்கள் தவிர்ந்த காரியால நேரத்தில் பரீட்சிக்க முடியும் என்பதை இத்தாளில் அறியத்தருகின்றேன்.

**2023 ஒக்டோபர் மாதம் 20ம் திகதி**

**எச்.எம்.பீ. ஹேரத்,**
**செயலாளர்,**
**நிகவெரட்டிய பிரதேச சபை.**

### 2011 இலக்கம் 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல 5 நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 8 (3) பிரிவின் பிரகாரம் சொத்துக்களை செயற்பாடற்றதாக்கும் கட்டளைப் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்

இல 509/50ஏ, முருகன்வத்த, கண்டி வீதி, களனி எனும் முகவரியில் மற்றும் பதிரனகே பியுமி மல்ஷா என்பவரால் கீழ்க்காணும் சொத்துக்களை மேற்படி சட்டத்தின் 35ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட விரோதமான செயற்பாடுகளின் மூலம் பெறப்பட்ட பணத்தில் ஈட்டப்பட்ட சொத்தாக மேற்படி சட்டத்தின் 7 மற்றும் 8ம் பிரிவின் பிரகாரம் 2023.04.25ம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் HC/SPL/04/2023 இன் கீழ் செயற்பாடற்றதாக்கும் கட்டளையை உறுதி செய்து நீடிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு திரு.எச்.கே.ரஞ்சித் சாந்தவினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 2020.01.21ம் திகதிய இல.4545 விற்பனை முறி மூலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ள (மஹர காணிப் பதிவு அலுவலகத்தில் G - 224/50 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது) 174 - கங்கபட கிராம அதிகாரி பிரிவில் பேலியகொட எனும் கிராமத்தில் காணப்படும் போகஹவத்த எனப்படும் பல்லேகெவத்த அல்லது வெல்லபொடவத்த எனும் சொத்திற்கு கே.ஏ.பேசிங்ஹ அனுமதிபெற்ற நில அளவையாளரால் 2005 ஒக்டோபர் 09ம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல 1107/2005 என்ற வரைபடத்தின் பிரகாரம் பிரித்து வேறாக்கப்பட்ட துண்டு இலக்கம் 2ஏ/3 கொண்ட 03 பேர்ச் கொண்ட காணி மற்றும் கட்டிடம்.

மேற்படி சொத்து பற்றிய தமது உரித்துரிமையை நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்கு உண்மையான மூன்றாம் தரப்பினருக்கு வசதிகள் வழங்கும் பொருட்டு இத்தால் பிரசுரிக்கிறேன்.

**நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்,**
**பதிவாளர்,**
**உயர் நீதிமன்றம்,**
**கொழும்பு - 12**

## NSB

### தேசிய சேமிப்பு வங்கி

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**NSB/MPC/NCB/TRE/TMS/2023/001**

**தேசிய சேமிப்பு வங்கிக்கு திறைசேரி முகாமைத்துவ தீர்வுகளை (Treasury Management Solution) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பதற்கான பெறுகை**

தேசிய சேமிப்பு வங்கிக்கு திறைசேரி முகாமைத்துவ தீர்வொன்றை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்பு-03, இல. 255, காலி வீதி, தேசிய சேமிப்பு வங்கியின் சார்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பெறுகைக் குழு தலைவர் விலைமனுக்களை அழைக்கின்றார்.

| பெறுகையின் விளக்கம் | தேசிய சேமிப்பு வங்கிக்கு திறைசேரி முகாமைத்துவ தீர்வொன்றினை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பதற்கான பெறுகை (உற்பத்தி & DR) |
|---|---|
| தேவையான மீளளிக்கப்படாத டெண்டர் கட்டணம் | ரூபா 25,000.00 |
| சமர்ப்பிக்கப்பட தேவைப்படும் விலைமனுப் பெறுமதி | ரூபா 3,500,000.00 |
| விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம் | 2023-12-01ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை |
| டெண்டர் முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | 2023-12-08ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு |
| மூலப் பிரமாண தகுதிகள் | • அரசாங்கம் அல்லது வங்கியினால் கரும் பட்டியலுக்கு உட்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.<br>• விலைமனுதாரர் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டிருக்க வேண்டும் அல்லது உள்நாட்டு முகவர் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டிருக்க வேண்டும்.<br>• முன்மொழியப்பட்ட தீர்வானது குறைந்தபட்சம் இலங்கையில் உரிமம்பெற்ற ஒரு (01) வர்த்தக வங்கியிலாவது வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.<br>• விலைமனுதாரர், முன்மொழியப்பட்ட தீர்வின் புலமைச் சொத்து உரிமையாளராக (Intellectual Property - IP) அல்லது பிரத்தியேக விற்பனை மற்றும் விநியோக பங்குதாரராக இருத்தல் வேண்டும்.<br>• முன்மொழியப்பட்ட தீர்வானது தேசிய சேமிப்பு வங்கியின் மைய வங்கியாக்க (Core Banking) முறைமையுடன் ஒன்றிணைக்கக் கூடியதாகவிருத்தல் வேண்டும்.<br>• விலைமனுதாரர் கடந்த 5 நிதியாண்டுகளில் 250,000,000 இலங்கை ரூபாவிற்குக் (650,000 USD) குறையாத சராசரி வருடாந்த புரள்வைக் கொண்டிருத்தல் வேண்டும். |

1. விலைமனுக்கோரலானது இரு கடித உறை முறையில் மற்றும் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
2. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-03, இல. 255, காலி வீதி, தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவில் 2023-12-01ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் 011-2467402/ 011-2377200 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்தல் என்பவற்றை மேற்கொள்ளலாம்.
3. 2023-11-01ஆம் திகதி முதல் 2023-12-01ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 25,000.00 ரூபாவைச் செலுத்தியதன் பின் நிறுவனக் கடிதத் தலைப்பில் (அசல்) அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை கொழும்பு-03, இல. 255, காலி வீதி, தேசிய சேமிப்பு வங்கியின் தலைமை அலுவலக காசாளர் கருமபீடத்திற்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
4. விலைமனுக்களை **தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு, 6ஆம் மாடி, பொது முகாமையாளர் பிரிவு, தேசிய சேமிப்பு வங்கி, 255, காலி வீதி, கொழும்பு-03** எனும் முகவரிக்கு 2023-12-08ஆம் திகதி பி.ப. 02.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் உள்ள பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையில் நேரில் ஒப்படைத்தல் வேண்டும்.
5. விலைமனுக்களுடன் மேற்கூறப்பட்ட பொருத்தமான விலைக்கோரல் பிணை முறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட வெளிப்புற உறையொன்றில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான உறைகளை இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் **“திறைசேரி முகாமைத்துவ தீர்வுக்கான பெறுகை”** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2023-12-08ஆம் திகதி பி.ப. 02.30 மணிக்கு தேசிய சேமிப்பு வங்கியின் பொது முகாமையாளர் / நுற்ப நிறைவேற்று அதிகாரி அலுவலகத்தில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. விலைமனுக்கள் 2024-06-08ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**255, காலி வீதி,**
**கொழும்பு - 03,**
**இலங்கை.**

## கேள்வி அறிவித்தல்

### பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

### எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி

### ஆபத்தான மற்றும் பலகை மரங்களை வெட்டி அகற்றுவதற்கான கேள்வி கோரல்

**கேள்வி இல: EPL/PL/TB/T-07/2023_ Timber**

எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் நிருவகிக்கப்படும் கீழ்க்காணும் தோட்டங்களில் மரங்களை வெட்டி அகற்றுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தோட்டம் | மரவகை | மரங்களின் அளவு | வேறு விடயங்கள் | லொட் இலக்கம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| ஹுனுகல | சப்பு | 27 | வன முகாமைத்துவ திட்டமிடலுக்கு உரித்தான மரங்கள் | 01 | 25,000/= |
| மில்லவான | தேக்கு | 29 | வன முகாமைத்துவ திட்டமிடலுக்கு உரித்தான மரங்கள் | 02 | 25,000/= |
| மில்லவான | தேக்கு | 09 | வன முகாமைத்துவ திட்டமிடலுக்கு உரித்தான மரங்கள் | 03 | 10,000/= |
| மில்லவான | மஹோகனீ | 40 | வன முகாமைத்துவ திட்டமிடலுக்கு உரித்தான மரங்கள் | 04 | 25,000/= |
| மில்லவான | மஹோகனீ | 35 | வன முகாமைத்துவ திட்டமிடலுக்கு உரித்தான மரங்கள் | 05 | 25,000/= |
| ரத்வத்த | எலஸ்டோனியா | 25 | வன முகாமைத்துவ திட்டமிடலுக்கு உரித்தான மரங்கள் | 06 | 25,000/= |
| ரத்வத்த | எலஸ்டோனியா | 25 | வன முகாமைத்துவ திட்டமிடலுக்கு உரித்தான மரங்கள் | 07 | 25,000/= |
| ரத்வத்த | எல்பீசியா மற்றும் கிரிவிலியா | 09 | வன முகாமைத்துவ திட்டமிடலுக்கு உரித்தான மரங்கள் | 08 | 10,000/= |
| ரத்வத்த | பலா | 03 | விழுந்த மரங்கள் | 09 | 5,000/= |
| ரத்வத்த | பலா | 03 | விழுந்த மரங்கள் | 10 | 5,000/= |
| பண்டாரபொல | கிரிவிலியா,டுனா,சப்பு மற்றும் லூனுமிதெல்ல உட்பட கலப்பு மரங்கள் | 07 | ஆபத்தான மரங்கள் | 11 | 10,000/= |
| பண்டாரபொல | பலா | 02 | ஆபத்தான மரங்கள் | 12 | 5,000/= |
| எல்கடுவ | சப்பு | 19 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 13 | 25,000/= |

கேள்விப் பத்திரங்கள் மற்றும் நிபந்தனைகள் 2023.10.27 முதல் 2023.11.09 பி.ப 12.30 வரை குறித்த தோட்ட அலுவலகங்களில் அல்லது இல. 320, “ஜனவத்து பியச”, டீ.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு - 10 இல் அமைந்துள்ள எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் உப அலுவலகத்தில் மற்றும் 2023.10.27 முதல் 2023.11.10 பி.ப 12.30 வரை ரத்வத்த உக்குவலயில் அமைந்துள்ள தலைமையகத்தில் ரூ.2000/= பெறுமதியான மீளளிக்கப்படாத தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். முறையாகப் பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள், 2023.11.10 பி.ப 1.00 வரை எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் ரத்வத்த, உக்குவெலவில் அமைந்துள்ள தலைமையகத்தின் கேள்விச் சபையின் தலைவரால் ஏற்கப்படுவதுடன் கேள்விதாரர்கள் முன்னிலையில் 2023.11.10 பி.ப 1.00 இற்கு திறக்கப்படும். கேள்விச் சபையின் தலைவரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

திருப்திப்பட முடியாத அதிகூடிய விலைமனுக்கள் சம்பந்தமாக, கலந்து கொண்ட சகல கொள்வனவாளர்களுடனும் கலந்துரையாடும் அதிகாரம் தலைவருக்குரியது.

**தலைவர்,**
**பெறுகைச் சபை,**
**எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி,**
**ரத்வத்த,**
**உக்குவெல.**

**தொலைபேசி இலக்கம் :**
- **066- 2242522 - தலைமையகம்**
- **066- 3682755 - நாலந்த தோட்டம்**
- **066-3682455 - பண்டாரபொல தோட்டம்**
- **066- 3133355 - எல்கடுவ தோட்டம்**
- **066- 3682458 - ஹுனுகல தோட்டம்**
- **066- 3682461 - மில்லவான தோட்டம்**

## அஞ்சல் திணைக்களம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### வெளிநாட்டு அஞ்சல் நிர்வாகங்களுக்கு கடல் அஞ்சல் சரக்குகளின் போக்குவரத்து

**பெறுகை இல. POST/PMD/04/36/2023**

வெளிநாட்டு அஞ்சல் நிர்வாகங்களுக்கு கடல் அஞ்சல் சரக்குகளின் போக்குவரத்துக்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து அஞ்சல் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. தேசிய போட்டி ரீதியான விலைமனு மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.
03. ஒப்பந்தம் வழங்குவதற்கு விலைமனுதாரர் பின்வரும் தகைமை அளவுகோலை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
    I. இலங்கை பரிமாற்ற கட்டுப்பாட்டாளருடன் பதிவு செய்திருத்தல்.
    II. இலங்கை சரக்கு அனுப்பும் சங்கம் (SLFFA)/ இலங்கை கப்பல்கள் முகவர்கள் சங்கத்தின் (CASA) பதிவு மற்றும் NVOCC தர A (கப்பல் அல்லாத பொது தாங்கிகள் செயற்பாடு) உரிமம்
04. 2023 நவம்பர் 16 ஆம் திகதி 15.00 மணி வரை தபால்மா அதிபருக்கு 4,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023 ஒக்டோபர் 27 ஆம் திகதியில் இருந்து 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, இல. 310, அஞ்சல் தலைமையகம், அஞ்சல் திணைக்களம், கணக்காளருக்கு (பெறுகை) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
05. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023 நவம்பர் 17 ஆம் திகதி 11.00 மணி அல்லது அதற்கு முன்னர் கணக்காளர் (பெறுகை), அஞ்சல் திணைக்களம், இல. 310, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்புவது அல்லது அஞ்சல் திணைக்களம், இல. 310, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரியில் கணக்காளர் (பெறுகை) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும். விலைமனு திறக்கப்படும் சந்தர்ப்பதில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.
06. விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து 77 நாட்காட்டி தினங்கள் வரை விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
07. அனைத்து விலைமனுக்களும் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும், அது;
    - இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி
    - இலங்கை தபால் திணைக்கள, தபால்மா அதிபரின் பெயரில்
    - 2024 மார்ச் 01 ஆம் திகதி வரை செல்லுபடியான 250,000.00 இ. ரூபா தொகை ஒன்றுக்காக
    - நிலையான படிவங்கள் (விலைமனு) பிரிவு IV இல் உள்ளடக்கப்பட்ட நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்க) விலைமனு பிணைக்கான படிவத்தை பயன்படுத்தி இருத்தல் வேண்டும்.
08. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, இல. 310, அஞ்சல் தலைமையகம், 3ஆவது மாடியில் 2023 நவம்பர் 9ஆம் திகதி 10.00 மணிக்கு நடைபெறும்.
09. எந்த ஒரு காரணத்தையும் கூறாது விலைமனு ஒன்றின் எந்த ஒரு பகுதியையும் ஏற்பது மற்றும் எந்த ஒரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கு திணைக்கள பெறுகைக் குழுவுக்கு உரிமை உள்ளது.
10. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வேலை நாட்களில் 011-4927249 என்ற தொலைபேசி இலக்கத்தில் கணக்காளரிடம் (பெறுகை) இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

**கணக்காளர் (பெறுகை),**
**அஞ்சல் திணைக்களம்,**
**அஞ்சல் தலைமையகம்,**
**இல. 310,**
**டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அஞ்சல் திணைக்களம்,**
**இல. 310, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**
**2023.10.27**

# மத்தியூஸின் வருகையோடு தீர்க்கமான போட்டியில் இலங்கை அணிக்கு வெற்றி



## அரையிறுதி வாய்ப்பை தக்கவைத்தது



இங்கிலாந்துக்கு எதிரான தீர்க்கமான போட்டியில் 8 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய இலங்கை அணி உலகக் கிண்ணத்தின் அரையிறுதி வாய்ப்பை தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டுள்ளது.

மறுபுறம் வாழ்வா சாவா போட்டியில் களமிறங்கிய நடப்பு உலக சம்பியன் இங்கிலாந்து அணி இந்தத் தோல்வியுடன் பெரும்பாலும் உலகக் கிண்ண அரையிறுதி வாய்ப்பை இழந்துள்ளது.

இதில் காயத்துக்கு உள்ளான மதீஷ பதிரணவுக்கு பதில் அணிக்கு அழைக்கப்பட்ட அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸ் இலங்கை குழாத்தில் இணைக்கப்பட்ட விரைவில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் களமிறக்கப்பட்டு அணியின் வெற்றிக்கு முக்கிய பங்களிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

பெங்களூர், எஸ். சின்னசுவாமி மைதானத்தில் நேற்று (26) நடைபெற்ற இந்தப் போட்டியில் சாமிக்க கருணாரத்னவுக்கு பதிலாகவே 36 வயதான மத்தியூஸ் அணிக்கு சேர்க்கப்பட்டார். இது அவர் பங்கேற்கும் நான்காவது உலகக் கிண்ண தொடராக அமைந்தது.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஆரம்பத்தில் விக்கெட் இழப்பின்றி 45 ஓட்டங்களை பெற்றிருந்தது. பந்துவீச அழைக்கப்பட்ட மத்தியூஸ், 28 ஓட்டங்களை பெற்றிருந்த டேவிட் மாலனின் விக்கெட்டை சாய்த்தார்.

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மத்தியூஸ் 2020 மார்ச் மாதத்திற்கு பின்னரே ஒருநாள் சர்வதேச போட்டியில் பந்துவீச வந்தார். தொடர்ந்து ஜோ ரூட்டை ரன் அவுட் செய்த மத்தியூஸ் மொயின் அலியின் விக்கெட்டையும் வீழ்த்தி எதிரணிக்கு நெருக்கடி கொடுத்தார்.

இந்த உலகக் கிண்ணத்தில் தொடர்ந்து சோபிக்க தவறிவரும் இங்கிலாந்து விக்கெட்டுகளை காத்துக்கொள்ள முடியாமல் தடுமாறியது. இதனால் அந்த அணி 33.2 ஓவர்களில் 156 ஓட்டங்களுக்கே சுருண்டது. மத்திய வரிசையில் பென் ஸ்டொக் 76 பந்துகளில் 6 பௌண்டரிகளுடன் பெற்ற 43 ஓட்டங்களுமே அதிகமாக இருந்தது.

இலங்கை அணி சார்பில் வேகப் பந்து வீச்சாளர் லஹிரு குமார 3 விக்கெட்டுகளை பதம்பார்த்ததோடு மத்தியூஸுடன் கசுன் ராஜித்த தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலெடுத்தாட வந்த இலங்கை 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்தது. குசல் பெரேரா 4 ஓட்டங்களுடன் வெளியேறியதோடு அணித் தலைவர் குசல் மெண்டிஸ் 11 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார். எனினும் 3 ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த பத்தும் நிசங்க மற்றும் சதீர சமரவிக்ரம இலங்கை அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

இதன்படி இலங்கை அணி 25.4 ஓவர்களிலேயே 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. பத்தும் நிசங்க ஆட்டமிழக்காது 77 ஓட்டங்களை பெற்றதோடு மறுமுனையில் சதீர சமரவிக்ரம ஆட்டமிழக்காது 65 ஓட்டங்களை குவித்தார்.

இந்த வெற்றியுடன் இலங்கை அணி உலகக் கிண்ண புள்ளிப் பட்டியலில் தமது புள்ளிகளை 4ஆக அதிகரித்துக் கொண்டுள்ளது. இதுவரை 5 போட்டிகளில் ஆடியிருக்கும் இலங்கை 2 வெற்றி 3 தோல்விகளை பெற்றுள்ளது. எனினும் இலங்கை அரையிறுதி வாய்ப்பை தக்கவைத்துக்கொள்ள தொடர்ந்து வெற்றிகளை பெறுவது கட்டாயமாகும்.

இலங்கை அணி அடுத்து எதிர்வரும் ஒக்டோபர் 30 ஆம் திகதி பூனேவில் ஆப்கானிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

மறுபுறம் இங்கிலாந்து அணி இதுவரை ஆடிய ஐந்து போட்டிகளில் 4இல் தோற்றிருக்கும் நிலையில் அரையிறுதிக்கு முன்னேறுவதை பெறும்பாலும் இழந்துள்ளது.

## சர்வதேச செய்திகள்

# இஸ்ரேலிய தரைப்படை காசாவில் ஊடுருவி தாக்குதல்: உயிரிழப்பு 7000 ஆக அதிகரிப்பு

இஸ்ரேலிய தரைப்படைகள் காசாவுக்கு முன்னேறி ஹமாஸ் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் கூறியிருக்கும் நிலையில், ஒன்றுக்கு மேற்பட்ட தரைவழி ஆக்கிரமிப்புக்கு தயாராக இருப்பதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

"இது எப்போது, எப்படி அல்லது எத்தனை என்று நான் கூறமாட்டேன்" என்று கடந்த புதனன்று (25) தொலைக்காட்சியில் உரையாற்றிய நெதன்யாகு குறிப்பிட்டார்.

முழு முற்றுகையில் உள்ள காசா பகுதி கிட்டத்தட்ட மூன்று வாரங்களாக இஸ்ரேலின் தொடர் தாக்குதலுக்கு உள்ளாகி வரும் நிலையில் ஏற்கனவே அந்தப் பகுதி பெரும் பேரழிவுகளை சந்தித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி 200க்கும் அதிகமான பணயக் கைதிகளை பிடித்திருக்கும் ஹமாஸ் அமைப்பு, அந்த பணயக்கைதிகளில் சிலரை கொல்லப்போவதாக எச்சரித்துள்ளது. இந்தப் பணயக்கைதிகளில் பாதிக்கும் அதிகமானவர்கள் 25 நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு கடவுச்சீட்டு பெற்றவர்கள் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

காசாவில் உயிரிழப்பு ஏழாயிரத்தை தாண்டிய நிலையில் இந்தப் போர் பிராந்தியம் எங்கும் பரவும் அச்சுறுத்தல் குறித்து மத்திய கிழக்கு தலைவர்கள் அஞ்சுகின்றனர். ஏற்கனவே இஸ்ரேல் மீது மற்ற இடங்களில் இருந்து ஈரான் ஆதரவு போராட்டக் குழுக்கள் தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நெதன்யாகுவுடன் தொலைபேசியில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், "பணயக்கைதிகளை விடுவிப்பது மற்றும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்தை கண்டுபிடிக்கும் முயற்சிகள் குறித்து" பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இந்த பணயக்கைதிகள் காசாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அமெரிக்கா நம்புவதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதில் காசாவில் சிக்கியுள்ள வெளிநாட்டினர் அங்கிருக்கு பாதுகாப்பாக வெளியேறுவது, இஸ்ரேல் முடக்கி வைத்திருக்கும் அந்த குறுகிய கடலோரப் பகுதிக்கு தொடர்ந்து உதவிகள் செல்வது மற்றும் பலஸ்தீன மக்களுக்கு நிரந்தர அமைதியை ஏற்படுத்துவது குறித்து பேசப்பட்டதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வடக்கு காசா மீது இஸ்ரேல் இராணுவம் நேற்று அதிகாலை பாரிய ஊடுருவலை மேற்கொண்டதாக இஸ்ரேலிய இராணுவ வானொலி குறிப்பிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அதிக பாதுகாப்புக் கொண்ட எல்லையைத் தாண்டி இஸ்ரேலிய கவச வாகனங்கள் காசாவுக்குள் ஊடுருவுவது மற்றும் அடுத்த கட்ட போர் நடவடிக்கைக்கு தயாராவதற்கு கட்டடங்களை தகர்க்கும் வீடியோவை இஸ்ரேல் வெளிட்டது. காசாவில் தாக்குதல்களை நடத்தி விட்டு இஸ்ரேலிய தரைப்படை அங்கிருந்து வெளியேறியதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

"டாங்கிகள் மற்றும் தரைப்படை பல பயங்கரவாத செல்கள், உட்கட்டமைப்பு மற்றும் டாங்கி எதிர்ப்பு ஏவுகணை ஏவுதளங்களை தாக்கின" என்று இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இஸ்ரேல் தான் திட்டமிட்டிருக்கும் தரைவழி தாக்குதலை ஆரம்பிப்பதாக இது அமையவில்லை. அதற்கான முன்னேற்பாடாக இந்த ஊடுருவல் இருந்ததாக கூறப்படுகிறது.

மறுபுறம் காசா மீதான இஸ்ரேலின் வான் தாக்குதல்கள் நேற்றைய தினத்திலும் நீடித்தது. புரைஜ் அகதி முகாமுக்கு அருகில் மத்திய காசா, கராரா கிராமத்தின் கிழக்கு பகுதி மீது இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரமாக இருந்துள்ளன.

இஸ்ரேல் வெளியிட்ட அறிவிப்புக்கு ஹமாஸ் நேரடியாக பதில் கூறாதபோதும், கிழக்கு புரைஜில் இஸ்ரேலிய ஹெலிகொப்டர் ஒன்றின் மீது தமது ஆயுதப் பிரிவு தாக்குதல் நடத்தியதாக குறிப்பிட்டுள்ளது.

எனினும் உலகில் அதிக சனநெரிசல் மிக்க பகுதி ஒன்றான காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் 250 இலக்குதல் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் நேற்று தெரிவித்தது. இதனால் அங்கு உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 7000ஐ தாண்டியுள்ளது.

காசாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை நேற்று 7,028 ஆக உயர்ந்திருந்ததோடு அதில் 2,913 சிறுவர்கள், 1,709 பெண்கள் மற்றும் 397 முதியவர்கள் அடங்குவதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மறுபுறம் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்குக் கரையிலும் வன்முறை தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் இந்தப் போர் வெடித்தது தொடக்கம் அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 100 ஐ தாண்டியுள்ளது. இஸ்ரேல் நேற்றைய தினத்திலும் சுற்றிவளைப்புகளை நடத்தி நூற்றுக்கணக்கானோரை கைது செய்தது.

வடக்கு காசாவில் ஜபலியா அகதி முகாமில் இஸ்ரேலிய போர் விமானம் வீடு ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியதில் தாய் மூன்று மகள்கள் மற்றும் ஆண் குழந்தை ஒன்று கொல்லப்பட்டுள்ளது.

1948 இல் இஸ்ரேல் உருவாக்கப்பட்டபோது தமது பெற்றோர் அங்கிருந்து வீடுகளை விட்டு





வெளியேறியவர்கள் என்று குறிப்பிட்ட தந்தை, என்ன நடந்தாலும் இங்கிருந்து வெளியேறப்போவதில்லை என்று குறிப்பிட்டார். கொல்லப்பட்ட தனது ஆண் குழந்தையை சுமந்தபடி அழுதுகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

"இவனுக்கு இரண்டரை மாதங்கள் தான் ஆகிறது. இவன் என்ன செய்தான்? இவன் கொலைகள் செய்தானா? யாரையாவது காயப்படுத்தினானா? யாரையாவது பிடித்து வைத்திருக்கிறானா? தனது வீட்டுக்குள் இருந்த அப்பாவிக் குழந்தை இவன்" என்று அந்தத் தந்தை குறிப்பிட்டார்.

வடக்கில் இருந்து வெளியேறும்படி இஸ்ரேல் விடுத்த எச்சரிக்கையை அடுத்து தெற்கு காசாவில் உள்ள கான் யூனிஸில் பெரும் எண்ணிக்கையான மக்கள் அடைக்கலம் பெற்றுள்ளனர். இந்நிலையில் அந்தப் பகுதி மீது இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதல்களில் 30 பேர் கொல்லப்பட்டதாக சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இஸ்ரேலிய வான் தாக்குதல்களில் காசாவில் உள்ள அல் ஜசீரா தொலைக்காட்சி செய்தியாளர் வயில் அல் டவுதாவின் குடும்ப உறுப்பினர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். அவரது மனைவி, மகன், மகள் மற்றும் பேரக் குழந்தையும் கொல்லப்பட்டுள்ளனர்.

காசாவில் எரிபொருள் தீர்ந்து வரும் நிலையில் இருப்பதாக ஐ.நா எச்சரித்துள்ளது. இதனால் காசா பகுதியில் நிவாரண மற்றும் மீட்புப் பணிகளை பெரிய அளவில் குறைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று அது எச்சரித்துள்ளது.

இந்நிலையில் நேற்று காசாவுக்கு எகிப்துடனான ரபா எல்லைக் கடவை வழியாக உணவு மற்றும் மருந்து பொருட்களை ஏற்றிய மேலும் 12 லொறிகள் வந்ததாக பலஸ்தீன செம்பிறை சங்கம் தெரிவித்துள்ளது. போர் வெடித்தது தொடக்கம் காசாவுக்கு 74 உதவி வாகனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. எனினும் பெரும் உதவிகள் தேவைப்படும் நிலையில் இது கடலில் போட்டதற்கு ஒப்பானது என்று ஐ.நா குறிப்பிட்டுள்ளது.

காசாவில் மனிதாபிமான விநியோகங்கள் மோசமான அளவுக்கு குறைந்துள்ளது. அங்கு மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் உலக நாடுகளின் முயற்சிகளும் தொடர்ந்து தோல்வி அடைந்து வருகிறது.

நேற்று பாப்பரசர் பிரான்சிஸுடன் தொலைபேசியில் பேசிய துருக்கி ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவான், காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் படுகொலைக்கு சமம் என்றும் சர்வதேச சமூகம் அமைதி காப்பது வெட்ககரமானது என்றும் தெரிவித்தார்.

காசாவில் மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள் நேற்று விவாதித்தனர். 27 நாடுகளைக் கொண்ட இந்த அமைப்பில் அயர்லாந்து மற்றும் ஸ்பெயின் போன்ற பலஸ்தீன ஆதரவு நாடுகள் மற்றும் ஜெர்மனி மற்றும் ஆஸ்திரியா போன்ற இஸ்ரேல் ஆதரவு நாடுகள் இருக்கும் நிலையில் அந்த அமைப்பு இஸ்ரேல் மற்றும் காசா போரில் பிளவை சந்தித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாதுகாப்புச் சபை மீண்டும் தோல்வி




ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்திற்கு ரஷ்யா மற்றும் சீனா வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியதோடு ரஷ்யாவின் தீர்மானத்திற்கு போதிய ஆதரவு கிடைக்காத நிலையில் இஸ்ரேல்–காசா போர் தொடர்பில் நடவடிக்கை எடுக்க பாதுகாப்புச் சபை மீண்டும் தவறியுள்ளது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பாதுகாப்புச் சபை கூட்டத்தில் இஸ்ரேலுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தில் முற்றுகையில் உள்ள காசா பகுதியில் மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததோடு சர்வதேச சட்டத்தின் வரையறைக்கு உட்பட்டு அனைத்து நாடுகளுக்கும் தற்பாதுகாப்புக்கு உரிமை உள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கு பத்து நாடுகள் ஆதரவு அளித்ததோடு ரஷ்யா மற்றும் சீனா வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தின. அண்மையில் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்திய ஐக்கிய அரபு இராச்சியமும் இதற்கு எதிராக வாக்களித்தது. பிரேசில் மற்றும் மொசம்பிக் வாக்களிப்பதை தவிர்த்துக்கொண்டன.

"பொதுமக்களை பாதுகாப்பதற்கு அன்றி பிராந்தியத்தில் அமெரிக்காவின் அரசியல் நிலைப்பாட்டை பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட வெறுமனே அரசியல் ஆவணமாக இது உள்ளது என்பது தெளிவாகிறது" என்று அமெரிக்காவின் தீர்மானம் குறித்து ரஷ்ய பிரதிநிதி வெசிலி நெபன்சியா தெரிவித்தார்.

அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானம் முழுமையான போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கவில்லை. இந்நிலையில் ரஷ்யா கொண்டுவந்த தீர்மானத்தில் "விரைவான, நீடித்த மற்றும் முழுமையாக மதிக்கக் கூடிய மனிதாபிமான போர் நிறுத்தம்" ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. பொதுமக்களுக்கு எதிரான அனைத்து வன்முறை மற்றும் தாக்குதல்களையும் கண்டிப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கு ரஷ்யாவுடன் சீனா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் கபோன் நாடுகள் மாத்திரமே ஆதரவு அளித்தன. அமெரிக்காவுன் பிரிட்டனும் வீட்டோவை பயன்படுத்திய நிலையில் அமெரிக்காவின் கூட்டணி நாடுகளான பிரான்ஸ் மற்றும் ஜப்பான் வாக்களிப்பதை தவிர்த்துக்கொண்டன.

ஏற்கனவே இஸ்ரேல்–காசா போர் தொடர்பில் பாதுகாப்புச் சபையில் இரண்டு தீர்மானங்கள் தோல்வி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 27ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன் THINAKARAN

கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

**சப்பிரகமுவ மாகாணம்**

### பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ள கூட்டுறவு சங்கங்களை மூடிவிடல்

சப்ரகமுவ மாகாண சபையின் 2007 இல 03 கூட்டுறவு சங்க யாப்பின் 50(அ) மற்றும் (ஆ) பிரிவில் கீழ் பதிவை இரத்துச் செய்துள்ள இரத்தினபுரி மாவட்டத்தின் கூட்டுறவு சங்கங்கள் ஏழு (07) பற்றிய விபரங்களை **www.sg.gov.lk** இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அச் சங்கங்களில் ஏதேனும் உரிமைத்துவம் சமர்ப்பிக்கப்படுமாயின் அதனை 2023.11.30ம் திகதிக்கு முன் அனுப்புமாறு இத்தால் தயவுடன் அறியத்தருகின்றேன்.

**கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் /பதிவாளர்**
**சப்ரகமுவ மாகாணம்**

## பதுளை மாநகர சபை

### 2024 - ஆண்டின் வரவு செலவுத்திட்ட அறிக்கை

மாநகர சபை சட்டவாக்கத்தின் (252 அதிகாரம்) 212 (ஆ) பிரிவின் பிரகாரம் பதுளை மாநகர சபையில் 2024 நிதியாண்டு சார்பாக தயாரிக்கப்பட்டுள்ள குறைநிரப்பு வரவு - செலவுத்திட்ட அறிக்கை மக்கள் பரிசீலனைக்காக அலுவலக நேரங்களில் 2023 ஒக்டோபர் 27 முதல் நவம்பர் 10வரை பதுளை மாநகர சபையின் செனரத் பரண விதான மக்கள் நூலக வளாகத்தில் மற்றும் மாநகர சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

**ஈ.ஜீ.கே.பீ. ஆரியரத்ன**
**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை**
**பதுளை**

**2023 ஒக்டோபர் 18ம் திகதி**
**பதுளை மாநகர சபை அலுவலகத்தில்**

## அறிவித்தல்

### கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தில்)

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் XII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக கம்பெனியொன்றை ஒடுக்குதல் செய்வதற்கான விண்ணப்பம்.

**வழக்கு எண் : CHC/64/2023/CO**
**கலைத்தல் : இயல்பு**

**முகம்மட் சாலி அக்பர் அலி**
இல. 432/01/02, இலபடகம,
பன்னல.

**மனுதாரர்**

**புளு சிப் சில (பிரைவேட்) லிமிடெட்,**
கொகோ பிள்டிங்,
இல. 127, கிரான் பாஸ், கொழும்பு 14.

**எதிர்-மனுதாரர்**

கொழும்பில் அமைந்துள்ள (அதன் குடியியல் அதிகார வரம்பிற்குட்பட்ட) மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் மேற்படி பெயரிடப்பட்ட நிறுவனத்தை ஒடுக்குவதற்கான மனு 2023ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01ஆந் திகதி சட்டத்தரணி லக்சித விக்ரமரத்ன என்பவரினால் மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என இதன் மூலம் அறிவித்தல் வழங்கப்படுகின்றது. குறித்த மனுவானது விசாரணைக்காக 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08ஆந் திகதி நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ள கட்டளையிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட மனு மீதான விசாரணையின் போது நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது அவரது சட்டத்தரணி அல்லது பதிவுபெற்ற சட்டத்தரணியூடாக சமுகமளிக்கலாம் என்பதுடன் மனுவின் பிரதியானது கம்பனியின் கடனாளி அல்லது பங்களிப்பாளருக்கு அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் வழங்கப்படும்.

**லக்சித விக்ரமரத்ன**
மனுதாரரின் சட்டத்தரணி
இல.391/A/3,
வெல்ல பாதுகாப்பு வீதி,
கொழும்பு 12.

**குறிப்பு:** மேற்குறித்த மனு மீதான விசாரணையின் போது நேரில் சமுகமளிக்க எவராவது நோக்கம் கொண்டிருப்பின் அவர் அல்லது அவரின் நோக்க அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணி **லக்சித விக்ரமரத்ன** என்பவருக்கு நேரில் அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்ப வேண்டும் அல்லது அவரது பதிவுபெற்ற சட்டத்தரணியினால் (அவ்வாறு இருப்பின்) கையொப்பமிட்டு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்படலாம். தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் மேற்குறித்தவருக்கு போதிய கால அவகாசத்துடன் 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06ஆந் திகதி மாலை 1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**லக்சித விக்ரமரத்ன**
**மனுதாரரின் சட்டத்தரணி**

## வென்னப்புவ பிரதேச சபை

### 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டவரைபு

வென்னப்புவ பிரதேச சபையின் 2024ம் ஆண்டிற்கான வரைபு வரவுசெலவுத்திட்ட ஆவணம் 2023 ஐப்பசி மாதம் 30 ஆம் திகதி முதல் 2023 கார்த்திகை 06 ஆம் திகதி வரை (அரசாங்க விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிறு தினங்கள் தவிர அலுவலக நேரங்களில்) வென்னப்புவ பிரதேச அலுவலகத்தில் பொதுமக்களின் பரிசீலனை பொருட்டு வைக்கப்பட்டுள்ளது என்பதனை பிரதேச சபை வரவு செலவுத்திட்ட வரைபு தயாரித்தல் மற்றும் வலுப்படுத்தல் விதிகள் 10.02(ஆ) ஆம் விதிகளின் பிரகாரம் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**டப்.டீ.லூஷன்**
**செயலாளர்**
**பிரதேச சபை - வென்னப்புவ**

**வென்னப்புவ பிரதேச சபை அலுவலகம்,**
**வென்னப்புவ**
**2023 ஐப்பசி 20ம் திகதி**

## 2024ஆம் வருடத்தில் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

### அக்குறணை பிரதேச சபை

2024ஆம் வருடத்தினுள் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் வழங்கல்கள் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்கு விரும்பும் வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. ஒரு விண்ணப்பத்திற்காக 1500.00 ரூபா தொகை அறவிடப்படுவதுடன் தம்மால் சுயமாகத் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களை செயலாளர், அக்குறணை பிரதேச சபை, அலவத்துகொட என்ற முகவரிக்கு 2023.12.31ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024' என்று குறிப்பிடுதல் வேண்டும்.
02. சகல காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகளிலும் செயலாளர், அக்குறணை பிரதேச சபை, அலவத்துகொட எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
03. வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் உங்களால் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம் மற்றும் ஆளடையாளம் பற்றிய ஏனைய ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. உங்களிடம் பொருட்கள் மற்றும் சேவைகளை கோரும்போது விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத, கட்டளை வழங்கப்படும் போது வழங்கல்களை மேற்கொள்ளாத, குறித்த நேரத்திற்கு மற்றும் குறித்த தரத்திற்கு அமையாத வழங்குநர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.
05. பதிவு செய்துள்ள வழங்குநர்களின் பட்டியலிலிருந்து விலைகளைக் கோரி குறித்த பொருட்கள் மற்றும் சேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
06. மேலதிக விபரங்களுக்கு 066-2244387 என்ற தொலைபேசி இலக்கத்தில் அலுவலக நேரங்களில் தொடர்புகொண்டு விசாரித்து அறியலாம்.

| தொடர் இல. | வழங்கல் விபரம் |
|---|---|
| 01 | சகல அலுவலக காகிதாதிகள் |
| 02 | அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், உருக்குத் தளபாடங்கள் |
| 03 | கணனி, புகைப்படப் பிரதி இயந்திரங்கள், அச்சுப்பொறிகள், தொலைநகல், கைவிரல் ரேகை பதிவு இயந்திரம், டுப்ளோ இயந்திரம், சகல டோனர் வகைகள் மற்றும் கணனி துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| 04 | வீதி விளக்கு உபகரணங்கள் மற்றும் அலுவலக மின் உபகரணங்கள் |
| 05 | விளையாட்டுத்துறைப் பொருட்கள் |
| 06 | சீருடைகள், திரைச்சீலைகள், மேசைத் துணிகள், பாதணிகள், காலுறைகள், அலுவலக பைகள், உத்தியோகபூர்வ இலச்சினைகள் |
| 07 | நிர்மாண இயந்திர உபகரணங்கள் |
| 08 | நிர்மாணப் பொருட்கள் (சீமெந்து, கருங்கல், மணல், செங்கல், கூரைத்தகடு, சிறுகல், நிறப்பூச்சுகள், குழாய்கள், ஜீ.ஐ. குழாய்கள், இரும்பு போன்றன) பிவிசி நீர்க்குழாய் மற்றும் துணைப்பாகங்கள், சகல வகையான கொங்கிறீட் உற்பத்திகள் (ஹியூம் குழாய்கள், கம்பித்தூண், புளொக்கல், தரையில் பதிக்கும் கற்கள்) |
| 09 | வாகன உதிரிப்பாகங்கள் (டயர், டியூப், பெற்றரி, எண்ணெய் வகைகள், ஏனைய உதிரிப்பாகங்கள், மீட்டர்) |
| 10 | சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளுக்கு தேவையான பொருட்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, தூரிகை, சவர்க்காரம். கையுறை, கிருமிநாசினி, மழை அங்கி, கம்பூட்ஸ், வாய்க் கவசம் போன்றன) |
| 11 | வாகனங்களை சேர்விஸ் செய்தல் |
| 12 | வீதிப்பராமரிப்பு மற்றும் வேலைத்தள உபகரணங்கள் (மண்வெட்டி, சவல், ரேக்கை, கத்தி, அளவை பட்டி போன்றன) |
| 13 | ஆயுர்வேத ஔடதங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் |
| 14 | தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு துணைப்பாகங்கள், உபகரணங்கள் |
| | **சேவைகள்** |
| 15 | வாகன இயந்திராதிகளை வாடகைக்கு வழங்குதல் |
| 16 | அச்சு வேலைகள் (புத்தகம், ஆவணங்கள், படிவங்கள், பில் புத்தகங்கள், சுவரொட்டிகள், அலுவலக அடையாள அட்டைகள்) |
| 17 | பட்டறை வேலைகள் |
| 18 | நில அளவை, சட்டம் மற்றும் ஆலோசனை சேவைகள் |
| 19 | சிங்கள, ஆங்கில, தமிழ் மொழிபெயர்ப்புச் சேவைகள் |
| 20 | அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| 21 | கணனி, அச்சுப்பொறி, தொலைநகல், புகைப்படப் பிரதி இயந்திர, விரல் ரேகை பதிவு இயந்திரம், வளிச்சீராக்கி இயந்திர திருத்தவேலைகள் |
| 22 | உருக்கியொட்டும் வேலைகள், மேசன் வேலைகள், நீர்க்குழாய், பட்டறை சேவைகள், தொழில்நுட்ப சேவைகள், உள்ளக தொலைபேசி சேவைகள் |
| 23 | வாகன திருத்தவேலைகள், கடைசல் இயந்திர வேலைகள், வாகன சேவைகள் வழங்குதல் |
| 24 | உத்தியோகபூர்வ முத்திரை, திகதி முத்திரை, நினைவுப் படிகம் தயாரித்தல், டிஜிட்டல் அறிவித்தல் அச்சிடல் மற்றும் பொருத்துதல் |
| 25 | அபாயகரமான மரங்களை வெட்டுதல் |
| 26 | உணவு வழங்குதல் |
| 27 | உற்சவப் பொருட்கள் (கெனபி கூடாரங்கள், உணவை பாதுகாக்கும் தொகுதிகள், நெஸ்கபே இயந்திரம், உணவுத் தட்டுகள், கண்ணாடிக் குவளைகள் போன்றன) |
| 28 | ஒப்பந்தக்காரர்களின் பொருட்டு - ரூபா 3,000.00 |

**டீ.ஜீ.எம்.பி. ரணசிங்க,**
**செயலாளர்,**
**அக்குறணை பிரதேச சபை**
**அலவத்துகொடை.**

## கேள்வி அழைப்பு

### பெறுகை அறிவித்தல்

### தேசிய நூதனசாலைகள் திணைக்களம் கொழும்பு - 07

### பூங்காப் பராமரிப்பு விடயங்களுக்கான கேள்விகோரல் 2024ம் ஆண்டுக்கானது

கொழும்பு தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தினால் மேற்படி வேலைக்கான அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

01. 2023.10.30 முதல் 2023.11.20 வரை வாரத்தின் சகல வேலை நாட்களிலும் மு.ப 9.00 முதல் பி.ப 2.00 வரை தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் கணக்கு பிரிவிற்கு, மீளளிக்கப்படாத ரூ. 2500.00 தொகையை செலுத்தி கேள்விகோரல் ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
02. சகல கேள்வி விண்ணப்பங்களுடனும் ரூ. 60,000.00 பெறுமதியான, இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து நிபந்தனையற்ற பிணை முறியொன்றை (Bid Bond) சமர்ப்பித்தல் வேண்டும். அது விலைமனுக்கள் திறக்கப்படும் தினம் முதல் 90 நாள் காலத்திற்கு செல்லுபடியாக வேண்டும்.
03. பொறியிடப்பட்ட கேள்வி பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தில் 2024ம் ஆண்டிற்காக பூங்கா பராமரிப்பு விடயங்களை மேற்கொள்வதுடன் சம்பந்தப்பட்ட விலைமனுக்கள்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
04. 2023.11.21 பி.ப 2.00 இற்கு கேள்விகோரல் முடிவடைந்தவுடன் அன்றே அந்த நேரத்திலேயே கேள்விகள் திறக்கப்படும். எனவே 2023.11.21 பி.ப 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கேள்வி ஆவணத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி பத்திரங்கள் பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து கொழும்பு-07, தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின், பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் உள்ளிடல் வேண்டும். அத்துடன் தாமதமாக கிடைக்கும் கேள்வி பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
05. கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு கேள்விகோரல் ஆவணங்கள் திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கலாம்.
06. சமர்ப்பிக்கப்படும் கேள்வியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியது. பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக இருக்கும்.
07. மேலதிக விபரங்களை தொ.பே இல: 011-2695686 அல்லது 011-2690146 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**பெறுகைக் குழுவின் தலைவர்.**
**தேசிய நூதனசாலைகள் திணைக்களம்,**
**இல.53,**
**சேர் மார்கஸ் பெர்னான்டோ மாவத்த,**
**கொழும்பு - 07**

## சுகாதார சேவைகள் திணைக்களம்

### போதனா வைத்தியசாலை, மஹமோதர, காலி

### 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள் பிரதிநிதிகள், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளிட்ட அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மற்றும் நபர்களிடமிருந்து இவ் வைத்தியசாலையில் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனைத்து வழங்கல்களும் இந் நிறுவனத்திற்கு கொண்டுவந்து கொடுக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்காக போக்குவரத்துக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது.

02. இதன்பொருட்டு இங்கு கீழ்க் காணப்படும் மாதிரிப்படிவத்திற்கமைவான விண்ணப்பமொன்றை சுயமாகத் தயாரித்து பூர்த்தி செய்து இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் '2024ஆம் வருடத்தில் வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்து கொள்ளல்' எனக் குறிப்பிட்டு 2023.11.30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, மஹமோதர, காலி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

03. அனைத்து விண்ணப்பதாரர்களும் மீளளிக்கப்படாத கட்டணமாக 500.00 ரூபா தொகையை ஒவ்வொரு தொகுதி மற்றும் சேவைகளுக்காக வெவ்வேறாக செலுத்துதல் வேண்டும். அதற்கான குறித்த தொகையை மஹமோதர போதனா வைத்தியசாலையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பொது 172 பற்றுச் சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் என்பதுடன் காசோலைகள், காசுக் கட்டளைகள் அல்லது வங்கிப் பற்றுச் சீட்டு என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

04.

**(அ) வழங்க வேண்டிய பொருட்கள்**

01 அனைத்து வகையான அலுவலக உபகரணங்கள்
02. அலுவலக காகிதாதிகள்
03. அலுவலக தளபாடங்கள்
04. மெத்தைகள்
05. பாய், விளக்குமாறு மற்றும் தும்பு உற்பத்திகள்
06. துப்புரவேற்பாட்டு பாவனைப் பொருட்களை வழங்குதல் (சவர்க்காரம், சலவைத் தூள், சுத்திகரிப்புப் பொருட்கள் உட்பட)
07. பொலித்தீன் சார்ந்த உற்பத்திகள்
08. அனைத்து வகையான துணி மற்றும் அது சார்ந்த உற்பத்திகள்
09. மெக்கின்டொஸ் மற்றும் ரெக்சின் வழங்குதல்
10. அலுமினியப் பொருட்கள் உட்பட உலோகப் பொருட்கள்
11. மின்னுபகரணங்கள்
12. வாகனங்களுக்கான பற்றரிகள்
13. டயர் மற்றும் டியூப்
14. கட்டிடப் பொருட்கள்
15. சத்திரசிகிச்சை உபகரணங்கள்
16. சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள்
17. ஆய்வுகூட பாவனைப் பொருட்கள்
18. மருத்துவ உபகரணங்கள்
19. மருந்து வகைகள் மற்றும் கருவிகள்

**(ஆ) வழங்க வேண்டிய சேவைகள்**

1. மரத்தளபாடங்களின் திருத்தவேலைகள்
2. கதிரை இழைத்தல் மற்றும் குஷன் இடுதல்
3. வெல்டிங் வேலை மற்றும் இரும்பு வேலை
4. தட்டச்சு, கூட்டல் இயந்திரம் போன்ற அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள்
5. இறப்பர் முத்திரை தயாரித்தல்
6. பொலிஷ் செய்தல் மற்றும் குறித்த சேவைகள்
7. ஊழியர் அடையாள அட்டைகளை வழங்குதல்
8. குளிர்சாதனப் பெட்டிகளின் திருத்தவேலைகள்
9. மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள்
10. எரிவாயு அடுப்புகளின் திருத்தவேலைகள்
11. வளிச்சீராக்கி இயந்திரத்தை சேர்விஸ் செய்தல் பராமரித்தல் மற்றும் திருத்தவேலைகள் செய்தல்
12. கணனி மற்றும் அச்சுப்பொறிகளை சேர்விஸ் செய்தல் மற்றும் திருத்தவேலைகள் செய்தல் (காலி நகருக்கு அருகில் விரும்பத்தக்கது)
13. வாகன திருத்தவேலைகள் வாகனங்களை சேர்விஸ் செய்தல்
14. வாகன மின் பராமரிப்பு
15. இயந்திரங்கள், உபகரணங்களின் திருத்தவேலைகள்
16. எரிவாயு அடுப்புகளின் திருத்தவேலைகள்
17. ட்ரொலி, சக்கர நாற்காலிகள் போன்ற உபகரணங்களின் திருத்தவேலைகள்

05. பொதுவாக பதிவு செய்து கொண்ட வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படுவதுடன் வைத்தியசாலை பணிப்பாளரின் அபிப்பிராயத்தின் பிரகாரம் ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் விலைகள் கோரப்படலாம். கட்டளை நிபந்தனைகளுக்கமைவாக வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பதிவு எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்துச் செய்யப்படும். மேலும் 02 மாத கடன் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க வேண்டும். வாகன திருத்தவேலைகள் மற்றும் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னரே பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

06. விண்ணப்பங்களில் பின்வரும் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

01. வழங்குநரின் பெயர்:..........................................
02. முகவரி:..........................................
03. தொலைபேசி இலக்கம்:..........................................
04. வியாபாரத்தின் பெயர்:..........................................
05. வியாபார பதிவிலக்கம் மற்றும் திகதி:..........................................
06. விண்ணப்பிக்கும் வழங்கல் மற்றும் சேவை:..........................................
..........................................
(உங்கள் நிறுவனத்தால் வழங்கப்படும் பொருட்கள், பொருள் வகை மற்றும் சேவையைத் தெளிவாகக் குறிப்பிடுங்கள்)
07. பொருட்களுக்கான கட்டளை கிடைக்கப் பெற்றதன் பின்னர் போக்குவரத்து வசதிகள் இலவசமாக பெற்றுத் தரப்படுமா இல்லையா என்பது பற்றிக் குறிப்பிடுங்கள்..........................
08. பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் இலக்கம் மற்றும் தொகை

திகதி:

..............................................
**முகாமையாளரின் கையொப்பம்**

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**மஹமோதர, காலி.**

Daily News Classifieds, the Housewives' companion

# மாத்தளை பிரதேச சபை

# 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்காக பதிவு செய்து கொள்ள விரும்பும் தரப்பினர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | வழங்கல் | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 1 | அனைத்து வகையான காகிதாதிகள் | 1100.00 |
| 2 | அலுவலக தளபாடங்கள் (மரம், உருக்கு, மற்றும் பிளாஸ்திக்) | 1100.00 |
| 3 | அலுவலக உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் (புகைப்படப்பிரதி இயந்திரம், ரோணியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம், வரவு பதிவு இயந்திரம்) | 1100.00 |
| 4 | கணனி, கணனி துணைப்பாகங்கள், அச்சுப் பொறிகள் மற்றும் அச்சுப்பொறி துணைப்பாகங்கள், டோனர் மற்றும் ரிபன். | 1100.00 |
| 5 | மின்சார உபகரணங்கள் (மின் விசிறி, வளிச்சீராக்கி, குளிர்சாதனம் போன்றவை) மற்றும் உதிரிப்பாகங்கள் | 1100.00 |
| 6 | கட்புல, செவிப்புல உபகரணங்கள், மற்றும் தொடர்பாடல் உபகரணங்கள் (கெமரா, வீடியோ கெமரா, தொலைபேசி, தொலைபேசி முறைமை துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்) | 1100.00 |
| 7 | இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், மேசை மீது வைக்கும் உத்தியோகத்தர் பெயர்ப் பலகை, மற்றும் உத்தியோக அடையாள அட்டைகள் | 1100.00 |
| 8 | சீருடை தைத்தல், சீருடைத் துணிகள், காலணி, அலுவலக பைகள். | 1100.00 |
| 9 | வீதி விளக்கு தொகுதி, மின் குமிழ், மற்றும் மின்சார துணைப்பாகங்கள், (சுவிட்ச், ஹோல்டர், வயர், பிரேக்கர்) | 1100.00 |
| 10 | இயந்திரங்கள் வழங்கல் (புல் வெட்டும் இயந்திரம், சேன்சோ, நீர் மோட்டார், மற்றும் ஜெனரேட்டர்) | 1100.00 |
| 11 | நூலக புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள். | 1100.00 |
| 12 | உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்கல் (மண்வெட்டி, சவல், கத்தி, போன்றவை மற்றும் கார்பட், மழை அங்கிகள், கம் பூட்ஸ், கையுறைகள், வாய்க் கவசம், ஹெல்மட் போன்றவை) | 1100.00 |
| 13 | கொங்கிரீட் உற்பத்தி (ஹியும் குழாய், கொங்கிரீட் தூண், கிணற்று உருளை, போன்றவை) | 1100.00 |
| 14 | மர வகைகள் (தீராந்தி, ரீப்பை, பலகை போன்றவை) | 1100.00 |
| 15 | கட்டிட நிர்மாணப் பொருட்கள், (சீமெந்து, கம்பி, அஸ்பெஸ்டர்ஸ் சீட்) | 1100.00 |
| 16 | கட்டிட நிர்மாணப் பொருட்கள் (ஆற்று மணல், செங்கல், புளொக் கல், மெடல், சுண்ணாம்பு போன்றன) | 1100.00 |
| 17 | வீதி நிர்மாணப் பொருட்கள் (முன் வார்ப்பு கொங்கிரீட் கல், தார், கோளா) | 1100.00 |
| 18 | அறிவித்தல் பலகை மற்றும் பெனர் (பெயர்ப்பலகை, டிஜிடல் பெனர், இலத்திரனியல் பெயர்ப்பலகை, ஸ்டிகர், கருங்கல் சார்ந்த ஞாபகார்த்த பலகை, அச்சிட்ட பொலிதீன் மற்றும் பசளை உறைகள்) | 1100.00 |
| 19 | சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் வழங்கல். (தும்புத்தடி, விளக்குமாறு, காண் சுத்தம் செய்யும் தூரிகை, மருந்து வகைகள், சவர்க்காரம்) | 1100.00 |
| 20 | வாகன உதிரிப்பாகங்கள் வழங்கல் (டிராக்டர், கெப் வாகனம், டம்ப் டிரக் வாகனம், குறூ கெப் வாகனம், மோட்டார் சைக்கிள், பெகோ இயந்திரம், முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் போன்றன) | 1100.00 |
| 21 | நீர்க் குழாய் துணைப்பாகங்கள் வழங்கல் (பீவீஸீ. மற்றும் ஜி.ஐ. குழாய், மற்றும் துணைப்பாகங்கள் மற்றும் நீர் மானி) | 1100.00 |
| 22 | வாகனங்களுக்கு டயர், ரியுப் மற்றும் பெட்டறி வழங்கல் மற்றும் டயர்களை மீள நிரப்புதல் | 1100.00 |
| 23 | நீர் திட்டங்களுக்கான நீர் மோட்டார் மற்றும் பெனல் போர்ட் | 1100.00 |
| 24 | வடிகட்டப்பட்ட குடி நீர் போத்தல்கள் | 1100.00 |
| 25 | அனைத்து வகையான நிறப்பூச்சு வகைகள் | 1100.00 |
| 26 | விளையாட்டுப் பொருட்கள், சங்கீத கருவிகள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள். | 1100.00 |
| 27 | இரசாயனப் பொருட்கள் (புல்/கிருமி/ இழையான் / துர்நாற்ற நாசினி மற்றும் திரவ மற்றும் பீடைக் கட்டுப்பாடு) | 1100.00 |
| 28 | எரிவாயு வழங்குதல் (2.5kg / 5kg / 125kg / 37.5kg) | 1100.00 |
| | **சேவைகள்** | |
| 29 | வாடகை அடிப்படையில் வீதி பராமரிப்பு உபகரணங்கள் வழங்கல். (வீதி அழுத்தி, மோட்டார் கிரேடர், பெகோ) | 1100.00 |
| 30 | அபாயகரமான மரங்கள் மற்றும் கிளைகள் வெட்டி அகற்றுதல். | 1100.00 |
| 31 | அலுவலக ஆவணங்கள், பற்றுச் சீட்டு, அச்சிட்ட ஆவணங்கள், அச்சிட்ட படிவங்கள், சுவரொட்டிகளை அச்சிடல். | 1100.00 |
| 32 | இயந்திர திருத்தவேலைகள் (புல் வெட்டும் இயந்திரம், சேன்ஸோ, நீர் மோட்டார், மின்பிறப்பாக்கிகள் போன்றன) | 1100.00 |
| 33 | தகனச்சாலைகள் மற்றும் பொலிதீன் எரிக்கும் கருவியின் திருத்தவேலைகள் மற்றும் பராமரித்தல் | 1100.00 |
| 34 | அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு | 1100.00 |
| 35 | கணனி, கணனி துணைப்பாகங்கள் மற்றும் அச்சு இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரித்தல் | 1100.00 |
| 36 | மின்சார மற்றும் தொலைபேசி கம்பி இணைப்பு மற்றும் பராமரிப்பு, பெனல் போர்ட் திருத்தவேலைகள் | 1100.00 |
| 37 | மொழிபெயர்ப்பாளர்கள் (சிங்களம் - தமிழ், சிங்களம், ஆங்கிலம்) | 1100.00 |
| 38 | நீர் பம்பி திருத்தவேலைகள் | 1100.00 |
| 39 | பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத தொழிலாளர்கள் (மேசன், நிறப்பூச்சு பூசுபவர்கள், தச்சு, உருக்கியொட்டுதல் மற்றும் மின்சார தொழில்நுட்பவியளாளர்) | 1100.00 |
| 40 | சட்டத்தரணி மற்றும் நொத்தாரிசு சேவைகள் | 1100.00 |
| 41 | நில அளவையாளர் சேவைகள் | 1100.00 |
| 42 | அலுமீனிய கட்டமைப்புகள், சிவிலின் மற்றும் பகுதிபிரிப்பு செய்தல் போன்ற வேலைகள். | 1100.00 |
| 43 | வெற்று போத்தல்கள், இரும்புத் தகடு, மற்றும் பழைய பத்திரிகைகள் கொள்வனவு செய்தல் | 1100.00 |
| 44 | வாகனம் சேர்விஸ் செய்தல். | 1100.00 |
| 45 | வாகனம் மற்றும் இயந்திரங்களின் வெளிப்புற திருத்தவேலைகள் (தகர வேலை மற்றும் நிறப்பூச்சு) | 1100.00 |
| 46 | வாகனங்களின் உட்புற திருத்தவேலைகள் (பொறிமுறை குறைபாடு மற்றும் மின்சார அமைப்பு) | 1100.00 |
| 47 | வாகன ஆசனம், குஷன், கார்பட், கெனபி திருத்தவேலைகள் | 1100.00 |
| 48 | ராக்கை மற்றும் இரும்பு/ உருக்கு சார்ந்த உபகரணங்கள் வழங்குதல் மற்றும் உருக்கியொட்டும் வேலைகள் மற்றும் வெள்ளியிரும்பு வேலைகள் | 1100.00 |
| 49 | ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் ரூபா 2,000,000/- அல்லது அதற்கு மேற்பட்ட வேலைகளக்கு (இக்டாட்/ CIDA நிறுவனத்தின் செல்லுபடியாகும் பதிவு உள்ளவர்கள் மட்டும்) | 1100.00 |
| 50 | திட்டப்பட வரைஞர் சேவைகள் | 1100.00 |

**மாத்தளை பிரதேச சபை**
**2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்.**

| | | |
|---|---|---|
| 01 | பதிவு செய்யும் உருப்படியின் பெயர் மற்றும் இலக்கம் | |
| 02 | வியாபாரம் | பெயர்: |
| | | முகவரி: |
| | | தொலைபேசி இலக்கம்: |
| | | தெலைநகல் இலக்கம்: |
| | | மின்னஞ்சல் முகவரி: |
| 03 | வியாபார உரிமையாளரின் தே. அ.அ.இலக்கம் | |
| 04 | வியாபாரப் பதிவு | இலக்கம்: |
| | | திகதி: |
| 05 | வியாபாரத்தின் தன்மை: உற்பத்தியாளரா, முகவரா என்பது | |
| 06 | கடன் அடிப்படையில் செலுத்துவதற்கு வழங்கக்கூடிய காலப்பகுதி: | |
| 07 | பொருட்களை வழங்கும் போது வழங்கப்படும் வசதிகள் (போக்குவரத்து மற்றும் ஏனையவை) | |
| 08 | பதிவுக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி. காசோலை . காசுக் கட்டளை மூலம் எனின் இலக்கம் மற்றும் திகதி: | |
| 09 | ஏனையவை | |

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும் 2024ஆம் வருடத்திற்கான வழங்குநராக எமது நிறுவனத்தை மாத்தளை பிரதேச சபையில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

கையொப்பம் : ..........................................................................
பெயர் : ..........................................................................
(இறப்பர் முத்திரை இடவும்)
திகதி : ..........................................................................

01. பதிவு செய்வதற்கு விண்ணப்பிப்பவர்கள் மேலே தரப்பட்டுள்ள ஒவ்வொரு உருப்படி சார்பாகவும் 1100.00 ரூபா மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பதாரர் மாத்தளை பிரதேச சபையின் காசாளரிடம் இதனை பணமாக அல்லது காசோலை மூலம் செலுத்துதல் வேண்டும். பதிவுக் கட்டண காசோலைகள் அல்லது காசுக்கட்டளை மூலம் செலுத்துவதாயின் ''செயலாளர், மாத்தளை பிரதேச சபை'' என காசோலை அல்லது காசுக் கட்டளை எழுதப்படல் வேண்டும்.
02. பணம் செலுத்திய பற்றுச்சீட்டு / காசோலை / காசுக்கட்டளை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024" எனக் குறிப்பிட்டு 2023.12.28ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் இந்த அலுவலகத்திற்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும்.
03. ஒன்றுக்கு மேற்பட்ட உருப்படிகளுக்குப் பதிவு செய்வதாயின் வெவ்வேறு விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து இயைபுடைய உருப்படி இலக்கத்தை சரியாகக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 066 – 4933680 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

நிபந்தனைகள்:

01. கோரப்படும் போது விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத மற்றும் கட்டளையிட்டதன் பின் உரிய வகையில் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்கு இயலாமல் போகும் வழங்குநர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
02. பதிவு செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து தேவையான வகையில் விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் போதியளவு வழங்குநர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் தேவையான வேளைகளில் ஏனைய வெளி வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்கள் கோரப்பட்டு கொள்வனவு செய்தல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான உரிமையை மாத்தளை பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
03. கட்டளையிடப்படும் பொருட்களைக் கொண்டுவந்து ஒப்படைக்க இணக்கம் தெரிவிக்கும் வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**2023-10.27**

**எச்.எம்.டீ.பீ. ஹீன்கெந்த,**
**செயலாளர்,**
**மாத்தளை பிரதேச சபை**

# பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## தென்னைப் பயிர்ச்செய்கை சபை

## 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் கொள்வனவாளர்களைப் பதிவு செய்தல்

01. தென்னைப் பயிர்ச்செய்கைச் சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக 2024ஆம் வருடத்தில் பதிவு செய்து கொள்ள விரும்பும் இதற்கு முன் சபையினால் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாத அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அரச மற்றும் அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
02. விண்ணப்பப் படிவம் / அறிவுரைகள்
    - கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை coconutsrilanka.lk எனும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் (Download) செய்துகொள்ளலாம் மற்றும் அல்லாவிடில் விண்ணப்பதாரரினால் மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் விண்ணப்பத்தைத் தயாரித்து சமர்ப்பிக்கலாம்.
    - பதிவு செய்துகொள்ள உத்தேசிக்கும் வகுதிக்கு இணைவான வகையில் குறித்த வியாபாரத்திற்கான பதிவுச் சான்றிதழ் இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் தெளிவான பிரதியொன்றை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
    - ஒவ்வொரு உருப்படிக்காகவும் பதிவுக் கட்டணமாக மீளளிக்கப்படாத 2000.00 ரூபா அறவிடப்படும். இதன் பிரகாரம் பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் உருப்படிகளின் எண்ணிக்கை பிரகாரம் பதிவுக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.
    - பதிவுக் கட்டணத்தை 2023-11-30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக பத்தரமுல்ல மக்கள் வங்கியில் பேணப்படும் 208100130329971 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவாகும் வகையில் மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் வைப்புச் செய்து அந்த வைப்புப் படிவத்தை விண்ணப்பத்துடன் கட்டாயமாக இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் பண வைப்புப் படிவம் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் (அதேபோல் காசோலை வைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).
    - அல்லாவிடில் பதிவுக் கட்டணத்தை 2023-10-27ஆம் திகதி முதல் 2023-11-30ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் தென்னை பயிர்ச்செய்கைச் சபையின் தலைமை அலுவலகத்தின் காசாளருக்குச் செலுத்தலாம் என்பதுடன் அதன்போது வழங்கப்படும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை விண்ணப்பப் படிவத்துடன் கட்டாயமாக இணைத்தல் வேண்டும்.
    - முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள், உரிய ஆவணங்களை கடித உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024" எனக் குறிப்பிட்டு 2023-12-01ஆம் திகதி பி.ப 2.00 மணி அல்லது அதற்கு முன் "பொது முகாமையாளர், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல" எனும் முகவரியில் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச்செய்கைச் சபைக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது தலைமை அலுவலகத்தின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

**03. நிபந்தனைகள்**

- முழுமையற்ற விண்ணப்பப் படிவங்கள் மற்றும் விண்ணப்பிக்கும் வகுதிக்கு இயைபான வியாபாரம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வியாபாரத்தின் தன்மையை உறுதிப்படுத்தும் ஆவணத்தின் பிரகாரம் உறுதி செய்வதற்கு தவறும் யாராவது விண்ணப்பதாரரால் பதிவுக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால், அவர் வழங்குநராக பதியப்படமாட்டார் என்பதுடன் எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
- கோரப்பட்டவுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்காதவர்கள், கட்டளைகள் அனுப்பப்பட்டு ஆனால் நேர காலத்திற்கு பொருட்களை ஒப்படைக்காத, முன்வைக்கப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் பொருட்களை வழங்காத வழங்குநர்கள் ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள் முன்னறிவித்தலின்றி பதிவேட்டிலிருந்து நீக்கப்படும்.
- பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் வேறு வழங்குநர்களிடமிருந்தும் விலைகளைக் கோரும் அல்லது கொள்வனவு செய்யும் உரிமையை தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
- 2023-12-01ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும்.

**(01) பொருட்களை வழங்கல்:**

01. அலுவலக காகிதாதிகள் (அனைத்து வகையிலானதும்)
02. அலுவலக உருக்குத் தளபாடங்கள்
03. அலுவலக மரத்தினாலான வீட்டுத் தளபாடங்கள்
04. மின்விசிறி, குளிர்சாதனப்பெட்டி மற்றும் மின்சார உபகரணங்கள் மற்றும் துணைபாகங்கள்
05. அலுவலக உபகரணங்கள் (தட்டச்சுப்பொறி, கணனி, கூட்டல் இயந்திரம், ரோனியோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், அச்சுப்பொறிகள், தொலைநகல் இயந்திரம்)
06. கணனி துணைப்பாகங்கள் (டோனர் இல்லாமல்)
07. தோற்பொருட்கள் (பைகள், மழைக்கவசம், கம்பூட்)
08. கண்காட்சி மற்றும் விளம்பர வேலைகள் (பெயர்ப்பலகை, பதாகைகள், அறிவித்தல்கள், பிரசார கூடங்கள், சுவரொட்டிகள்)
09. கட்டிடப் பொருட்கள் மற்றும் கட்டிட உபகரணங்கள்
10. முடிவுறுத்தப்பட்ட ஆடைகள் (கட்டில் விரிப்புகள் / தலையணை உறைகள் / துவாய்கள் போன்ற ஏனைய அனைத்து முடிவுறுத்தப்பட்ட ஆடைகள், அச்சடிக்கப்பட்ட டீ சேர்ட்கள், கொடிகள், திரைச்சீலைகள்)
11. அனைத்து வகையிலான வாகன உதிரிப்பாகங்கள்
12. அனைத்து கட்டிட பராமரிப்பு மற்றும் திருத்தவேலைகளுக்குத் தேவைப்படும் துணைப்பாகங்களை வழங்குதல் (மின்குமிழ்கள், நீர்க்குழாய், பிவீசீ, கல்வனைஸ் போன்ற துணைப்பாகங்கள்)
13. அனைத்து வகையான விவசாய உபகரணங்கள் மற்றும் கருவிகள்
14. விவசாய இரசாயனப் பொருட்கள் மற்றும் கால்நடை மருந்துகள்
15. நினைவுப்படிவங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் தயாரிப்பவர்கள்
16. சாணி உரம், தும்புச் சோறு மற்றும் மேற்பரப்பு மண் வழங்குநர்கள்
17. பொலித்தின் வழங்குநர்கள்
18. சேதனப் பசளை வழங்குநர்கள்
19. அனைத்து வகையான வாகன டயர், டியூப் மற்றும் பற்றரி / துணைப்பாகங்கள் வழங்குநர்கள்
20. அனைத்து வகையான அச்சு வேலைகள்
21. அனைத்து வகையான வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்

**(02) சேவைகள்**

01. கட்டிடங்களை நிர்மாணித்தல், திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு
02. அனைத்து வகையான நீர் மோட்டார்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு
03. அனைத்து வகையான அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு
04. கணனி திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு
05. அனைத்து வகையான இலத்திரனியல் ஊடக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்கள்
06. அனைத்து வகையான வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு
07. அனைத்து வகையான வாகனங்களின் திருத்தவேலைகள் (வியாபார பதிவுச் சான்றிதழில் தெளிவாக வியாபாரத்தின் தன்மை குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். உ.தா:- பொறிமுறை, குஷன் வேலை, மின் வலையமைப்பு பொறிமுறை வேலைகள், வளிச்சீராக்கி என்பன) (தொடரிலக்கம் அதாவது ரோம குறியீட்டிற்காக வெவ்வேறாக செலுத்த வேண்டியதில்லை)
    - I. இயந்திர திருத்தவேலைகள்
    - II. டின்கர், நிறப்பூச்சிடல்
    - III. வாகன மின் முறைமை பொறிமுறை சேவைகள்
    - IV. மோட்டார் வாகன வளிச்சீராக்கி சேவைகள்
    - V. சைலன்சர் திருத்தவேலைகள்
    - VI. வாகனத்தின் வில் தகடு பொறிமுறை சேவைகள்
    - VII. ∴பைபர் கிளாஸ் வேலைகள் (மோட்டார் வாகனங்கள் தொடர்பானது)
    - VIII. மோட்டார் சைக்கிள் பராமரிப்பு மற்றும் உபகரணங்களை வழங்குதல்
    - IX. டிராக்டர் ட்ரேலர் திருத்தவேலைகள்
    - X. டிராக்டர் திருத்தவேலைகள் (2 சக்கரம், 4 சக்கரம்)
    - XI. டயர் மீள் நிரப்புதல் மற்றும் வீல் எலய்ன்மன்ற் செய்தல்
    - XII. லொறி பொடிகளை நிறுவல், திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு
    - XIII. அனைத்து வகையான வாகன தவணை சேர்விஸ்கள்
    - XIV. நீர் பவுசர், டிராக்டர், சிறிய டிராக்டர் மற்றும் டிராக்டர் ட்ரேலர்கள் தொடர்பான சேவைகள்
    - XV. அனைத்து வகையான வாகனங்களையும் குஷன் பண்ணல்
08. பெக்கோ மற்றும் டோசர் இயந்திரங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல்
09. வளிச்சீராக்கியுடனான வேன்,கெப்,கார், முச்சக்கர வண்டிகளை நாளாந்த தேவைப்பாடுகளுக்காக வழங்குதல் மற்றும் வாடகை அடிப்படையில் வழங்குதல்.
10. விதை தென்னை மற்றும் கன்றுகளை போக்குவரத்துச் செய்வதற்காக வாடகை அடிப்படையில் லொறி வண்டிகளை வழங்குதல்
11. சுத்திகரிப்பு மற்றும் சுகாதார சேவைகள் வழங்குதல்
12. சட்ட ஆலோசனை சேவைகள்
13. அனைத்து வகையான அலுமினியம் மற்றும் இரும்பு நிர்மாணங்கள், திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள்
14. கணனி சார்ந்த செயலி மென்பொருள் வடிவமைத்தல் (இணையதளம் மற்றும் ஏனைய பாவனை மென்பொருட்கள்)

(03) 1. தென்னை தொடர்பான தயாரிப்புகளை கொள்வனவு செய்வோர்
- I. தேங்காய்/தேங்காய் எண்ணெய்/ கொப்பரா கொள்வனவாளர்கள்
- II. தேங்காய் மட்டை/ தேங்காய் சிரட்டை/ தும்பு, தும்புச் சோறு கொள்வனவாளர்கள்
- III. தேங்காய் மரங்களைக் கொள்வனவு செய்வோர்

இடைக்கால பயிர்களைக் கொள்வனவு செய்வோர்
(பழவகை / ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் / கிழங்கு பயிர்கள் / எண்ணெய் பயிர் வகைகள்)

**மாதிரி விண்ணப்பப்படிவம்**
**2024ஆம் வருடத்தில் வழங்குநர்களைப் பதிவு செய்துகொள்வதற்கான விண்ணப்பப்படிவம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பதிவு செய்வதற்கான தேவைப்பாடுகள் | 01 | பொருள் வழங்கல் | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 02 | சேவைகளை வழங்கல் | | | | | |
| 03 | தெங்கு சார்ந்த தயாரிப்புக்களின் கொள்வனவாளர்கள் | | | | | |

(குறித்த வகுதியின் இலக்கம், தொடர் இலக்கம் (ரோம இலக்கம்) இருப்பின் அதனை கூட்டினுள் தெளிவாகக் குறிப்பிடுங்கள்)

02. வியாபாரத்தின்/ நிறுவனத்தின் பெயர்..........................................................................................
03. முகவரி:..........................................................................................................................
04. வியாபார பதிவிலக்கம்:.......................................................................................................
(வியாபாரத்தின் தன்மையை உள்ளடக்கிய பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)
05. தொலைபேசி இலக்கம்:............................................ தொலைநகல் இலக்கம்:.......................................
06. வங்கிக் கிளை:...................................................................................................................
07. கடன் வசதிகள் வழங்கப்படும் காலம்:............................................ தொகை:.......................................
08. பொருட்களைக் கொண்டு வந்து ஒப்படைக்க முடியுமா என்பது பற்றி:................................................

மேற்படி (சேவை வழங்கல்கள்) இலக்கம் 02 - 01 கீழ் பதிவு செய்துகொள்ள உத்தேசித்தால் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (இக்டாட்) பதிவுடன் இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் சங்கத்தின் பதிவிலக்கம். செல்லுபடியாகும் அங்கத்துவம் பெறப்பட்டுள்ளதா என்பது பற்றி.................................. பதிவிலக்கம்.......................................... (தேவைப்படும் சந்தர்ப்பங்களில் குறித்த பணிகளை நிறைவேற்றும் இயலுமையை எழுத்து மூலம் உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பதாரர் இணங்குகின்றார்.)

...............................................
**விண்ணப்பதாரரின் கையொப்பம்**
**மற்றும் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ முத்திரை**

.....................................................
**திகதி**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk
www.adz.lk
it's what you want

# வட மத்திய மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் இருக்கின்ற சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை ஆசிரியர் சேவை 3ஆம் வகுப்பு I (அ) தரத்திற்கு பட்டதாரிகளை இணைத்தல் - 2023 (கட்டம் II)

வட மத்திய மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் இருக்கின்ற இலங்கை ஆசிரியர் சேவையின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு I (அ) தரத்திற்கு மாகாண அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகுதியை பூர்த்தி செய்திருக்கும் வட மத்திய மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி 2023.11.24 ஆகும்.

01. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கான மாகாண அடிப்படையில் இருக்கின்ற வெற்றிடங்களுக்கு அமைய போட்டிப் பரீட்சை மற்றும் செயல்முறை பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் முழு புள்ளிகளின் வரிசைப்படி இருக்கின்ற ஒவ்வொரு பாடத்தின் வெற்றிட எண்ணிக்கைக்கு அமைய தகுதி பெறுகின்ற விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவர். இருக்கின்ற ஒதுக்கீடு மற்றும் சேவை எண்ணிக்கை அடிப்படையில் 2023.06.30 ஆம் திகதி வரை இருந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். (வெற்றிட ஆவணம் அட்டவணை 01இல் தரப்பட்டுள்ளது)

02. சம்பள அளவு:

அரச நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 03/2016(iv) இன் GE-01-2016A பிரிவு (மாதம் 31,490-6x445-7x525-2x600-39,035/-) ஆகும். பட்டதாரிகள் இந்த சம்பள அளவின் 14ஆவது படியான ரூபா 37,835/- சம்பளத்தில் வைக்கப்படும். இது தவிர அரச உத்தியோத்தர்களுக்கு அரசினால் அவ்வப்போது வழங்கப்படும் வேறு கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

03. கல்வி மற்றும் வேறு தகைமைகள்:

3.1 கல்வி தகைமை:

I. கற்றல் பணிக்காக அங்கீகரிக்கப்பட்ட விசேடத்துவமான துறைகள் சார்ந்த, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றினால் அல்லது வழங்கப்படுகின்ற, அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கு தொடர்புடைய பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

மற்றும்

II. கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தவணை எண்ணிக்கையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்று 03 திறமை சித்திகளை பெற்றிருத்தல் மற்றும் க.பொ.த உயர் தர பரீட்சையில் 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல்.

மிக முக்கியம்:- விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யும்போது கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்களை கருத்தில் கொள்ளல் வேண்டும்.

- தமது பட்டத்திற்கு அமைய விண்ணப்பிக்க முடியுமான பாடங்கள் தொடர்பில் விண்ணப்பதாரர்கள் கவனித்தல் வேண்டும்.
- பட்டத்திற்காக கற்றிருக்கும் பிரதான பாடம்/ பாடங்களுக்கு அமைய மாத்திரம் குறித்த ஆசிரியர் வெற்றிடத்திற்காக விண்ணப்பிக்க முடியும்.
- விண்ணப்பித்த பாடம்/ பாடங்கள் எந்த ஒரு காரணத்திற்காகவும் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

3.2 உடல் மற்றும் உள தகைமை:

அனைத்து விண்ணப்பதாரர்களும் ஆசிரியர் ஒருவராக கடமையை நிறைவேற்றுவதற்கு பொருந்துகின்ற உள மற்றும் உடல் தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்.

3.3 வயதெல்லை:

விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாத மற்றும் 35 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

3.4 வேறு தகைமைகள்:

I. விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. சிறந்த பண்பு மற்றும் நல்ல உடல் ஆரோக்கியத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

III. வட மத்திய மாகாணத்தின் எந்த ஒரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கு முடியுமாக இருத்தல்.

IV. விண்ணப்பதாரர் அல்லது துணைவர் விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு 03 ஆண்டுகளுக்கு குறையாத காலம் வட மத்திய மாகாணத்தில் நிரந்தர குடியிருப்பாளராக இருத்தல் வேண்டும். (கிராம உத்தியோத்தரினால் வழங்கப்பட்ட வதிவை உறுதி செய்வதற்கான சான்றிதழ் மூலம் நேர்முகப் பரீட்சை நேரத்தில் உறுதி செய்தல் வேண்டும்.)

04. பணி நிபந்தனை:-

4.1 நியமனம் கிடைக்கும் பாடசாலையில் பணியை பொறுப்பேற்ற திகதியில் இருந்து 05 ஆண்டுகள் குறைந்தபட்ச சேவை காலம் ஒன்றில் கட்டாயம் பணியாற்றுதல் வேண்டும். 05 ஆண்டுகள் சேவை காலத்தின் பின் மாத்திரம் இட மாற்றத்திற்காக தகுதி பெறுவர்.

4.2 அரச/ மாகாண சபை அரச சேவை நியமனங்களை நிர்வகிக்கின்ற பொது நிபந்தனைகளுக்கும், வட மத்திய மாகாண சபை அரச சேவையில் ஆசிரியர் சேவை யாப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அந்த யாப்புக்கு செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படுகின்ற அல்லது திருத்தங்களின் கீழ் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பின் I(அ) தரத்திற்கு நியமிக்கப்படும்.

4.3 இந்தப் பதவி நிரந்தரமானது மற்றும் ஓய்வூதியத்தை கொண்டதாகும்.

4.4 ஓய்வூதிய முறை தொடர்பில் எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் எடுக்கப்படுகின்ற கொள்கை ரீதியான முடிவுகளுக்கு இணங்குதல் வேண்டும்.

4.5 இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் அபேட்சகர்கள் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டிருப்பார்கள்.

4.6 ஆசிரியர் சேவையின் பதவி உயர்வுகள் வட மத்திய மாகாண ஆசிரியர் சேவை யாப்பின் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படும்.

4.7 அரச நிர்வாக சுற்றுநிருபம் 18/2020 மற்றும் 2020.10.16 ஆம் திகதிய திருத்தத்தின் மூலம் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ள வகையில் இரண்டாம் மொழியில் தேர்ச்சியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

05. ஆட்சேர்ப்பு

5.1. ஆட்சேர்ப்பு முறை:

I 2008.07.01 ஆம் திகதி தொடக்கம் செயற்படும் வட மத்திய மாகாண ஆசிரியர் சேவை யாப்பின் 7.2.4 உறுப்புரைக்கு அமைய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

II தேர்வு செய்வதற்காக எழுத்துமூலம் பரீட்சை ஒன்று நடத்தப்படுவதோடு, மாகாணத்திற்குள் ஒவ்வொரு பாடத்திற்காக இருக்கின்ற வெற்றிடங்களுடன் ஒப்பிடும்போது எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் அதிக புள்ளிகள் வரிசைக்கு அமைய விண்ணப்பதாரர்கள் மூன்று மடங்கினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும்.

III சாதாரண நேர்முகப் பரீட்சையில் தகுதி பெறுகின்ற விண்ணப்பதாரர்களுக்காக அன்றைய தினத்திலேயே செயல்முறை பரீட்சை நடத்தப்படும்.

IV எழுத்து பரீட்சை மற்றும் செயல்முறை பரீட்சையில் அதிக புள்ளிகளை பெற்ற மற்றும் இங்கு 03 ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியை பூர்த்தி செய்திருக்கும் விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்படும்.

5.2. எழுத்து போட்டி பரீட்சை: இரு வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்.

| பாடம் | காலம் | உச்ச புள்ளி | தகுதி பெறுவதற்கு பெற்றுக்கொள்ள வேண்டிய குறைந்தபட்ச புள்ளி |
|---|---|---|---|
| 1. போட்டிப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. பொது அறிவு | 1 மணித்தியாலம் | 100 | 40 |

பாடத் திட்டம்:

பாட இலக்கம் 01 - போட்டிப் பரீட்சை

- இந்த வினாப்பத்திரம் தயாரிக்கப்பட்டிருப்பது அபேட்சகரின் ஆசிரியர் தொழில் மற்றும் அறிவு சார்ந்த திறமை மற்றும் தர்க்கரீதியான அறிவை அளவிடுவதற்காகும். இது பல்தேர்வு வினாக்கள் மற்றும் குறுகிய பதில் வடிவத்தில் 50 வினாக்களை கொண்டிருக்கும். வினாக்கள் அனைத்துக்கும் பதில் அளித்தல் வேண்டும்.

பாட இலக்கம் 02 - பொது அறிவு

- கல்வித் துறை தொடர்பில் பொது அறிவை சோதிக்கும் பல்தேர்வு வினாக்கள் மற்றும் குறுகிய பதில் வடிவத்தில் வினாக்களை கொண்டதாக இந்த வினாப்பத்திரம் இருக்கும்.
- நடைபெற்றிருக்கும்/ நடைபெற்றுவரும் கல்வி அபிவிருத்தியின் போக்கு தொடர்பில் பொது அறிவு, கல்வியை நவீனப்படுத்துவது தொடர்பில் பொது அறிவு உள்ளடக்கப்பட்டிருக்கும். வினாக்கள் அனைத்துக்கும் பதில் வழங்குதல் வேண்டும்.

5.3. பரீட்சை ஒழுங்குமுறை

- இந்தப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் நடத்தப்படும். ஆங்கில மொழி வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கும் அபேட்சகர்கள் தாம் பரீட்சையை எதிர்கொள்ளும் மொழியை விண்ணப்பப் படிவத்தில் குறித்த இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரு மொழியில் மாத்திரம் தோன்றுதல் வேண்டும்.
- எந்த ஒரு விண்ணப்பதாரருக்கும் அவரின் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி ஊடகம் பின்னர் எந்த ஒரு காரணத்திற்காகவும் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.
- அனைத்து விண்ணப்பதாரர்களும் இரு (02) வினாப்பத்திரத்திற்கும் தோன்றுதல் வேண்டும்.
- நியமிக்கப்படும் எண்ணிக்கை நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

5.4. பொது நேர்முகப் பரீட்சை

❖ சேவை யாப்புக்கு அமைய வர்த்தமானி அல்லது பத்திரிகை அறிவித்தல் அல்லது இணையதளத்தில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமையை பூர்த்தி செய்திருப்பது பற்றி மற்றும் உடல் தகுதியை சோதித்தல், வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு மூலம் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை குழுவினால் மேற்கொள்ளப்படும்.

5.5. செயல்முறை பரீட்சை

| வரிசை இலக்கம் | செயல்முறை பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் அளவுகோல் | உச்ச புள்ளி எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | இலக்கு மற்றும் பிரவேசம் | 05 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 |
| 03 | தொடர்பாடலின் தெளிவுத் தன்மை | 05 |
| 04 | நேர முகாமைத்துவம் | 05 |
| 05 | முன்வைக்கும் நுட்பங்களின் பயன்பாடு | 05 |
| முழுமையான புள்ளி எண்ணிக்கை | | 25 |

5.6. செயல்முறை பரீட்சை முறை

I. செயல்முறை பரீட்சைக்காக ஐந்து (05) நிமிடங்களுக்குக் கூடாத காலம் வழங்கப்படும்.

II. செயல்முறை பரீட்சைக்காக பெற்றுக்கொள்ள முடியுமான உச்ச புள்ளி எண்ணிக்கை இருபத்தி ஐந்தாகும் (25).

III. செயல்முறை பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு படைப்புக்காக குறைந்தது 02 புள்ளிகள் அடிப்படையில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

IV. வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு மூலம் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழு ஒன்றின் மூலம் செயல்முறை பரீட்சை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்.

5.7. அளவுகோல்களின் நோக்கம்

I. இலக்கு மற்றும் பிரவேசம்

பாடத்தின் நோக்கத்தை வெற்றிகரமாக தெளிவுபடுத்துவதற்கு உள்ள திறன் மற்றும் பிரவேசிப்பதற்கு உள்ள திறனை மதிப்பிடல்.

II ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு

விண்ணப்பதாரருக்கு ஆசிரியர் ஒருவருக்கு பொருத்தமான சிறந்த ஆளுமை மற்றும் குரலை கட்டுப்படுத்தும் திறன் உள்ளதா என்பதை மதிப்பிடல்.

III. தொடர்பாடலின் தெளிவுத் தன்மை

கற்றல் கற்பித்தல் முறையுடன் தொடர்புபட்ட சிக்கல்களை சிறந்த முறையில் தொடர்பாடல் செய்யும் திறனை மதிப்பிடுதல்.

IV. நேர முகாமைத்துவம்

குறித்த காலத்திற்குள் இலக்கு ஒன்றை நோக்கி நெருங்கும் திறனை மதிப்பிடல்.

V. முன்வைக்கும் நுட்பங்களின் பயன்பாடு

இலக்கை நோக்கி நெருங்குவதற்கு முன்வைக்கும் நுட்பத்தை சிறந்த முறையில் பயன்படுத்தும் திறனை மதிப்பிடுதல்

06. பரீட்சை கட்டணம்

6.1. பரீட்சை கட்டணம் ரூபா 720 ஆகும். இந்தத் தொகையை விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி அல்லது அன்றைய தினத்திற்கு முன் வட மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள எந்த ஒரு மாவட்ட/ பிராந்திய செயலாளர் அலுவலகத்திற்கு வட மத்திய மாகாண சபையின் அறவிடல் இலக்கம் 2003.02.13 க்கு வரவு வைக்கும் வகையில் செலுத்துதல் வேண்டும். அதற்காக வழங்கப்படும் என்சீ 100 பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் குறித்த பெட்டியில் பிரியாத வகையில் ஒட்டுதல் வேண்டும். எந்த ஒரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படாது என்பதோடு, கட்டணம் வேறு பரீட்சை ஒன்றுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. அதேபோன்று காசுக் கட்டளை மற்றும் முத்திரை ஏற்கப்படமாட்டாது. பரீட்சை கட்டணம் செலுத்தாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். (பற்றுச்சீட்டின் நிழல் பிரதி ஒன்று எதிர்கால பயன்பாட்டுக்காக விண்ணப்பதாரரிடம் வைத்திருப்பது சிறந்தது) பரீட்சை கட்டணத்தை செலுத்துவதற்காக மேல் விதிக்கப்பட்டிருக்கும் பிரதேச செயலாளர் அலுவலகம் தவிர்த்து வெளி மாகாண அலுவலகங்கள் அல்லது வங்கிகள் அல்லது தபால் அலுவலகங்களுக்கு வெலுத்தப்பட்ட அல்லது குறித்த திகதிக்குப் பின் பற்றுச்சீட்டைக் கொண்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6.2. பரீட்சை நிலையம் - இந்தப் பரீட்சை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் நடத்தப்படும்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| அநுராதபுரம் | 01 |
| பொலன்னறுவை | 02 |

07. விண்ணப்பிக்கும் முறை

7.1. விண்ணப்பங்களை இந்த அறிவித்தலுக்கு இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி படிவத்திற்கு அமைய அபேட்சகர் மூலம் காகிதத்தில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி A4 அளவான காகிதத்தில் தயாரித்து கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். 1 தொடக்கம் 4.3 வரை தலைப்புகள் முதல் பக்கத்திலும் 4.4 தொடக்கம் 7 வரையான தலைப்புகள் இரண்டாவது பக்கத்திலும், மற்ற தலைப்புகள் மூன்றாவது பக்கத்திலும் அமையும் வகையில் விண்ணப்பப் படிவங்களை தயாரித்தல் வேண்டும் என்பதை விசேடமாக கருத்தில் கொள்ளவும்.

7.2. குறித்த படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத, முழுமை பெறாத, நிர்ணயிக்கப்பட்ட வகையில் பரீட்சை கட்டணத்தை செலுத்தாத மற்றும் குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அந்த விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான வாய்ப்பு அளிக்கப்படமாட்டாது. இது தொடர்பில் முன் அறிவித்தல் ஒன்று மேற்கொள்ளப்படமாட்டாது.

7.3. பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் நிழல் பிரதி ஒன்று விண்ணப்பதாரரிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

7.4. விண்ணப்பிக்கும் பாடம்/ பாடங்கள் ஒருபோதும் மாற்றப்படமாட்டாது என்பதோடு ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரு விண்ணப்பத்தை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பதாரர் ஒரு பாடத்திற்கு மேல் எண்ணிக்கைக்கு விண்ணப்பிப்பதாயின் அதனை முன்னுரிமை அடிப்படையில் விண்ணப்பப் படிவத்தின் குறித்த இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

7.5. அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப் படிவத்தை கட்டாயம் தமது நிறுவன தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, இந்த நியமனத்திற்காக தகுதியுடையவராக தேர்வு செய்யப்பட்டால் அந்த நிறுவனத்தில் இருந்து விடுவிப்பதற்கு இணங்குவதாக உறுதியை பெற்றிருத்தல் வேண்டும்.

7.6. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதி செய்தல்:

விண்ணப்பதாரரின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர், சட்டத்தரணி ஒருவர், பகிரங்க நொத்தாரிசு ஒருவர், முப்படைகளின் நிர்வாக அதிகாரியின் அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவர், பொலிஸ் சேவையின் பணியாளர் பதவி ஒன்றை வகிக்கின்ற அதிகாரி ஒருவர் அல்லது அரச நிரந்தர பதவி ஒன்றை கொண்ட பணிக்குழு அதிகாரி ஒருவரினால் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

7.7. சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023.11.24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு "செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு, வட மத்திய மாகாணம், அனுராதபுரம்." என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவைக்கு இணைத்தல் - 2023 (II கட்டம்)" என்று குறிப்பிடுதல் மற்றும் விண்ணப்பிக்கும் பாடம்/ பாடங்களை கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும்.

7.8. தபாலில் அனுப்பும்போது விண்ணப்பம் காணாமல்போதல் அல்லது தாமதித்தல் தொடர்பில் எந்த ஒரு முறைப்பாடும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

7.9. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பகிரங்கப்படுத்தப்படும் இந்த அறிவித்தல் மொழி பிரயோகத்திற்கு இடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது இணக்கமின்மை ஒன்று இருப்பதாகத் தெரிந்தால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தல் சரியானது என கருதி செயற்படவும்.

08. அபேட்சகர்களின் தனித்துவம்:-

அபேட்சகர்கள் தாம் தோன்றுகின்ற பரீட்சையில், நேர்முகப் பரீட்சை மற்றும் செயல்முறை பரீட்சைக்காக கீழுள்ள ஆவணங்கள் மூலம் தமது தனித்துவத்தை உறுதி செய்தல் வேண்டும்.

(அ) ஆட்பதிவு திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

அல்லது

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு/ செல்லுபடியான வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம்

09. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும்போது கவனத்துடன் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். அந்த தகவல்கள் எந்த வகையிலும் திருத்தத்திற்கு இடமளிக்கப்படமாட்டாது. இந்த ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் குறித்த திகதிக்கு பூர்த்தி செய்ய முடியாத அடிப்படையில் ஒரு விண்ணப்பதாரர் நேர்முகப்பரீட்சைக்கு மற்றும் செயல்முறை பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதி இல்லை என்பது தெரியவந்தால் அந்த பரீட்சை நடத்தப்படுவதற்கு முன்னர் அல்லது நடத்தப்படும்போது அல்லது அதன் பின்னர் அல்லது எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பத்தை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரர்கள் பொய்யான தகவல்களை வழங்கி இருப்பதாக அல்லது சரியான தகவல்களை வேண்டுமென்று மறைத்திருப்பதாக தெரியவந்தால் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சேவையில் இருந்து நீக்குவதற்கு அல்லது சேவையை நிறுத்துவதற்கு முடியுமாகும்.

10. விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு அல்லது அன்றைய தினத்திற்கு முன் நிர்ணயிக்கப்பட்ட வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வதிவிடம், வயது மற்றும் பட்டத்தின் செல்லுபடித் திகதி ஆகிய அடிப்படை தகைமைகள் தவிர்த்து மற்ற தகைமைகள் பரீட்சிக்கப்படாது எழுத்து பரீட்சைக்காக தோற்றுவதற்கு வாய்ப்பு வழங்கப்படுவதோடு அடிப்படை தகைமைகள் பரீட்சிப்பது நேர்முகப்பரீட்சையில் மேற்கொள்ளப்படும்.

11. மேற்குறிப்பிட்ட 10 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்திருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் மூலம் எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை மற்றும் செயல்முறை பரீட்சைக்காக அழைப்புக் கடிதம் வழங்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அழைப்புக் கடிதம் வழங்கப்பட்ட விரைவில் அது பற்றி குறிப்பிட்டு வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் அலுவலக இணையதளத்தில் (psc.nc.gov.lk) அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். பரீட்சை அனுமதிப் பத்திரம்/ அழைப்புக் கடிதம் எழுத்துப் பரீட்சை/ நேர்முகப் பரீட்சை மற்றும் செயல்முறை பரீட்சை நடைபெறுகின்ற திகதிக்கு 3 நாட்களுக்கு முன் கிடைக்கவில்லை என்றால் அது தொடர்பில் உடன் செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு, வட மத்திய மாகாணம், அநுராதபுரம் என்ற முகவரிக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது கீழுள்ள விபரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

I. விண்ணப்பதாரரின் முழுப் பெயர்:

II. தனிப்பட்ட முகவரி/ பணி இட முகவரி:

III. தேசிய அடையாள அட்டை இலக்கம்:

IV. தொலைபேசி இலக்கம்:

12. விண்ணப்பம் கோரும் அறிவித்தலுக்கு தொடர்புடைய விடயங்கள் அல்லது இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத அல்லது இந்த அறிவித்தலின் ஏற்பாட்டில் வழங்கப்படாத வேறு ஏதேனும் விடயம் இருந்தால் அது தொடர்பில் வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.

13. இந்தப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை மற்றும் செயல்முறை பரீட்சையை நடத்தல், ஒத்திவைத்தல், இரத்துச் செய்தல் அல்லது நடத்தப்பட்ட பின் தேர்வு செய்தல்/ தேர்வு செய்யாதிருத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கையை முழுமையாக அல்லது ஒரு பகுதியை நிரப்புவது தொடர்பில் இறுதி முடிவு வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு வசமானது.

14. மாதிரி விண்ணப்பப் படிவம், வெற்றிட ஆவணம், பாட தகைமை ஆவணம் வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் இணையதளத்தில் (psc.nc.gov.lk) பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

**வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி,**
**செயலாளர்,**
**மாகாண அரச சேவை ஆணைக்குழு**
**வட மத்திய மாகாணம்**
**2023.10.27**

# சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை - வெலிசர

## உணவகத்தை நடத்திச் செல்வதற்கு பொருத்தமான சேவை வழங்குநர் ஒருவரை தேர்ந்தெடுத்தல் 2024/2025ஆம் ஆண்டு

சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை 2024/2025ஆம் ஆண்டிற்காக நடத்திச் செல்லல் சார்பாக வெலிசர சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இதற்காக ரூ.2500.00 மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை வெலிசர சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்த பின்னர் 2023.10.27 முதல் 2023.11.16 வரையான நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை அலுவலக நேரங்களில் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம்.
2. குறித்த விலைமனுக்களை 2 பிரதிகளுடன் (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென) தயாரித்து 2023.11.16 மு.ப 10.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் பணிப்பாளர், சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை - வெலிசர என்ற முகவரிக்கு அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து அலுவலக கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
3. விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "உணவகத்தை நடத்திச் செல்வதற்கான விலை மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல் 2024/2025" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
4. 2023.11.16 மு.ப 10.00 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
5. இக் கேள்வி சமர்ப்பிக்கப்படும் போது சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ சேவை அமைச்சின் மற்றும் உணவு சட்டம்/தீர்மானிக்கப்பட்ட சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு கட்டளைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை,**
**வெலிசர.**
**011-2958271 நீடிப்பு 102**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

விலைகோரலுக்கான அழைப்பு

# வ/ப இலங்கை மின்சார(தனியார்) நிறுவனம்

LECO

**கேள்வியின் பெயர்: அலுவலக சுத்திகரிப்பு சேவைகளை வழங்குதல்**
(Janitorial Services)
கேள்வி இல. **NG/ADM/PC/23/253**

வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தின் நீர்கொழும்பு கிளை அலுவலகப் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வகையில் 2024/2026 வருடங்களுக்காக அலுவலக சுத்திகரிப்புச் சேவைகளைப் (Janitorial Services) பெற்றுக்கொள்வதற்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| சேவை இடம் | முகவரி | பணியாளர் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | பெண் | ஆண் |
| கிளை அலுவலகம் - நீர்கொழும்பு | இல. 03, தலாதுவ வீதி, நீர்கொழும்பு | 01 | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் (நீர்கொழும்பு) | இல. 195A, தலாதுவ வீதி, நீர்கொழும்பு | - | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் (சீதுவ) | இல. 63, கொட்டுகொட வீதி, சீதுவ | - | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் (ஜாஎல) | இல. 50, வெலிகம்பிட்டிய, ஜா-எல | - | 02 |

இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் இன்று முதல் 2023-11-08ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையான காலத்தினுள் நீர்கொழும்பு, தலாதுவ, 03ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தின் நிர்வாகப் பிரிவில் செல்லுபடியாகும் விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம் என்பதுடன் அதன்பொருட்டு மீளளிக்கப்படாத 1,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். பரீட்சித்துப் பார்ப்பதற்கு மட்டும் மாதிரி விலைக்கோரல் ஆவணங்கள் www.promis.lk மற்றும் www.leco.lk எனும் இணையதளங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் அவைகள் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு செல்லுபடியாகாது.

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023-11-10ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு பெறுகைக் குழுவிற்கு அனுப்பலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் அல்லது தொலைநகல் மூலம் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்தவுடன் நீர்கொழும்பு கிளை அலுவலகத்தின் பெறுகைக் குழுவினால் 2023-11-10ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் மட்டும் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்,**
**(கிளை அலுவலகம், நீர்கொழும்பு)**
**இல. 02, தலாதுவ வீதி, நீர்கொழும்பு.**
**031-2222349 / 031-2233322 / 031-2225068**

# கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை
## மேல் மாகாண சபை

**இலங்கை, கரதியான, தும்போவில கட்டுப்படுத்தப்பட்ட குப்பை கொட்டும் தளத்தில் விஞ்ஞானரீதியில் நிரூபிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முறை ஒன்றில் அகழ்வு, வள மீட்பு மற்றும் எஞ்சிய/ அகற்றல் மறுத்தல் மூலம் குப்பை கொட்டும் காணியின் மீட்டல்**

# முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP)

இலங்கை, கரதியான, தும்போவில கட்டுப்படுத்தப்பட்ட குப்பை கொட்டும் தளத்தில் விஞ்ஞானரீதியில் நிரூபிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முறை ஒன்றில் அகழ்வு, வள மீட்பு மற்றும் எஞ்சிய/ அகற்றல் மறுத்தல் மூலம் குப்பை கொட்டும் காணியின் மீட்டலுக்காக சேவைகளை வழங்குவதற்கு போதுமான திறன் உள்ள எதிர்பார்ப்புடைய முன்மொழிவாளர்கள்/ விலைமனுதாரர்களிடம் இருந்து பின்வரும் இரு சேவைகளை செயற்படுத்துவதற்காக இலங்கையின் மேல் மாகாண சபை அரசின் கீழ் செயற்படும் சட்டரீதியான சபை ஒன்றான மேல் மாகாண சபையில் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபையின் (WMA-WP) சார்பில் மேல் மாகாண அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கேள்விமனு குழுவின் தலைவரினால் முன்மொழிவுகள்/ விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

01. கீழ் தரப்பட்டுள்ள பணிகளுக்கு தேர்வு செய்யப்பட்ட எதிர்பார்ப்புடைய முன்மொழிவாளர்கள்/ விலைமனுதாரர்கள் மூலம் சேவைகள் வழங்கப்படுதல் வேண்டும்.

| சேவை இல. | சேவையின் பண்பு | கழிவுகளின் வகை மற்றும் பண்பு | எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச செயல்முறை திறன் (மெ.தொ./நாள்) | விலைமனு பிணை உத்தரவாதம் (இ.ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | கரதியான, கட்டுப்படுத்தப்பட்ட குப்பை கொட்டும் தளத்தில் விஞ்ஞானரீதியில் நிரூபிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முறை ஒன்றில் அகழ்வு, வள மீட்பு மற்றும் எஞ்சிய/ அகற்றல் மறுத்தல் மூலம் குப்பை கொட்டும் காணியின் மீட்டல் "A" | வீடுகளின் மாநகர திண்மக் கழிவு (MSW) மற்றும் சந்தை குப்பைகளைக் கொண்ட பிரதானமாக உக்கும் தன்மை உடைய கலப்பு மாநகர திண்மக் கழிவு | 250 | 1,500,000.00 |
| 2 | கரதியான, கட்டுப்படுத்தப்பட்ட குப்பை கொட்டும் தளத்தில் விஞ்ஞானரீதியில் நிரூபிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முறை ஒன்றில் அகழ்வு, வள மீட்பு மற்றும் எஞ்சிய/ அகற்றல் மறுத்தல் மூலம் குப்பை கொட்டும் காணியின் மீட்டல் "B" | பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்ட பிரதானமாக உக்காத தன்மை உடைய கலப்பு மாநகர திண்மக் கழிவு | 250 | 3,000,000.00 |

02. ஒவ்வொரு RFP/ விலைமனு ஆவணத்திற்காகவும் 100,000.00 இலங்கை ரூபாவின் மீளளிக்கப்படாத கட்டணம் ஒன்றை செலுத்தி வேலை நாட்களில் 9.30 மணி தொடக்கம் 15.00 மணி ஆகிய உள்ளூர் நேரத்தில் 2023 ஒக்டோபர் 27 ஆம் திகதி தொடக்கம் 2023 டிசம்பர் 11 ஆம் திகதி வரை இலங்கை, கரதியான, தும்போவில, "மிஹிசரு" வள முகாமைத்துவ நிலையம், WMA-WP, ஆளுநர் (மேல் மாகாணம்) நியமித்த கேள்விமனு குழு தலைவருக்கு நிறுவன முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் எழுத்துமூல கோரிக்கை ஒன்றின் மூலம் RFP/ விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இதனையொத்த சேவைகளை வழங்கிய நிரூபிக்கப்பட்ட அனுபவம் மற்றும் திறன் உடைய உள்ளூர்/ வெளிநாட்டு எதிர்பார்ப்புடைய முன்மொழிவாளர்கள்/ விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் ஒவ்வொரு சேவைக்கான RFP/ விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்கலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.

03. சேவை I மற்றும்/ அல்லது சேவை II இற்கான முத்திரை பொறிக்கப்பட்ட முன்மொழிவு/ விலைமனுவை 2023 டிசம்பர் 12 ஆம் திகதி உள்ளூர் நேரத்தில் 14.00 மணி அல்லது அதற்கு ஆளுநர் (மேல் மாகாணம்) நியமித்த கேள்விமனு குழு தலைவர், WMA-WP, "மிஹிசரு" வள முகாமைத்துவ நிலையம், தும்போவில, கரதியான, இலங்கை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது WMA-WP இல் இதற்காக வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு கைகளால் கொண்டுவந்து சமர்ப்பித்தல் வேண்டும். சேவை I மற்றும்/ அல்லது சேவை II இற்கான முத்திரை பொறிக்கப்பட்ட ஒவ்வொரு முன்மொழிவு/ விலைமனுவுடனும் 2024 ஏப்ரல் 24 ஆம் திகதி வரை (RFP/ விலைமனுவின் இறுதித் திகதியில் இருந்து 132 நாட்கள்) செல்லுபடியான இலங்கை ரூபாவில் (சேவை I மற்றும்/ அல்லது சேவை II இற்கு வெவ்வேறாக) மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு வெவ்வேறான நிபந்தனையற்ற மற்றும் கோரும்போது பெறத்தக்க விலைமனு பிணையைக் கொண்டிருத்தல் வேண்டும். தாமதிக்கும் முன்மொழிவுகள்/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். இறுதி நேரம் முடிவுற்ற பின் இரு சேவைகளுக்குமான முன்மொழிவுகள்/ விலைமனுக்கள் (நிதி விலைமனு தவிர்த்து) உடன் திறக்கப்படும். நேரடியாக பங்கேற்க விரும்பும் முன்மொழிவாளரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் முன்மொழிவுகள்/ விலைமனுக்கள் திறக்கப்படும்.

04. RFP/ விலைமனு ஆவணத்தைக் கொள்வனவு செய்த ஆர்வமுடைய முன்மொழிவாளர்கள்/ விலைமனுதாரர்களுக்காக, கருதியானவில் கட்டுப்படுத்தப்பட்ட குப்பை கொட்டும் தளங்களின் "A" மற்றும் "B" தளத்திற்கான தள விஜயம் ஒன்று 2023 நவம்பர் 13 ஆம் திகதி 9.30 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தள விஜயத்திற்குப் பின் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2023 நவம்பர் 13 ஆம் திகதி 11.00 மணிக்கு ஆரம்பமாகும் வகையில் இலங்கை, கரதியான, தும்போவில, "மிஹிசரு" வள முகாமைத்துவ நிலைய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

05. ஆர்வம் கொண்ட தகுதியடைய முன்மொழிவாளர்கள்/ விலைமனுதாரர்கள் wmawpdirector@gmail.com என்ற மின்னஞ்சல் அல்லது 077-2614294 என்ற கைபேசி வழியாக பாரிய அளவான திட்டங்களின் இணைப்பாளரான WMA-WP தொழில்நுட்ப உதவிப் பணிப்பாளர் திருமதி.சண்முகப்பிரியாவிடம் இருந்து மேலதிக விபரங்களைப் பெறலாம் என்பதோடு 2023 ஒக்டோபர் 27 ஆம் திகதி தொடக்கம் 2023 டிசம்பர் 11 ஆம் திகதி வரை வேலை நாட்களில் உள்ளூர் நேரத்தில் 9.30 மணி தொடக்கம் 15.00 மணி வரை இலங்கை, கரதியான, தும்போவில, "மிஹிசரு" வள முகாமைத்துவ நிலையம், WMA-WP, மேல் மாகாணத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை பணிப்பாளர் அலுவலகத்தில் கட்டணம் இன்றி இரு RFP/ விலைமனு ஆவணங்களையும் பரீட்சிக்க முடியும்.

06. முன்மொழிவுகள்/ விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை கேள்விமனு குழு வசமானது.

**தலைவர்,**
**ஆளுநர் (மேல் மாகாணம்) நியமித்த கேள்விமனு குழு,**
**"மிஹிசரு" வள முகாமைத்துவ நிலையம்,**
**தும்போவில, கரதியான, இலங்கை.**
**தொ. +94 11 3056703, +94 112613151,**
**மின்னஞ்சல்: wmawp.gov@gmail.com**
**2023.10.24**

விலைமனுக்களுக்கான அழைப்பு

# மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் – சபரகமுவ

## சபரகமுவ மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு மருத்துவ, தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் முறைமைகளை வழங்குதல், வீநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்

கீழே விபரிக்கப்பட்டுள்ள உருப்படிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தலுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சுகாதார சேவைகள் திணைக்களத்தின் சார்பில் சபரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார். 2023 நவம்பர் 17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படும்.

| இல. | உருப்படி | எண்ணிக்கை | ஆவணக் கட்டணம் ரூபா | விலைக் கோரல் பிணை முறி பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|
| **Medical Equipment & Systems** | | | | |
| 01 | Diathermy Machine | 01 | 5000.00 (Per Each Item) | 70,000.00 |
| 02 | Anesthetic Machine | 02 | | 200,000.00 |
| 03 | Multi Monitor (Basic) | 20 | | 100,000.00 |
| 04 | Centrifuge (16 bucket) | 03 | | 25,000.00 |
| 05 | ECG Machine (3 Channel) | 20 | | 80,000.00 |
| 06 | Chemical Purification System | 02 | | 130,000.00 |
| 07 | Grossing Station | 02 | | 95,000.00 |
| 08 | Ophthalmic Operating Microscope | 02 | | 380,000.00 |
| **General & Technical Equipment and Systems** | | | | |
| 09 | Fire Extinguishers | 03 Units | 5000.00 (Per Each Item) | 70,000.00 |
| 10 | Water Purification System (RO Unit) | 01 | | 7,500.00 |
| 11 | Counter Chairs | 100 | | 40,000.00 |

1. விலைமனுதாரர் இயைபுடைய இயந்திரங்களின் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநராகவிருத்தல் வேண்டும்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
3. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் இரத்தினபுரி, இல. 75, தர்மபால மாவத்தை, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி: 045- 2222322 / 045-2222277) மற்றும் 2023 நவம்பர் 16ஆம் திகதி அல்லது அதற்கு முன் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

   **பணிப்பாளர்,**
   **மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
   **இல. 75, தர்மபால மாவத்தை,**
   **இரத்தினபுரி.**

4 தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகள்
   அ. 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.
   ஆ. இயைபுடைய இயந்திரங்களை விற்பனை செய்வதில் 2023 ஒக்டோபர் 27ஆம் திகதிக்கு முன்னர் ஆகக் குறைந்தது 03 வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - மேலதிக தகவல்கள் விலைமனு ஆவணத்தில் வழங்கப்படும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023 ஒக்டோபர் 27ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 5000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தியதன் பின் மேற்குறிப்பிடப்பட்ட (03ஆம் பந்தியில்) முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றை தனித்தனியாக சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை சபரகமுவ - மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயரில் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
6. விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட தரப்பினருக்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் மேற்குறிப்பிடப்பட்ட (03ஆம் பந்தியில்) முகவரியிலுள்ள கேட்போர் கூடத்தில் 2023 நவம்பர் 07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.
7. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு நகல்களில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியான விலைமனுக்களை 2023 நவம்பர் 17ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிமம்பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும். ஒவ்வொரு விலைமனுவுடனும் விலைமனு ஆவணத்தின் விபரிக்கப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப் பிணை முறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரலின் தலைப்பு தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
9. மேலே குறிப்பிடப்பட்ட முகவரியானது: தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், இல. 75, தர்மபால மாவத்தை, இரத்தினபுரி.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**இல. 75, தர்மபால மாவத்தை,**
**இரத்தினபுரி.**
**2023-10-27.**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### மேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

### ஆதார வைத்தியசாலை – ஹோமாகம

### சிற்றுண்டிச்சாலையை நவீனமயப்படுத்துவதற்காக விலைமனு கோரல் – 2023

ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலைக் கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் வேலைக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. சிற்றுண்டிச்சாலையை நவீனமயப்படுத்தும் வேலைகள் தொடர்பில் ஆர்வம் காட்டும் தகுதி வாய்ந்தவர்கள் (சிடா பதிவு C9/ C8 மற்றும் C7) விலைமனுக்களுக்கு 2500.00 ரூபா மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணத்தை ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் கணக்காளருக்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு சகிதம் தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2023-10-30ஆம் திகதி முதல் 2023-11-27ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

02. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையை நவீனமயப்படுத்துதல்'' எனக் குறிப்பிட்டு 2023-11-28ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, ஆதார வைத்தியசாலை, ஹோமாகம'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம்.

03. விலைமனுக்களை 02 பிரதிகளில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்தவுடன் அவ்விடத்திலேயே விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

05. அரச நிர்மாண ஒப்பந்தங்களை மீறிய அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படுத்தப்பட்ட நபர்களுக்கு விலைமனுகள் வழங்கப்பட மாட்டாது.

06. குறித்த விலைக்கோரல்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**ஆதார வைத்தியசாலை,**
**ஹோமாகம.**
**தொலைபேசி: 0112855200, 0112098825 தொலைநகல்: 0112857844**

## நவகத்தேகம பிரதேச சபை

### வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் (2024)

2024ஆம் வருடத்தில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்யும் முகமாக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (வியாபாரம் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்)

**பொருட்கள் மற்றும் சேவைகள்.**

01. அலுவலக காகிதாதிகள் (ஹாப்சீட், A4, CR கொப்பிகள், பேனை போன்றவை)
02. அலுவலக மர தளபாடங்கள் மற்றும் உருக்கு தளபாடங்கள் (கதிரை, மேசை, கபோட், அலுமாரி.......)
03. அலுவலக மின் உபகரணம் மற்றும் உதிரிப்பாகங்கள் (கணனி, தொலைநகல், புகைப்படப் பிரதி இயந்திரம், டோனர் போன்றவை)
04. வீதி விளக்கு உபகரணங்கள் (மின்குமிழ்கள், வயர், சுவிட்ச், சன்பொக்ஸ், ஹோல்டர், பைமெடல் போன்றவை)
05. வாகன உதிரிப்பாகங்கள் (டயர், டியூப், பற்றரி போன்றவை)
06. ஹியூம் குழாய், கொங்கிறீட் தூண் மற்றும் சீமெந்து சார்ந்த உற்பத்திகள்.
07. சகல அச்சு வேலைகள் மற்றும் பதாகைகள் அச்சிடல்
08. வாகன திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
09. அலுவலக மின் உபகரணங்களின் திருத்தவேலைகள்
10. அலுவலக கணனிகளின் திருத்தவேலைகள்
11. வீதிப் பராமரிப்புக்கான மற்றும் கட்டிட நிர்மாணத்திற்கு தேவையான பொருட்கள் (கல், மணல், சீமெந்து, கம்பி, செங்கல், நீர்க்குழாய் துணைப்பாகங்கள் மற்றும் நிர்மாணப் பொருட்கள்)
12. காணி அளத்தல்
13. துப்புரவேற்பாட்டு பொருட்கள் (சவர்க்காரம், கைகழுவும் திரவம், ஹார்பிக் போன்றன)
14. ஏனையவை (நாய் கழுத்துப் பட்டி, நுளம்பு வலைகள் மற்றும் மேற்குறிப்பிடப்படாத பொருட்கள்)

**ஒப்பந்தக்காரர்கள்**

500,000/- ரூபாவிற்குக் குறைந்த வேலைகள்

500,000/- ரூபாவிற்கு மேற்பட்ட வேலைகள்

ஒப்பந்தக்கார்களாக பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் நிறுவனங்கள்/ தனிநபர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும் என்பதுடன் அரச திணைக்களங்கள்/ நியதிகள் சபைகள்/ உள்ளூராட்சி நிறுவனங்களில் குறித்த பெறுமதிகளுக்கு சமமான ஒப்பந்தங்கள்/ கைத்தொழில்கள்/ வேலைகளை திருப்திகரமாக பூர்த்தி செய்துள்ளமைக்கான எழுத்துமூல சான்றுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வழங்குநர்களாக பதிவு செய்வதற்காக ஒவ்வொரு உருப்படிக்கும் ரூபா 1,500/- பதிவுக் கட்டணத்தை செலுத்த வேண்டியதுடன் ஒப்பந்தக்காரர்கள்,

01. 500,000/- ரூபாவிற்குக் குறைந்த வேலைகளுக்காக 2,000/- ரூபாவும்
02. 500,000/- ரூபாவிற்கு மேற்பட்ட வேலைகளுக்காக 4,000/- ரூபாவும் பதிவுக் கட்டணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

மேற்கூறிய பதிவுக் கட்டணங்களை ரொக்கப் பணமாகச் செலுத்துவதானால் அலுவலக நேரத்தினுள் இந்த அலுவலகத்தின் காசாளருக்குச் செலுத்தலாம். அல்லாவிடில் உங்களால் தயாரிக்கப்பட்ட மாதிரிக்கு அமைவாக பதிவுசெய்து கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் மற்றும் குறித்த ஆவணங்கள் மற்றும் பதிவுக் கட்டணத்தை "தலைவர், நவகத்தேகம பிரதேச சபை" பெயரில் குறுக்குக் கோடிடப்பட்ட காசோலை/ காசுக் கட்டளையை "செயலாளர், நவகத்தேகம பிரதேச சபை" என்ற முகவரிக்கு 2023.12.22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**எம்.டப்.எல். சோமசந்திர,**
**செயலாளர்,**
**நவகத்தேகம பிரதேச சபை.**
**தொ.பே. இல. 037-2052976**




## பெறுகை அறிவித்தல்

### வளிமண்டலவியல் திணைக்களம்

2023/24 ஆம் ஆண்டிற்காக எமது திணைக்களத்திற்கு கீழ்க்காணும் சேவைகளை வழங்கும் முகமாக 2023 ஒக்டோபர் 27 மு.ப 9.00 முதல் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**07/2023 - ஒரு வருடத்திற்கான பாதுகாப்பு சேவையை வழங்குதல்**

**08/2023 - ஒரு வருடத்திற்கான சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளை வழங்குதல்**

பெறுகை ஆவணங்களை 2023 ஒக்டோபர் 27 மு.ப 9.00 முதல் 2023 நவம்பர் 20 பி.ப 2.00 வரை மீளளிக்கப்படாத ரூ.10,000.00 கட்டணத்தை செலுத்தி வளிமண்டலவியல் திணைக்களத்தின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

2023 நவம்பர் 20 பி.ப 2.00 இற்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கிடைக்கப்பெற்றுள்ள கேள்விகள் திறக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்**
**வளிமண்டலவியல் திணைக்களம்**
**பௌத்தலோக்க மாவத்த,**
**கொழும்பு - 07**
**2023.10.24**

## ஊவா மாகாண சபை

### ஊவா மாகாண விவசாய, நீர்ப்பாசன, விலங்கு உற்பத்தி மற்றும் நன்னீர் கடற்றொழில் விடயங்கள் அமைச்சு

### 2024 ஆண்டிற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்

ஊவா மாகாண விவசாய அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள ஊவா மாகாண விவசாயத் திணைக்களம், ஊவா மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், ஊவா மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் உட்பட பிரதேச நிறுவனங்கள் 09 இற்காக 2024ம் ஆண்டில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் முகமாக வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கு தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதிவு செய்வதற்காக குறித்த தகவல்களை **agrimin.up.gov.lk** இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை தொ.பே.இல.055-2232018 மூலம் இவ் அமைச்சின் கணக்காளரை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**(ஜே.எம்.யூ.கே. ஜயசேக்கர)**
**செயலாளர்.**

**ஊவா மாகாண விவசாயம்,**
**நீர்ப்பாசன,விலங்கு உற்பத்தி**
**மற்றும் நன்னீர் கடற்றொழில்**
**விடயங்கள் அமைச்சு,**
**ரத்வத்த மாவத்த, பதுளை.**
**2023.10.27ம் திகதி**




## புதுப்பிக்கப்பட்ட அறிவித்தல்

### இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் மேல் நீதிமன்றத்தில்

### இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் வணிக மற்றும் ஆதன நீதிமன்றங்கள்

### கடலாட்சி நீதிமன்றம் (KBD)

**உரிமைக்கோரிக்கை இல. AD-2021-000165**

**2021 மே மாதம் 20ஆம் திகதியிலும் மற்றும் அதன் பின்னரும் இலங்கையின் கொழும்புக்கு அப்பால் எம்/வீ "எக்ஸ்ப்ரஸ் பர்ள்" (M/V"X-PRESS PEARL") கப்பல் மூலம் ஏற்பட்ட பாதிப்பு**

## அறிவித்தல்

2021 மே மாதம் 20ஆம் திகதியிலும் மற்றும் அதன் பின்னரும் இலங்கையின் கொழும்புக்கு அப்பால் எம்/வீ "எக்ஸ்ப்ரஸ் பர்ள்" கப்பல் மூலம் ஏற்பட்ட பாதிப்பின் விளைவாக ஏற்பட்ட ஏதேனும் இழப்பு, சேதம் அல்லது எவையேனும் உரிமைகளின் மீறல் காரணமாக அல்லது அத்தகைய பாதிப்பின் விளைவிலிருந்து அல்லது அத்தகைய விளைவினால் உரிமை கோருகின்ற மற்றும்/அல்லது உரிமை கோருவதற்கு தகைமையுடைய சகல நபர்களுக்கும் இத்தால் இந்த **அறிவித்தல்** விடுக்கப்படுகின்றது.

1995ஆம் ஆண்டின் ஐக்கிய இராச்சியத்தின் வணிகக் கப்பற்றுறைச் சட்டத்தின் 185ஆம் பிரிவு மற்றும் அதன் அட்டவணை 7, விசேட பெறுகை உரிமைகள் 19,159,937 என்பவற்றிற்கு சட்டமாக்கப்பட்டவாறு, 2012ஆம் ஆண்டின் உடன்படிக்கையினால் ("உடன்படிக்கை") ("Convention") திருத்தப்பட்டவாறு 1976ஆம் ஆண்டின் கப்பற்றுறை உரிமைக்கோரிக்கைகளுக்காக பொறுப்பு வரையறை மீதான உடன்படிக்கையின் உறுப்புரை 2 இற்குள் வருகின்ற எவையேனும் உரிமைக்கோரிக்கைகள் தொடர்பில் உரிமைக்கோரிக்கையாளர்களின் பொறுப்பை வரையறுக்கின்ற சீ கொன்சோடியம் பிரைவேட் லிமிடெட் (Sea Consortium Pte. Ltd.) (எக்ஸ்ப்ரஸ் பீடர்ஸ் என வர்த்தகம் செய்கின்றது) (Trading as X-Press Feeders), எக்ஸ்ப்ரஸ் கன்டெய்னர் லைன் (யூகே) லிமிடெட் (X-Press Container Line (UK) Ltd.), எக்ஸ்ப்ரஸ் கன்டெய்னர் லைன் (சிங்கப்பூர்) பிரைவேட் லிமிடெட் (X-Press Container Line (Singapore) Pte. Ltd.), ஏஓஸ் ரோ பிரைவேட் லிமிடெட் (Eos Ro Pte. Ltd.), கில்லினி சிப்பிங் பிரைவேட் லிமிடெட் (Killiney Shipping Pte.Ltd.), மற்றும் ஈஸ்டவே சிப் மெனேஜ்மென்ட் பிரைவேட் லிமிடெட் (Eastaway Ship Management Pte. Ltd) ("உரிமைக்கோரிக்கையாளர்கள்") ("the Claimants") ஆகிய நிறுவனங்களின் விண்ணப்பம் தொடர்பில் உரிமைக்கோரிக்கை இல. AD-2021-000165 இல் ("வரையறை நடவடிக்கை") ("the Limitation Action") இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் மேல் நீதிமன்றத்தில் 2023 ஜூலை 03ஆம் திகதி அன்று பொது வரையறை தீர்வை ("தீர்வை") ("the Decree") ஒன்று பிறப்பிக்கப்பட்டது.

மேலே சொல்லப்பட்ட தீர்வையை புறத்தொதுக்கி வைப்பதற்கான ஏதேனும் விண்ணப்பம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தால், அதனை 2024 ஜனவரி 27ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

2022 பெப்ரவரி 22ஆம் திகதியிடப்பட்ட லண்டன் ஸ்டீம்-ஷிப் ஓனர்ஸ் மியூச்சுவல் இன்சூரன்ஸ் அசோசியேஷன் லிமிடெட் (London Steam-Ship Owners' Mutual Insurance Association) நிறுவனத்திடம் இருந்து பொறுப்பேற்றல் கடிதம் மூலம் வட்டி உட்பட 19,990,325.57 பிரித்தாணியப் பவுண்கள் தொகையை இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் மேல் நீதிமன்றத்தில் (High Court of Justice of England and Wales) செலுத்துவதன் மூலம் உரிமைகோரிக்கையாளர்கள் வரையறை நிதியம் ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

உடன்படிக்கையின் பிரிவு 2 இற்குள் வரும் எவையேனும் வகை உரிமைகோரிக்கைகள் 2024 ஜனவரி 27ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வரையறை நடவடிக்கையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

சகல விண்ணப்பங்களும் மற்றும் உரிமைகோரிக்கைகளும், 7 ரோல்ஸ் கட்டடம், /பெட்டர் லேன், லண்டன் EC4A 1NL, ஐக்கிய இராச்சியம் என்ற முகவரியில் உள்ள கடலாட்சி மற்றும் வணிகப் பதிவகம் மற்றும் பட்டியலிடல் அலுவலகங்களுக்கு (Admiralty and Commercial Registry and Listing Offices, 7 Rolls Building. Fetter Lanc. London EC4A INL, United Kingdom) சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு அவற்றின் பிரதிகள் கீழ்க் குறிப்பிடப்படுகின்ற சட்டத்தரணிகளுக்கு அல்லது நிறுவனங்களுக்கு அனுப்பப்பட வேண்டும்:

1. உரிமைகோரிக்கையாளர்களின் சட்டத்தரணிகள்: கெம்ப்பெல் ஜான்ஸ்டன் கிளார்க், 59 மென்செல் வீதி, லண்டன், E18AN, ஐக்கிய இராச்சியம். தொலைபேசி: 0044 (0)207 855 9669 குறிப்பு இல. AHJ/MBB/DA/S0464/001.
2. பெங்கல் டைகர் லைன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கான சட்டத்தரணிகள்: மேஸ் பிரவுன் சட்டத்தரணிகள், 66 ரோயல் மின்ட் வீதி, லண்டன், E18LG, ஐக்கிய இராச்சியம் தொலைபேசி: 0044(0)207 264 0600.
3. மேர்ஸ்க் ஏ/எஸ் நிறுவனத்திற்கான சட்டத்தரணிகள்: ஸ்டீபன்சன் ஹார்வூட் LLP, I பின்ஸ்பெரி சேர்கஸ், லன்டன், EC2M 7SH, ஐக்கிய இராச்சியம்: தொலைபேசி: 0044(0)207 329 4422.
4. எம்எஸ்சி மெடிடெரேனியன் சிப்பிங் கம்பனி எஸ்.ஏ. நிறுவனத்திற்கான சட்டத்தரணிகள்: மில்ஸ் என்ட் கோ. சொலிசிட்டர்ஸ் லிமிடெட், போர்ட்லேன்ட் ஹவுஸ், 54 நியூ பிரிட்ஜ் வீதி மேற்கு, நியூகாஸல்-அபொன்-டைன் NE1 8AP, ஐக்கிய இராச்சியம் தொலைபேசி 0044(0)191 233 2220.
5. வேரியஸ் கார்கோ இன்டரஸ்ட்ஸ் நிறுவனத்திற்கான சட்டத்தரணிகள்: க்ளைட் என்ட் கோ எல்எல்பீ, 1 ஸ்டோக் வீதி, கில்ட்ஃபோர்ட், சர்ரே, GU14HW, ஐக்கிய இராச்சியம்: தொலைபேசி 0044(0)207 876 500.
6. வேரியஸ் கார்கோ இன்டரஸ்ட்ஸ் நிறுவனத்திற்கான சட்டத்தரணிகள்: ரூஸ்+பார்ட்னர்ஸ், 40 கிரேஸ்சேர்ச் ஸ்ட்ரீட், லண்டன், EC3V OBT, ஐக்கிய இராச்சியம் தொலைபேசி 0044(0)203 440 3525.
7. டியான்ஜின் (FTZ) ஜூன்சன் இம்போர்ட் என்ட் எக்ஸ்போர்ட் கோ., அறை 1818, 18வது மாடி, சிண்டா பிளாசா, இல188 ஜீஃபாங்பேய் வீதி, ஹெப்பிங் மாவட்டம், டியான்ஜின், மக்கள் குடியரசு சீனா: தொலைபேசி 0086 2283859282.

(1) The Claimants' solicitors: Campbell Johnston Clark, 59 Mansell Street, London, E1 SAN, United Kingdom; tel.: +44 (0)207 855 9669; ref. AHJ/MBB/DA/S0464/001.

(2) Solicitors for Bengal Tiger Line Pte Ltd: Mays Brown Solicitors, 66 Royal Mint Street, London, E1 8LG, United Kingdom; tel.: +44(0)207 264 0600.

(3) Solicitors for Maersk A/S: Stephenson Harwood LLP, I Finsbury Circus, London, EC2M 7SH, United Kingdom; tel. +44(0)207 329 4422.

(4) Solicitors for MSC Mediterranean Shipping Company S.A.: Mills & Co. Solicitors Limited, Portland House, 54 New Bridge Street West, Newcastle-upon-Tyne NET SAP, United Kingdom; tel. +44(0)191 233 2220.

(5) Solicitors for various cargo interests: Clyde & Co LLP, I Stoke Road, Guildford, Surrey, GUI 4HW, United Kingdom; tel. +44(0)207876 500.

(6) Solicitors for various cargo interests: Roose+Partners, 40 Gracechurch Street, London, EC3V OBT, United Kingdom; tel. +44(0)203440 3525.

(7) Tianjin (FTZ) Junesun Import & Export Co., Room 1818, 18th Floor, Xinda Plaza, No.188 Jiefangbei Road, Heping District, Tianjin, People's Republic of China; tel. +86 22 83859282.

# வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

LECO

# மின் விநியோகத் தடை

பின்வரும் இடங்களில் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் அத்தியாவசிய நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் நிமித்தம் மின்சார விநியோகம் தடைப்படுமென வாடிக்கையாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். பொதுவான மின்சாரத் தடைக்கான நேரம் மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 5.00 மணி வரையாகும். எவ்வாறாயினும் ஒவ்வொரு பகுதிகளுக்கான நேரங்கள் வெவ்வேறாகக் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

## 2023 நவம்பர் மாதத்திற்கான மின்சாரத் தடை அட்டவணை

### திகதிகள் மற்றும் மின் கம்பியிணைப்புள்ள இடங்கள்

#### காலி

1 **நவம்பர் 11**

வக்வெல்ல வீதி, புன்கசார மாவத்தை, ஹெவ்லொக் வீதி, சைனா கார்டன், விளையாட்டு மைதான வீதி, காமினி மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

2 **நவம்பர் 11**

காலி வீதியில் லைட் ஹவுஸ் ஹோட்டலிலிருந்து புகையிரத நிலையம் வரை, கலுவெல்ல, மல்வத்தை வீதி, ஜெயில் வீதி, டெம்பிளஸ் வீதி, மஹமோதர, ரிச்மன்ட் ஹில் வீதி (பகுதி), அபேசுந்தர வீதி, மஹமோதரவத்த, கந்தேவத்த வீதி, புத்தசிங்க வீதி, ஓசனாகொட (பகுதி), சியம்பலகஹவத்த மற்றும் கிளை வீதிகள்

3 **நவம்பர் 16 மு.ப. 9.00 முதல் மு.ப. 11.00 வரை**

தன்கெதர வீதி, ஹிரிம்புர வீதி, ஜிப்ரியா மாவத்தை, சரணங்கர வீதி, ஸ்டீல் வீதி, செனரத்கடே சந்தி, கிரிப்ஸ் வீதி, மல்வத்த டெம்பல் வீதி, சமகிவத்த, பெலிகஹ சந்தி, ஜயவர்தனாராம வீதி, டிக்சன் வீதி (பகுதி), மடபாதல வீதி, டொனால்ட் ஜேன்ஸ் மற்றும் கிளை வீதிகள்

4 **நவம்பர் 16, 29 - 16ஆம் திகதி மு.ப. 11.00 முதல் பி.ப. 5.00 வரை, 29ஆம் திகதி மு.ப. 8.30 முதல் பி.ப. 5.00 வரை**

ஹிரிம்புர வீதி, மொரிஸ் வீதி, எச்.கே. எட்மன்ட் மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

5 **நவம்பர் 23 மு.ப. 9.00 முதல் மு.ப. 11.00 வரை**

மாத்தறை வீதி (பகுதி), மெத்தவத்த, லொவின்கஹவத்த, முல்லவத்த, சந்தைக் கட்டிடத்தொகுதி, கட்டுகொட 2ஆம் ஒழுங்கை, தெவட்ட, பள்ளிவாசல் வீதி, கட்டுகொடவத்த, சுதர்மாராம வீதி, அக்குரஸ்ஸ வீதி (பகுதி), லூணுவிலவத்த, விஜிதாராம வீதி மற்றும் கிளை வீதிகள்

6 **நவம்பர் 23 மு.ப. 11.00 முதல் பி.ப. 5.00 வரை**

மாத்தறை வீதி (பகுதி), மெத்தவத்த, லொவின்கஹவத்த மற்றும் கிளை வீதிகள்

#### ஹிக்கடுவ

1 **நவம்பர் 08 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

காலி வீதியில் தொட்டகமுவ சந்தியிலிருந்து பஹியன் புத்தர் சிலை வரை, கலுபே, அலுத்வெல வீதி, நவகன்ன கொலனி வரை, சீனிகம டெம்பள் வீதி, மலவன்ன குறுக்கு வீதி, கலுபே வீதி, முனுகொட வீதி மற்றும் கிளை வீதிகள்

#### அம்பலாங்கொட

1 **நவம்பர் 07 ந.ப. 12.00 முதல் பி.ப. 1.00 வரை**

காலி வீதி (பகுதி), ஹிரேவத்த, ஊராவத்த, கங்காராம வீதி, ஆனந்த ராஜகருணா மாவத்தை, நெக்ரோதாராம மாவத்தை, வெல்லம்பட, மாதம்பை, பிரதான வீதி, பெரட் சந்தி மற்றும் கிளை வீதிகள்

2 **நவம்பர் 07 ந.ப. 12.00 முதல் பி.ப. 1.00 வரை**

காலி வீதி மாதம்பை சந்தியிலிருந்து கொடகம தெல்வத்த சந்தி வரை, செனரத் ராஜகருணா மாவத்தை, கஹவ, பட்டபொல வீதி, பாசல் மாவத்தை, கல்துவ வீதி, வேரகொட, கல்துவ, மீட்டியாகொட வீதி, வென்னமுல்ல, கொடகம வீதி மற்றும் கிளை வீதிகள்

#### களுத்துறை

1 **நவம்பர் 14 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

எட்டவில வீதி, அரலிய உயன, இசுறு உயன, கெமுனு மாவத்தை, தூவ கோவில் வீதி, அல்விஸ் பிளேஸ், ஹில் ஸ்ட்ரீட், மரிக்கார் வீதி, சோனக வீதி, விக்கிரமசிங்க பிளேஸ், மாபூர் கிரசன்ட், செனவிரத்ன பிளேஸ் மற்றும் கிளை வீதிகள்

2 **நவம்பர் 16 பி.ப. 3.00 முதல் பி.ப. 5.00 வரை**

பலத்தொட்ட வீதியில் மணிக்கூண்டுக் கோபுரம் முதல் பலத்தொட்ட சந்தி வரை, கங்கபட வீதி, புதிய வீதி, லிஹினியாகந்த வீதி, PTS வீதி (பகுதி), ஆசிரி உயன, லின்டன்வத்த, மில்லகஹவத்த, பஸ்வத்த மற்றும் கிளை வீதிகள்

3 **நவம்பர் 16 பி.ப. 3.00 முதல் பி.ப. 5.00 வரை**

காலி வீதியில் சுமங்கள வீதி சந்தியிலிருந்து மணிக்கூண்டு கோபுரம் வரை, சுமங்கள வீதி (பகுதி), தொட்டுபொல வீதி (பகுதி), பழைய வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

#### பயாகல

1 **நவம்பர் 03 ந.ப. 12.00 முதல் பி.ப. 1.00 வரை**

நாகஹதுவ வீதி, பலயன்கொட, லுலேலமுல்ல, இசுறு உயன, சமகி மாவத்தை, கச்சகொட, கபடாகொட, ஹிரிகலகொடெல்ல, கஜுதுவ, 45 ஏக்கர், ஹொரகஸ்கெலே மற்றும் கிளை வீதிகள்

2 **நவம்பர் 08 பி.ப. 2.00 முதல் பி.ப. 5.00 வரை**

ராகலவெல, தேவாலகந்த, போம்பிரியகஹலந்த, பஸ்தியன் மாவத்தை, ஹல்கந்தவில, ஜீட் பியகம, பொட்டல்தெனிய, கந்தகஹவில, மொஹந்திரம்வத்த, பண்டாரநாயக்க மாவத்தை, மாரகஸ்வில, மொனோக்கோகம, லெவின்வத்த மற்றும் கிளை வீதிகள்

3 **நவம்பர் 09 ந.ப. 12.00 முதல் பி.ப. 1.00 வரை**

கட்டுகுருந்த சந்தி, நாகொட வீதி (பகுதி), காலி வீதி (பகுதி), சென். செபஸ்தியன் வீதி, கலமுல்ல (பகுதி), சனச மாவத்தை மற்றும் கிளை வீதிகள்

4 **நவம்பர் 09 ந.ப. 12.00 முதல் பி.ப. 1.00 வரை**

பலதொட்ட வீதியில் நாகொட சந்தியிலிருந்து கட்டுகுருந்த சந்தி வரை, நாகொட வீதி, 1ம், 2ம், 3ம் மற்றும் 4ம் ஒழுங்கைகள் குருந்துவத்த, அரலிய வீதி, ஹீனட்டியகல வீதி, செத்சிறிபுர, சோபித்தாராம வீதி, எட்டவில வீதி (பகுதி), மயூரா பிளேஸ், டவுண் வூட் மற்றும் கிளை வீதிகள்

#### அலுத்கம

1 **நவம்பர் 20 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

காலி விதியிலிருந்து கலுவாமோதர பாலம் வரை, குட்செட் வீதி, பூர்வராமா வீதி, சீலாநந்த மாவத்த, சிரமதான மாவத்த, சைமன் சில்வா மாவத்த மற்றும் கிளை வீதிகள்.

